3 - 1915

[illegible]

V4,2Cb2
N10
99110

C. S. [illegible]DDY

[illegible]

THE CHRISTIAN LITERATURE SOCIETY
FOR INDIA
LONDON, MADRAS AND COLOMBO

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

९९110



ஜப்பான் தேசத்துச் சக்கரவர்த்தி.

# ஜப்பானும் இந்தியாவும்

இரண்டிற்குமுள்ள

## தாரதம்மிய விளக்கம்

இதை இயற்றியவர்

G. S. EDDY

THE CHRISTIAN LITERATURE SOCIETY
LONDON, MADRAS AND COLOMBO
1910

விலை, அணா 4

Y4·0621 N10

# முகவுரை.

இந்நூல் எழுதிய முக்கிய நோக்கம் ஜப்பான் தேசத்தையும் அதின் ஜனங்களையும் இந்தியர்களுக்கு எடுத்துரைப்பதும், இப்பொழுது ஜப்பானிடமிருந்து இந்தியர் கற்றுக்கொள்ளக்கூடிய படிப்பினைகளை அவர்கள் கண்முன் வைப்பதுமே.

இதிற் சொல்லியிருப்பன பெரும்பாலும் ஜப்பானைப்பற்றி எழுதியுள்ள பல நூல்களினின்று எடுத்தெழுதியவை.

1907-ம் ௵ டோக்கியோ நகரத்திற் கூடிய சர்வதேச மாணவர் கிறிஸ்தவ சங்கக் கூட்டத்துக்குப் போனதினாலே ஜப்பானை நேரிலே காணவும், இதிற் கூறியுள்ள பல காரியங்களை நேரிலே அறிந்து கொள்ளவும் சமயம் கிடைத்தது.

# பொருள் அட்டவணை.


| | | பக்கம். |
|---|---|---|
| I. | ஜப்பான் தேசம் | 3 |
| II. | ஜப்பான் தேச சரித்திரம் | 11 |
| III. | ஜப்பான் தேசத்தார் பழக்க வழக்கங்கள் | 27 |
| IV. | அரசாட்சி, கல்வி, வர்த்தகம் | 53 |
| V. | ஜப்பானியரின் மதங்கள் | 70 |
| VI. | ஜப்பானியரின் மதங்கள்—(முன் தொடர்ச்சி.) | 85 |
| VII. | ஒரு ஜப்பானிய தேசாபிமானி | 101 |
| VIII. | ஜப்பான் இந்தியாவுக்குச் சொல்லும் செய்தி | 112 |

REGISTRAR OF BOOKS
REGISTERED
11 JUL 1910
MADRAS.




ஜப்பான் தேசப் படம்.

I

# ஜப்பான் தேசம்

சூரியோதயம் என்னும் பொருள்படும் நிப்போன் என்பது ஜப்பான் தேசத்தார் தங்கள் தேசத்துக்கு இட்டிருக்கும் பெயர். இப்பெயர் ஜிப்பேன் என்னும் சீனபதத்தடியாய்ப் பிறந்த பெயர். இதுபற்றி இத்தேசம் சூரியோதய ராஜ்யம் என்று அடிக்கடி அழைக்கப்படும். ஜப்பான் தேசம் ஆசியாவின் கீழ்க்கரையிலுள்ள பல தீவுகளடங்கிய ராஜ்யம். இதன் நீளம் 1,500 மைல். அகலம் 100 முதல் 200 மைல். இந்தியாவின் நீளம் அகலம் 1,900 மைல்.

இத்தேசத்தின் பரப்பு 162,000 சதுரமைல்; அதாவது 1,766,597 சதுரமைலுள்ள இந்தியாவின் பரப்பில் 10-ல் ஒரு பாகத்துக்குச் சற்றுக் குறைந்தது. இவ்வாறு ஜப்பான் மகா பிரித்தானியாவையும் சென்னை ராஜதானியையும் பார்க்கிலும் சற்றுப் பெரியது. 1903-ம் வருஷத்துக் குடிமதிப்பின்படி அதன் ஜனத்தொகை 46,732,138; ஆயினும் தற்சமயம் அங்கு வசிப்போரின் தொகை 5 கோடிக்குமேலிருக்கும். முழு இந்தியாவிலும் சதுரமைலுக்குச் சராசரி 167 பேரும் வங்காளத்தில் சதுரமைலுக்கு 413 பேரும் வசிக்க, ஜப்பானில் சதுரமைலுக்கு 290 பேர் இருக்கிறார்கள்.

முன்னொரு காலத்தில் ஜப்பான் தேசம் ஆசியாக்கண்டத்தின் பெரும் பூபாகத்தோடு சேர்ந்திருந்தது. ஆயினும் இப்பொழுது அதனின்றும் பிரிந்த நாலு பெருந்தீவுகளும் ஏறக்குறைய நாலாயிரம் சிறு தீவுகளும் சேர்ந்த ஓர் தீபகணமாயிற்று. எரிமலைகளும் பூகம்பங்களுமே இத்தீபகணங்களுக்கு மூலகாரணங்கள். இவற்றின் காரணமாகவே இத்தீவு

கள் சமுத்திரத்தினின்று வெளிப்பட்டன. இதில் 200 எரிமலைகளுள்ள மூன்று மலைத்தொடர்களுண்டு. அவற்றில் ஏறக்குறைய 50 மலைகள் இன்னும் புகைந்துகொண்டிருக்கின்றன. தினசரி சுமார் மூன்று சிறிய பூமியதிர்ச்சிகளும் வருஷத்திற்கு 1,000 அதிர்ச்சிகளுக்கு அதிகமாகவும் உண்டாகும். ஆனால் பூமியின் அசைவுகாட்டும் யந்திரக்கருவியின் மூலமாகப் பரிசோதிக்கும்போது நமது இரத்தாசயம் எத்தனை தரம் அடிக்கிறதோ அத்தனை சிறு பூமியதிர்ச்சிகளுண்டாவதாகத் தெரியவருகிறது. இரண்டு வருஷத்துக் கொருமுறை ஓர் பலத்த அதிர்ச்சியும் இருபது வருஷத்திற் கொருமுறை உயிர்ச்சேதமும் பொருள் நாசமும் வருவிக்கும் மோசமான பூமி அதிர்ச்சியும் உண்டாகும். சமயாசமயங்களில் கடல் கொந்தளித்து ஆயிரக்கணக்கான ஜனங்களை நாசமாக்கிப் பெருங்கிராமங்களை அழித்துவிடும். நமது இந்தியா தேசத்தில் இல்லாத மூன்று பெரும் மோசங்கள் ஜப்பானில் உண்டு. அவையாவன:—எரிமலை, பூகம்பம், கடற்கொந்தளிப்பு. இக்கரைக்கு அக்கரை பச்சை என்றவாறு இத்தீவைப் பரதீசு என்று புகழ்வாருமுண்டு. ஆயினும், அதைப் பயங்கரமான பாழ்நிலம் எனப் பழிப்போருமுண்டு. இவ்விரண்டும் உண்மையல்ல.

ஜப்பான் தேசத்தில் நெடுங்காலம் வசித்த டி பாரஸ்ற்று (J. H. De Forest) சாஸ்திரியார் அத்தேசத்தைக் குறித்துப் பின்வருமாறு எழுதுகிறார்:—

"பூகற்ப (Geology) சாஸ்திரப்படி அமெரிக்காவிலுள்ள ராக்கி மலைத்தொடர்ச்சி உண்டான அதே சமயத்தில் பசிபிக் மகா சமுத்திரத்தினின்று தோன்றிய மலைத்தொடர்ச்சியே இத்தீவின் தொடர் ஆயிற்று. ஜப்பான் தீவுகள் சமுத்திரத்தினின்று, இன்னும் ஆயிரம் அடி உயரம் வெளி கிளம்புமாயின் அவை இனித் தனித்தீவுகளாயிராமல் ஆசியாக் கண்டத்தோ டொன்றாய்ச் சேர்ந்துபோகும். ஜப்பான் இன்னும் சமுத்திரத்தினின்று எழும்பிக்கொண்டே வருவதால் இத்தீபகணம் பூரணமாய் உருவாகிவிட்டதென்று சொல்ல முடியாது. அவை இன்னும் வளர்ந்துகொண்டே இருக்கின்



றன. திருஷ்டாந்தமாக, டோக்கியோ என்னும் நகரத்தைச் சூழ்ந்த செழிப்பான பெருஞ் சமநிலம் சில நூற்றாண்டுகளுக்குமுன் ஒரு குடாக்கடலாயிருந்தது. அத்தேசத்தின் இரண்டாம் பெரிய நகரமாகிய ஒசாக்கா 400 வருஷங்களுக்குமுன் அழகான குடாக்கடலின் ஓர் பாகமாகவிருந்தது. சமயாசமயங்களில் வெகு பயங்கரமான பூமிஅதிர்ச்சிகள் உண்டாகும். சில ஆண்டுகளுக்குமுன் ஒரு மணிநேரத்துக்குள்ளாகப் பாண்டாய் மலை ஆயிரம் அடிக்கு மேலாக வெடித்து பக்கத்துக் கிராமத்தில் வசித்த குடிகளில் 460 பேரை அழித்துவிட்டது. உருகிய வஸ்துக்கள் மலைக்கிடையே உள்ள பள்ளத்தாக்கை நிரப்பி, ஓர் பெரிய நீர்நிலை உண்டாக்கிற்று. இதனால் சமுத்திர மட்டத்திற்குமேல் 4,000 அடி உயர்ந்த ஓர் சிறு அழகிய ஏரி உண்டாயிற்று. டோக்கியோ பட்டணத்துக்குத் தெற்கே டோரிஷிமா என்ற சிறிய தீவு கடலுள் அமிழ்ந்திருந்த மலைத்தொடரின் சிகரத்தாலானது. சில மாதங்களுக்கு முன்னே அச்சிகரம் வெடித்ததனால் அத்தீவு வெடிக்க அதின் குடிகள் யாவரும் மடிந்துபோனார்கள். இவ்வெரிமலைகளால் உண்டாகும் கஷ்ட நஷ்டங்களைக் குறித்து எழுதப் பெருகும். ஜப்பானியர் புறத்தேசத்தார் சம்பந்தமின்றி தன்னந்தனியே வசித்த நாட்களில் கடல் கொந்தளிக்க, பெரும் அலை எழும்பி, தென்கரையில் வசித்தவர்களில் 100,000 பேருக்கு மேலானவர்களை வாரிக்கொண்டு போயிற்று."

ஜப்பான் தேசம் சிறந்த காட்சிகளுள்ள சிங்கார நாடு. அத்தீவுகளின் மத்தியில் ஒரு பெரும் மலைத்தொடர்ச்சி செல்லுகின்றது. இதனால் இத்தேசத்தில் அழகிய மலைகளும் பசும் பள்ளத்தாக்குகளும், சிங்காரக் குன்றுகளும் கண்ணுக்கினிய பள்ளங்களும் அழகிய சிற்றாறுகளும் செழித்த சமநிலங்களும் மிகுந்திருக்கின்றன. இந்தியாவிலிருப்பதுபோல் சமபூமிகள் ஜப்பான் தேசத்தில் இல்லை. எங்கே பார்த்தாலும் மலைகள்தான். இம்மலைகளுக்கெல்லாம் உயர்ந்ததான மலை அரசு என சொல்லத்தகும் பியுஜியாமா (Fujiyama) என்ற சிகரம் உறைபனி மூடப் பொலிவுற்று விளங்கும். அதன் உயரம் 12,370 அடி. அதை 13 மாகாணங்களிலிருந்தும்

பார்க்கலாம். இம்மலையை ஜப்பானியருடைய விக்கிரகம் என்னலாம். எண்ணிறந்த ஜப்பானிய யாத்திரிகர் இதைத் தரிசிக்கச் செல்வார்கள். இதுவே அவர்கள் இருதயத்தின் ஓரே ஆசையும், அவர்கள் சித்திரங்களிலும் கல்வேலைகளிலும் இலங்கும் சிறந்த பொருளுமாம்.

இலங்கையிலிருப்பதுபோல் ஜப்பான் தேசமெங்கும் மலைச்சாரல்களிலும் பள்ளத்தாக்குகளிலும் நெல்வயல்கள் நிறைந்திருக்கும். இந்தியாவில் மூன்றில் ஒருபங்கு விவசாயத்துக்கேற்றதாயிருக்க, மலைகள் மிகுதிப்பற்றி, ஜப்பான் தேசத்தில் பயிர்த்தொழிலுக்கேற்ற நிலம் ஆறில் ஒருபங்கு மாத்திரம். / இரோப்பாவில் பயிரிடப்படும் பாகம் 100-க்கு 37. ஜப்பானில் 100-க்கு 15. தற்சமயம் இத்தேசத்தின் ஜனத்தொகை 5 கோடி. இவர்கள் வருஷத்துக்கு 5 லட்சமாகப் பெருகிவருகிறார்கள். இவ்வாறு பெருகிவருவதால், போஜனக் குறைவினிமித்தம் ஜப்பானியரி லநேகர் தங்கள் தேசத்தைவிட்டுப் புறத்தேசங்களுக்குப் போகவேண்டியதாயிருக்கிறது. ஜப்பான் சீனாவைப்போல் தனக்கு வேண்டிய யாவும் தன் தேசத்திலேயே விளைவிக்கக்கூடிய தேசமல்ல. ஆகவே போஜன பதார்த்தங்கள் புறத்தேசத்தினின்றே கொண்டுவரப்படவேண்டும். விவசாயஞ் செய்யப்பட்டுவரும் நிலத்தின் விஸ்தீரணம் 15,000,000 ஏக்கர். இச்சிறிய பூமியும் போதிய செழிப்புள்ளதல்ல. எவ்வாற்றிலும் இடுக்கண் அனுபவிக்கப் பிறந்தவர்களாகத் தோன்றும். ஜப்பானியர் இயற்கையாக வரும் சகல இடையூறுகளையும் தங்கள் உழைப்பினாலும் புத்திக் கூர்மையினாலும் மேற்கொண்டு வருகிறார்கள். பிந்தின அத்தியாயங்களில் நாம் பார்க்கிறபடி அவர்கள் விவசாயத்தில் வியப்புறத்தக்கவண்ணம் அபிவிர்த்தியடைந்திருக்கிறார்கள். "வெற்றியடை! தடை என்னவாயினும் நாம் ஜயம் பெறவேண்டும்" என்பதே ஜப்பான் தேசத்தவரது தங்கப்பிரமாணம்.

சீதோஷ்ணஸ்திதியைப் பார்த்தால், தெற்குப் பாகம் மாறாத கோடைகாலமாயிருக்கும். வடக்கே போகப் போகக் குளிர்ச்சி அதிகம். வடக்கேயுள்ள குயுரைல் தீவுகளில்



கடுங்குளிராயிருக்கும். ஆயினும் சீதோஷ்ணம் ஒருபோதும் கொடுமையாயிராது. வருஷத்துக்கு 60 அங்குல மழைக்கு அதிகம் பெய்வதால் தேசம் நீர்வளம் பொருந்தியது. பொதுவாகச் சீதோஷ்ணஸ்திதி சுகந்தமாயிருக்கும். ஜப்பான் தேசம் பசுமையும் அலங்காரமுமானது. ஆயினும், மேற்கத்திய தேசத்தாருக்குச் சற்றுக் கொடுமையானது. இங்கே ஏப்ரில் முதல் அக்டோபர் வரை மழைகாலம். அக்காலத்தில் ஒருநாள் விட்டு ஒருநாள் "[illegible]" என்ற மழை பெய்யும்; வருஷ முழுமையிலும் ஏழு நாட்களில் மூன்று நாள் மழையாவது பனியாவது பெய்யும். சுகமான சீதோஷ்ணஸ்திதியும் ஏராளமான மழையும் ஒன்றுசேரத் தேசம் செழித்துத் திரளான விளைவைக் கொடுக்கிறது. ஜப்பான் உலகத்தின் மிகக் காடடர்ந்த தேசங்களில் ஒன்று. மலைச்சாரல்கள் தேவதாரு முதலிய வாடாமரங்கள் செறிந்திருக்கும். அங்குள்ள மரங்களில் விசேஷித்தவை:— தேவதாரு, தேகுரு, கர்வாலி, ஆடம் முதலியவை. கனி விருக்ஷங்களுக்குக் குறைவில்லை. முக்கியமாக:— இச்சிலி, அத்தி, பேரிக்காய், முந்திரி முதலியவை. அழகிய பலவர்ண புஷ்பங்கள் நிறைந்த நந்தவனம் இத்தேசம். இவ்விஷயத்தில் இதற்கு நிகரான தேசம் வேறொன்றில்லை. கண்ணைப் பறிக்கும் பல வகைப் புஷ்பங்கள் எங்கும் பரிமளிக்கும். புஷ்பம் மலிந்துள்ள சகல நந்தவனங்களையும் தோட்டங்களையும் விரும்பாதார் யாருமில்லை. இந்தியருக்குத் தாமரைப் புஷ்பம் எவ்வளவு அருமையானதோ அவ்வளவும் "செவ்வந்தி" என்ற புஷ்பம் ஜப்பானியருக்கு அருமையானது. இயற்கையிலேயே ஜப்பானியர் இயற்கையின்மேலுள்ள பிரியத்தால் அதனை இன்னும் அதிகமாய் அலங்கரிக்கிறார்கள். எளியவன் குடிசையிலும் ஓர் சிறிய பூந்தோட்டம் இருக்கும்.

ஜப்பான் சுகத்துக்கேற்ற இடம் என்று சொல்லத்தகாது. அங்கு அம்மை, விஷபேதி, கொள்ளைநோய் முதலிய கொடிய நோய்கள் உண்டாகும். ஆயினும் இந்தியாவைப்போல் அவை அவ்வளவு கொடுமையுமல்ல, மிகுதியுமல்ல. 1890-ஆம் 50,000 ஜப்பானியருக்குப் பேதி கண்டது. அதில் 30,000 பேர்போல் மாண்டார்கள். ஆயினும் வைத்திய சாஸ்திர

விர்த்தியினாலும், ஜனங்கள் தொற்றுவியாதிகளுக்குத் தப்பும்படி செய்யப்பட்டிருக்கும் ஏற்பாட்டினாலும் சாவோர் தொகை குறைந்துவருகிறது.

ஜப்பான் தேசத்தின் முக்கிய தீவின் மத்தியில் ஓர் நீண்ட மலைத்தொடர் செல்லுகிறது. அதன் கொடுமுடியாகிய மாரிசன் சிகரம் 12,850 அடி உயரமுள்ளது. இது 29.000 அடி உயரமான எவரஸ்ட் மலைக்குப் பாதி உயரங்கூட இல்லை. வருஷத்தில் பத்து மாதம் இம்மலைச் சிகரங்களில் உறைபனி மூடிக் கண்ணுக்கினிய காட்சியளிக்கும். ஜப்பான் தேசத்தாறுகள் சிறிதாயினும் வெகு வேகமாக மலையினின்று ஓடிவரும். மழைகாலத்தில் அவை கரைபுரண்டோடிப் பொருள் நாசமும் உயிர்ச்சேதமும் வருவிக்கும். அங்குள்ள அதிக நீளமான நதி சுமார் 400 மைல் உள்ளது. இது 1,800 மைல் நீளமான சிந்து, பிரமபுத்ர முதலிய நதிகளின் நீளத்திற் காற்பங்குகூட இல்லை.

இந்தியாவிலிருப்பதுபோல் மிருக ஜாதிகள் இங்கு அத்தனை மிகுதியாயில்லை. அவற்றில் கொடியவை வெகு சொற்பமே. ஆடு மாடுகள் சொற்பம். முக்கிய மிருகங்கள் கரடி, மான், நரி, முயல், குரங்கு. பக்ஷி ஜாதிகளும் மிகுதியே. நீர்நிலைகளிலெல்லாம் மச்சங்கள் மிகுந்திருக்கும். இதுவே அத்தேசத்தாரின் சாதாரண சாப்பாடு. இந்து தேசத்தாரைவிட ஜப்பானியர் மீனை அதிகமாக உபயோகிக்கிறார்கள். இந்து தேசத்தார் மீன்பிடிக்கும் விதத்தையும், அவற்றைச் சுத்தப்படுத்திக் கருவாடுபோடும் விதத்தையும்விட நல்ல விதம் கண்டுபிடிக்கும் நோக்கமாய் சர் பிரெடெரிக் நிக்கல்சன் என்பவர் ஜப்பான் தேச மீன்துறைகளைக் கவனித்து அவற்றைக்குறித்து படிப்பித்துவந்தார். அவர் இந்துதேசச் செம்படவருக்குப் பல புது வழி வகைகளைக் கற்றுக்கொடுத்திருக்கிறார். இந்தியாவின் நீர்நிலைகளில் மீன்கள் நிறைந்திருப்பினும் அவற்றை எல்லாம் உபயோகிக்க ஜனங்கள் கற்றுக்கொள்ளவில்லை.

ஜப்பான் தேசம் இந்தியாவைப்பார்க்கிலும் லோகப் பொருளில் மிகுந்தது. அங்குள்ள விசேஷித்த தொழில்



சுரங்கவேலை. நிலக்கரி வெட்டியெடுக்கப்பட்டு ஏற்றுமதியாகிறது. பித்தளை, கந்தகம், வெள்ளி அபரிமிதமாக அகப்படுகிறது. பொன், முலாம், இரும்பு, ஈயம், உப்பு முதலியவைகளும் கிடைக்கிறது. பர்மாவில்போல இங்கும் எண்ணெய் ஏராளமாய் எடுக்கப்படுகிறது.

ஜப்பான் தேசத்து நகரங்கள் பெரியவை; முக்கியமுமானவை. இந்தியாவின் நகரங்களில் லக்ஷத்துக்கதிகமான ஜனத்தொகையுள்ள 29 பட்டணங்களில் வசிப்போர் சராசரி 100-க்கு இரண்டுபேர்தான். ஜப்பானிலோ இத்தொகை அதிகப்படுகிறது. ஜப்பானின் தலை நகரமாகிய ற்றோக்கியோவின் ஜனத்தொகை 1903-ம் வருஷக் கணக்குப்படி 1,795,128.* இப்பொழுது சுமார் 20 லக்ஷமிருக்கும். இது சக்கிரவர்த்தியின் வாசஸ்தானமும் ராஜாங்க நிர்வாகஸ்தலமுமாயிருப்பதுபற்றி விசாலமும் சுத்தமுமான தெருக்களும் நேர்த்தியான கட்டடங்களும் உள்ள அலங்காரமான நகரமுமாயிருக்கிறது. மின்சார விளக்குகளும் மின்சார வண்டிகளும் பேசும் தந்தி முதலிய பல நவீன ஏற்பாடுகளும் அதைத் தற்கால நாகரிகம்பெற்ற நகரமாக்கிவிட்டன. ஓசாக்கா பட்டணம் 10 லக்ஷம் ஜனங்கள் உள்ள பெருத்த வியாபார மத்தியஸ்தானம். யந்திரசாலைகள் எங்கும் நிறைந்திருக்கும். அவற்றினின்று எழும்பும் புகை மேகபடலம்போல் கவிந்து நிற்கும். இப்பட்டணத்திலிருந்து "ஓசாக்காவில் செய்தது" என்ற முத்திரையிட்ட ஏராளமான சாமான்கள் நாலுதேசங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. பழைய ராஜதானியாகிய கியோற்றோ என்பது 379,409 குடிஜனங்களுள்ளது. அதன் அழகிய புத்தமதாலயங்களும் புராதன அரமனைகளும் மடங்களும் பரிசுத்த ஸ்தலங்களும் தோப்புக்களும் சரித்திரமத சம்பந்தமான ஸ்தாபனங்களும் பிரயாணியின் மனதைக் கவரத்தக்கவை. யோக்கொகாமா, கோபே, நாகசகி என்பவை ஜப்பானின் முக்கிய துறைமுகப்பட்டணங்கள். நிக்கோவும் மற்ற விசித்திரமான மலை ஒதுக்கிடங்களும் பிரயாணிகளுக்கு மிகவும் இன்பம் பயக்கத்தக்கவை.

தீவாயிருந்து, பிற ராஜ்யங்களுக்கு அடிமைப்படாமல் நெடுநாள் தொடர்ந்தேற்றியான அரசாட்சிக்குட்பட்டிருக்கும் ஜப்பான் தேசத்து நிலைமை ஆசியாக்கண்டத்தின் மற்றத் தேசத்தோடு ஒப்பிடப்படத்தக்கதன்று. கடந்த 40 வருஷக்காலத்தில் ஜப்பானியர் சீர்திருத்தமடைந்து மற்றெந்த ஜாதியும் செய்யாதவண்ணம் உலகத்தின் சகல ஜாதிகளையும் பிரமிக்கச்செய்தது. இத்தேசம் உலகத்தின் ஜனத்தொகையில் பாதியுடையதும், உலகத்தின் முக்கிய மதங்களுக்குப் பிறப்பிடமானதும், புராதன நாகரிகத்துக்கு உறைவிடமானதுமான ஆசியாக்கண்டத்தின் ஓர் பாகம். ஆனால் இப்போது இது மேற்குத்தேச கீழ்த்தேச நாகரிகங்களில் நலமானதைச் சலித்து எடுத்துக்கொள்ளும் ஓர் களமாயிற்று.

# II

## *ஜப்பான் தேச சரித்திரம்.

இந்த ஜாதியாரின் பிரதான இலட்சணத்தைக்குறித்து ஆராயுமுன் அவர்களுடைய தற்கால மாறுதல்களை அறியும் பொருட்டு அவர்களுடைய பழையகால சரித்திரத்தை நாம் பரிசோதிக்கவேண்டும். ஜப்பான் சரித்திரத்தை நான்கு காலப் பிரிவுகளாகக் கிரிப்பின் பண்டிதர் அடியிற் கண்டபடி பிரித்திருக்கிறார்:—

600 கி. மு.—400 கி. பி. சரித்திரத்துக்கு முந்தின காலம்.
552 கி. பி.—1600 புத்தயுக காலம்.
1600—1868 சமாதான காலம்.
1868—இதுவரை தற்காலம்.

**(1) சரித்திரத்துக்கு முந்தின காலம்.** 600 கி. மு.—400 கி. பி. 461-க்குமுன் ஜப்பானிய சரித்திரத்துக் காதாரமானவை எதுவும் தற்காலத்தாருக்குக் கிட்டவில்லை. இந்தக் காலத்துக் கடுத்ததாகக் கிடைப்பதெல்லாம் கட்டுக்கதையும் பாரம்பரியமுமாம். அவர்கள் கட்டுக்கதை நூல்களாகிய கோஜிகி முதலிய புஸ்தகங்கள் "ஆதியில் சர்வமும் உருக்குலைந்த நிலையிலிருந்தது; சிருஷ்டிகளிலும் முதற்காரணமாவது இல்லை; வானமும் பூமியும் தாங்களே உண்டாயின. பூமியின் உஷ்ண பதார்த்தத்தினின்று ஒரு வித்து எழும்பித் தேவர்களில் முதல்வனாயிற்று; பின்னர் நான்கு தேவர்கள் ஜெனித்தார்கள், அவர்களே பற்பல பூதியங்களை உண்டாக்கி பூமியின் மத்திய பாகமாகிய ஜப்பான் தீவுகளுக்குத் தந்தையரானார்" என்று கூறுகின்றன.

இக்கட்டுக்கதைகளை நீக்கி நாம் ஆராயுங்கால், கி. மு. 600-லு நாகரிகமுள்ள ஆரியர் வேதங்களையும் உபநிஷதங்களையும் எழுதிய வெகுகாலத்திற்குப் பின் ஐனோஸ் என்ற ஒரு மிலேச்ச ஜாதி ஜப்பானில் வாசம் செய்ததென் றறிகிறோம். ஆரியர் இந்தியாவினின்று தூரத்திய பூர்வ குடிகளை



புத்தரின் சிலை.



இந்த ஜாதியார் ஒத்தவர்கள். இந்தியா தேசத்தினுள் வந்தார் போல ஜப்பானுள் ஒருவர்பின் ஒருவராய்க் குடியேறினவர் பலர்—மங்கோலியர், தார்த்தர், மலாயர், நிக்ரிட்டோவர், சீனர், இந்துக்கள், விசேஷமாய்க் கொரியாவினின்று வந்து குடியேறினவர். வெவ்வேறான இந்த ஜாதியார் பூர்வ குடிகளோடு கலந்துபோய் வர வர ஜப்பானியரானார்கள். நாகரிக விர்த்திக்கிணங்காத ஐனோஸ் மிலேச்சராகவே நின்றுபோக, ஜப்பானியர் கலப்பான ஜாதியாராக மற்ற தேசத்தினரோடு பலவாறு சம்பந்தப்பட்டு நிலையான தேர்ச்சிபெற்றிருக்கிறார்கள். ஐனோஸ் என்ற மிலேச்சர் குறைந்துகொண்டேவருகிறார்கள். 17,600 பேர் மட்டுமே அந்த ஜாதியாரில் மிகுந்திருப்பவர். 'அவர்கள் உலகத்திலுள்ள எல்லாரிலும் ரோமம் மிகுந்தவர், பொத்த தேகிகள், அசுசிப் பழக்கமுடையார் (ஸ்நானமே செய்தறியார்) மதுபானப் பிரியர், பூத வணக்கம் செய்வார்' என்று பெயர்பெற்றவர்.

இந்தியாவோடு ஒத்துப்பார்க்கின் ஜப்பான் இளம்பிராயமுள்ள ஜாதி; அவ்வாறே இந்தியா எகிப்து தேசத்துக்கு இளமையானது; ஆரியர் இந்தியாவில் புகுந்து இருக்குவேத கீதங்களைப் பாடுமுன்னமே எகிப்து தேசம் உச்சிதமான நாகரிக பதவிக்கு வந்துவிட்டது.

இப்படையெழுச்சியின் காலத்தில் யாமத்தோவின் வம்சத்திற்கு விரோதமாக மற்றக் கோத்திரங்கள் செய்த யுத்தத்தைக்குறித்துப் பார்க்கிறோம். இந்த வமிசம் வர வர வல்லமை அதிகமடைந்து தலைமை பெற்றதுமன்றி இவ்வமிசத்தின் தலைவர் ஜப்பான் தேசத்து மிக்காடோ என்ற அரசனாக ஓர் மத்திய அரசாக்ஷியும் கடைசியாக ஸ்தாபிக்கப்பட்டது. சரித்திர காலத்துக்கு முந்தின இக்காலத்தில் மிகுந்திருந்த கட்டுக்கதைகள் காவியங்கள் மூலமாக ஓர் **உம்பிளிக்கைப் பிரமாணம்** (இராணுவ வேலையால் நிலை பெறும் ஏற்பாடு) பிரபலமாயிருந்ததைக் காண்கிறோம். அந்த ஜாதியார் யுத்தப்பிரியரும் எழுத வாசிக்கத் தெரியாதவர்களுமா யிருந்தார்கள். இவர்கள் சன்மார்க்கப் பிரமாணம் யாதுமறியாமல் முன்னோர் வணக்கமும், பிரகிருதி வணக்க

மூம் சேர்ந்த ஷின்டோமதத்தை அனுசரித்துவந்தார்கள்.
ஈராயிரம் வருஷங்களுக்குமுன் இந்து தேசத்தார் மத
ஆராய்ச்சியும் சாஸ்திர ஆராய்ச்சியும் உள்ளவர்களாய்ப்
பூர்வ நாகரிகமுடையராயிருக்க, ஜப்பானியரோ நாகரிகமற்ற
முரட்டு ஜாதியாரான யுத்தப்பிரியரும் பாக்கியசாலிகளு
மாயிருந்தார்கள். தாங்களே சுயமாய்ச் செய்துகொண்ட
சீர்திருத்தம் வெகு சொற்பமாயினும் மற்ற ஜாதியாரிட
மிருந்து நல்விஷயங்களைக் கற்பதில் மிக்க ஜாக்கிரதையா
யிருந்து வந்திருக்கிறார்கள். சொல்லப்போனால், இவர்க
ளடைந்த சகல அபிவிருத்தியும் மற்றவர்களிடமிருந்து இவர்
கள் பெற்றதே: ஜப்பானின் இயற்கை ஏதுக்கள் மிகப் பெற்
றவர்களும், பூர்வ நாகரீகமடைந்தவர்களும், மிகப் புத்திக்
கூர்மையுடையவர்களுமான இந்து தேசத்தாரின் (குறிப்புச்
சொல்) தங்கப்பிரமாணம் "வழக்கம்," ஜப்பானியருடைய
தோ "விருத்தி." நாமோ பண்டை வழக்கங்களைக் கடை
பிடித்து நிற்கிறோம். ஜப்பானியரோ புராதன வழக்கங்களை
விட்டு நூதன சீர்திருத்தங்களைக் கைப்பற்றினர். பூர்வத்தோர்
பழக்கமே நமது நடக்கைக்குப் பிரமாணம்; அவர்களோ
பின்னுள்ளவைகளை மறந்து முன்னிருப்பதையே நோக்கி நடக்
கிறார்கள். நாம் நம்முடைய பழைய பழக்க வழக்கங்களைப்
பயபக்தியாய்க் காப்பாற்றி வருகிறோம். அவர்களோ மற்ற
வர்களிடமிருந்து நற்குணங்களைக் கற்றுவருகிறார்கள்.
நமக்குள் பிரிவினை யிருக்கிறது. அவர்களுக்குள் ஐக்கியம்
பலத்தது. இக்காலத்தில் நமக்கு ஜப்பான் தேசத்தைப்
போல் பிரயோஜனமான அநேக விஷயங்களை நமக்குக்
கற்பிக்க வல்லதேசம் வேறொன்றில்லை. நமக்கு இவ்விசே
ஷங்களைக் கற்றுக்கொடுக்கப் பாத்திரமான நாடு இதைவிட
வேறொன்றில்லை. ஏனெனில் இதுதான் மற்றவர்களிடமிருந்து
மிகத் தாழ்மையாக இப்பாடங்களைக் கற்றது. ஜப்பான் தேசத்
தவரை நற்கதிக்குக் கொண்டுவருவதில் விசேஷித்த கருவி
யாயிருந்தது புத்தமதம். இந்தப் புத்தமதத்தை ஏற்ற சமயத்
தில் ஜப்பானியருக்குப் போதித்தது நமது இந்தியாவே.
இவ்வாறு தன்னிடம் உதவிபெற்ற அத்தேசத்தவரிடமிருந்து
இந்தியா பதிலுதவிபெறத் தாமதமேன்?



(2) புத்தமத காலம் 6 — 16-ம் நூற்றாண்டு. — கி. பி.
552-ல் புத்தமதத்திற்குரிய பரிசுத்த புஸ்தகங்களும், விக்
கிரகங்களும் கொரியாவிலிருந்து அங்கே கொண்டுபோகப்
பட்டன. வல்லமையுள்ள இந்நூதன மதம் உண்டுபண்ணிய
மாறுதல்கள் மிகுதி. கல்வியிலும், கைத்தொழிலிலும், சித்
திரத்திலும், செய்யுளிலும், சாஸ்திரத்திலும், வர்த்தகத்திலும்
உண்டான சகல சீர்திருத்தங்களும் ஜப்பான் சீனாவுக்கும்
கொரியாவுக்கும் கடனாளி. அவ்வாறே புத்தமதத்துக்குச்
சுதேசமாகிய இந்தியாவுக்கும் அது கடனாளி. ஆயினும்
ஜப்பானுக்குப் புகுந்த இந்த மதம் கௌதம முனிவரின்
சாதாரண போதனையல்ல; அது சீனா, கொரியா நாடுகளில்
வழங்கும் கருகலான பொருளுள்ள புத்தமதப் போதனை.

12-ம் நூற்றாண்டில் உடம்படிக்கைப் பிரமாணத்தில் சில
நன்மாறுதல்கள் செய்யப்பட்டன. மிக்காடோவுக்கு முன்
னிருந்த ஏகாதிபத்தியம் சற்றுக் குறையத் துவங்கிற்று; மற்ற
வமிசங்களும் கட்சிகளும் படிப்படியாய் உயர ஆரம்பித்தன.
இவர்களில் முதன்மையான சேனைவீரன் ஷோகன் (சேனா
பதி) என்னும் பட்டம் வகித்து ராஜ்யத்தை ஒருவாறு ஆண்டு
வந்தான். இவ்வாறு 1190-ல் முதல் 1868-ல் வரையும்
அங்கே இருவித அரசாட்சி யிருந்தது. "பெயருக்கு மிக்கா
டோதான் அரசன்; ஆனால் அவருக்கு அதிகாரம் யாதுமின்றி
கியோட்டோ என்ற புராதன நகரத்தில் அழகிய அரண்
மனையில் வசித்து கைதிக்கு ஒப்பாயிருந்தார். ஷோகன்
ஆயுதமணிந்த தனது சேனைவீரர் உதவியாலும் யோசனை
மிகுந்த மந்திராலோசனைச் சங்கத்தார் அனுசரணையினாலும்
ஜப்பானின் கீழ்த்திசையிலுள்ள தனது நூதன நகரத்தி
னின்று ஆட்சி செய்துவந்தான்."

இந்தக்காலத்தில் 'சாமுராய்' என்ற வமிசத்தார் பலவாறு
அபிவிருத்தி அடைந்ததைப் பார்க்கிறோம். இந்த ஜப்பானிய
போர்வீரர் 'புஷிடோ' அல்லது 'வீரமார்க்கம்' என்னப்பட்ட
முறைப்படி சன்மார்க்கத்திலும் மரியாதையிலும் வெகு
ஜாக்கிரதையாகப் பயிற்றுவிக்கப்பட்டார்கள். இவர்கள் சரீ
ரத்திலும் மனோதத்துவங்களிலும் மகா தேர்ச்சி அடைந்தவர்
கள். போர்வீரர்களும் இவர்களே, புலவர்களும் இவர்களே,

யுத்தவீரர்களும் இவர்களே, மேன்மக்களும் இவர்களே. சுருக்கிச் சொன்னால் ஜப்பானிய நாகரிகத்தின் நறுமலர் இவர்களே. ஜனசமூக ஆலோசனைக்கு இவர்களே முதன்மையாய் நின்று ராஜ்ய விஷயங்கள் யாவையும் தாங்களே நடத்திவந்தார்கள். தற்காலத்தில் இவ்வகுப்பினர் க்ஷீணதசை யடைந்து தொகையில் குறைந்து 100-க்கு ஐவரே இருப்பினும் ராஜபக்தி, [illegible], கல்வித்திறமை, புத்திக் கூர்மை என்ற சாமுராய் வமிசத்தின் குணங்கள் அவர்களில் இன்னம் விளங்கிவருகிறது. உடம்பிலிருக்கப் பிராணம் அற்றுப்போயிருப்பினும் பூவோடு கூடிய நாரும் மணம்பெறும் என்றபடி இக்குணங்கள் இவர்கள் மூலமாகச் சகல குடிஜனங்களுக்குள்ளும் விளங்க ஆரம்பித்தது. இப்புருஷரே ஜப்பான் தேசத்து மந்திராலோசனைச் சபைபோலாகி அதன் காரியங்கள் யாவையும் ஆண்டு நடத்துகிறார்கள்.

பதினாறாம் நூற்றாண்டிற்றான் ஜப்பானியர் முதல் முதல் ஐரோப்பியரோடு சற்றுக் கலக்க ஆரம்பித்தார்கள். 1542-ம் வருஷத்தில் அதாவது அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்ட 50 வருஷத்துக்குப் பின் போர்த்துகீஸ் கப்பலாட்கள் மூவர் ஜப்பானில் கரை யிறங்கினார்கள். இதற்குமுன் மார்க்கபோலோ முதலிய பேர்பெற்ற பிரயாணிகள் இத்தீவுகளைக் கண்டு சந்தித்து இவற்றின் செல்வத்திரளைக் குறித்துப் பலவாறு சொன்னார்கள். சீக்கிரத்துக்குள் சீனதேசத்தில் குடியேறின போர்த்துகீஸ்காரருக்கும் இவர்களுக்கும் வர்த்தகம் நடக்கலாயிற்று. இந்த ஜப்பானிய வர்த்தகர்களில் ஓர் வாலிபன் பிரான்சிஸ் சவரியார் இந்தியாவை விட்டுப் போகும் வழியில் மலாக்கா ஜலசந்தியில் அவரைக் கண்டு, அவர் ஜப்பான் தேசத்துக்கு வந்துபோக வேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொண்டான். அதற்கு இணங்கிச் சவரியார் 1549-௵ ஜப்பானில் கரை இறங்கினார். அத்தருணத்தில் தேசத்தில் யுத்தமும் சகல குழப்பமும் மிகுந்திருப்பதையும், பிணங்கள் புதைக்கப்படாமல் வீதிகளில் இறைந்து கிடப்பதையும் கண்டு சஞ்சலப்பட்டார். சவரியார் அத்தேசத்தில் இரண்டே வருஷமிருந்தபோதிலும் ஏராளமான மிஷனெரிகள் இவருடைய வேண்டுகோளுக்கு



இணங்கி, அங்கு வந்து, ரோமான் கத்தோலிக்க மதத்தை ஸ்தாபித்தார்கள். இவர்கள் தங்கள் மார்க்கத்தை அன்பினாலல்ல அதிகாரத்தினாலும் பயமுறுத்தலினாலும் ஸ்தாபித்தார்கள். இப்படிப் பயத்தினால் கிறிஸ்தவர்களானவர்கள் 150,000. பதினாறாம் நூற்றாண்டில் உண்டான இந்த ரோமான் கத்தோலிக்க மதம் சீர்கெட்டதும் கொடுமை நிறைந்ததும் பட்டயத்தினாலும் பராக்கிரமத்தினாலும் ஸ்தாபிக்கப்பட்டதுமாகிய சீர்குலைந்தமதம். ஆயினும் இவர்களுக்குள்ளும் சில பக்தர்கள் இருந்தார்கள். இவர்களும் புறம்பான சடங்குப்பிரமாணத்தில் அதிவைராக்கியமுடையவர்களாய் வெளிவேஷ பக்தியையே பரிபாலித்துவந்தார்கள். ரோமான் கத்தோலிக்க மதம் 1542-௵ முதல் 1637-௵ வரையில் நிலைத்திருந்தது. இக்காலத்தில் ஜப்பானுக்கும் ஐரோப்பாவுக்கும் உள்ள வர்த்தகம் தழைத்தோங்க சாக்கவேலையும் நாணயம் அடிக்கும் வேலையும் மற்றும் பல கைத்தொழில்களும் ஜப்பானில் விர்த்தி அடைந்தது.

"இக்காலத்தில் நொபுனகா, ஹிதியோஷி, ஐயயாசு என்ற மூன்று மேன்மக்கள் ஜப்பானில் முதன்மையாய் முறையே விளங்கிவந்தார்கள். பெரிய மிராஸ்தார்களின் வல்லமையை முறித்து, அவர்களை ஷோகன் அதிகாரத்துக்கு அடங்கி இருக்கச் செய்வதும், ராஜ்யத்தை ஒருமைப்பாட்டினால் உறுதியாக்குவதும், பிரதம அரசாட்சி சங்கத்தைப் பலப்படுத்துவதும இந்த மூவரும் நடப்பித்த முக்கிய வேலை. இவ்வித ஒழுங்கைக் கண்டுபிடித்தவர் நொபுனகா. அதைத் துவக்கினவர் ஹிதியோஷி. அதைப் பூர்த்தி செய்தவர் ஐயயாசு. இவர்களுள் முதல்வர் கிறிஸ்தவர்களை நேசித்து அவர்களைப் பரிபாலித்துவந்தவர். மற்ற இருவரோ அம்மார்க்கத்தைக் கடும் பகையாய்ப் பகைத்து நாசம் செய்ய முயன்றார்கள்."

(3) **சமாதான காலம் 1600–1868.** — டொக்கு காவா குடும்பத்தைச் சேர்ந்த ஐயயாசு என்ற தளகர்த்தன் (ஷோகன்) யெட்டோ (தற்கால ற்றோக்கியோ) என்ற நகரத்தைக் கட்டிக் கடைசியாக ஜப்பான் தேசத்து அதிபதியானான். ராஜ்ய ஐக்கியத்தைப் பலப்படுத்திக் கல்வி அபிவிர்த்

திக்கு அநுகூலம்செய்து தன் நாட்டில் நாகரிகம் மேலோங்க உதவிசெய்துவந்தான். போர்த்துகீஸ்காரரும் ஸ்பானியரும் ராஜாங்கவிஷயத்தில் சதி ஆலோசனை செய்ததுபற்றி சோமான் கத்தோலிக்கரைத் தன் ராஜ்யத்தினின்று துரத்திவிடத் தீர்மானஞ்செய்தான். அவ்வாறே 1606-ஆம் இயயாசு இந்தப் புறத்தேச மதத்தை ஒருவரும் அநுசரிக்கக் கூடாதென்று ராஜ்யத் தீர்மானம் ஒன்று விளம்பரம்பண்ணினான். அத்தீர்மானத்தின்படி ஜப்பானிய மார்க்க விசாரணைச்சங்கம் ஒன்று ஏற்படக் கிறிஸ்தவர்கள் துன்பப்படுத்தப்பட்டுத் தேசத்தைவிட்டுத் துரத்திவிடப்பட்டார்கள். இவ்வாறு கிறிஸ்துமார்க்கத்தை தன் தேசத்தி லிராதபடி அழித்ததுமன்றிப் புறத்தேச சம்பந்தமும் கிஞ்சித்தும் இராதபடி தக்க வழிவகைகளை அநுசரித்து உள்நாட்டிலேயே செய்யவேண்டிய சீர்திருத்தங்களைச் செய்துவந்தான். ஜப்பான் ஓர் வனவாசியைப்போல் தன்னந்தனியே பிழைத்தது. ஆயினும் உலாந்தாக்காரர் நாகசகி என்னும் துறைமுகத்தை இன்னும் கைப்பற்றி இருந்து இரண்டு நூற்றாண்டுகளாகத் தங்கள் செல்வாக்கை அத்தேசத்தாருக்குட் செலுத்தி வந்தார்கள். "உலாந்தாக்காரர்கள் அத்தேசத்தில் இருந்திராமற்போனால் தற்காலத்தில் நாம் காண்கிற நாகரிகமும் சீர்திருத்தமும் இருந்திருக்கமாட்டாதென்பது நிச்சயம். மேற்கத்திய சீர்திருத்தங்களுக்கும் சிறந்த நாகரிகத்துக்கும் ஜப்பான் தேசத்தில் வழி உண்டாக்கினவர்கள் இவர்களே. உலகத்தின் வயோதிபத்தில் பிறந்த இக்குழந்தை சகல தேசத்தாரையும் அதிசயிக்கச்செய்து அவர்களுக்கு ஆனந்தம் அளித்ததற்கு இவ்வுலாந்தாக்காரரே முக்கிய காரணம் என்னலாம்."

**(4) மீஜீ காலம் அல்லது சிறந்த நாகரிக காலம்**—இது 1868-ஆம் துவங்கிற்று. தன்னந்தனியே இருந்த ஜப்பானின் நிலைமை, அமெரிக்க ஐக்கிய மாகாணங்களிலிருந்து 1853-ஆம் ஜப்பானில் வந்திறங்கிய பெரி என்னும் கப்பல் மாலுமியால் ஒருவாறு முடிவுபெற்றது. அமெரிக்கக் கப்பலோட்டிகளையும் கப்பல்களையும் சற்றுப் பட்சமாக நடத்த ராஜனைக் கேட்டுக்கொள்ளவும் வர்த்தக வியாபாரத்துக்கான



உடன்படிக்கைகள் செய்யவும் வேண்டுமென்ற நோக்கமாய் அவன் வந்தான். ஜப்பான் தேச நன்மையையும் உலகத்தின் நன்மையையும் கருதி ஜப்பானியரின் தனி வாசத்துக்கு ஓர் முடிவு செய்யப் பெரி தீர்மானஞ் செய்திருந்தான். அவர்கள் சமாதானமாய் இதற்கு உடன்படாவிட்டால் அவர்களைச் சேனாபலத்தினால் இவ்வித ஒழுங்குக்குக் கட்டுப்படுத்த அவன் ஆயத்தமாய் வந்தான். ஜப்பானியர் அவனை இப்பொழுது தங்கள் பேருபகாரிகளி லொருவராக எண்ணுகிறார்கள். அமெரிக்கப் படைக்கலங்களினின்று வாய்திறந்து நின்ற பெரிய பீரங்கிகள், ஜப்பானியருக்குள் பெரும் அச்சம் உண்டாக்கி அவர்கள் செய்திருந்த சகல சட்டங்களையும் மீறி இவர்களைத் தங்கள் தேசத்திற்குள் வரவிட ஏவிற்று என்பது உண்மையே. ஆயினும், அக்கப்பல்களில் துப்பாக்கி மருந்தும் பீரங்கி குண்டுகளுமல்லை, மேற்கத்திய நாகரிகத்தையும் சாஸ்திர புலமையையும் கைத்தொழில் திறமையையும் தெளிவுற விளக்கவல்ல பற்பல விலையுயர்ந்த பொருள்கள் நிறைந்திருந்தன. பெரி கப்பல் மாலுமியாயிருந்ததோடு சாஸ்திர ஆராய்ச்சி யுடையவனுமாயிருந்தான். ஜப்பானியர் தங்கள் ஒழுங்கற்ற அரசாட்சியினால் நஷ்டமடைந்திருக்கிறார்களென்றும் மேற்கத்திய நாகரிகத்தின் மேன்மையை அவர்கள் உள்ளவண்ணம் அறிந்துகொள்வார்களாகில், அன்போடு செய்யப்படும் புறத்தேச ஐக்கியத்திற்கு அவர்கள் உடன்படுவார்களென்றும் அவன் நம்பினான். பிரயாணப்படுவதற்குச் சில மாதங்களுக்கு முன்னதாக இங்கு கொண்டுவரவேண்டிய விசேஷ வெகுமானங்களை வெகு ஜாக்கிரதையாகத் தெரிந்தெடுத்தான். டானியேல் வெப்ஸ்டர் என்ற மந்திரி சொன்னவாறு "சிநேகபந்தம் எங்கள் நோக்கமேயன்றி வேறல்ல." கப்பல்கள் மேற்கத்திய நாகரிகங்களின் பலனான விலையுயர்ந்த பொருட்களால் நிறைந்திருந்தன—தந்தித்தபால், தீராவியந்திரம், புகைவண்டி, மின்சாரயந்திரம், ஏர், தையல்யந்திரம், அகாரதிகள், விளக்குகள், பூட்டுகள்; உலகத்தின் அபிவிர்த்தியையும், அமெரிக்கரின் அன்பையும் நல்நோக்கத்தையும் ரூபிக்கவல்ல மற்றச் சாமான்களினாலும் நிறைந்திருந்தன. அமெரிக்காவின் ஐக்

கிய மாகாணத்து அதிபதி ஜப்பான் தேச அரசனுக்கு “கனம்பொருந்திய என் நல்ல சிநேகிதனுக்கு” என்று விலாசம்போட்ட ஓர் கடிதத்தைப் பெறி கொண்டுவந்தான். கப்பற்சேதத்தில் அகப்பட்ட கப்பலாட்களுக்கு உதவியும், வர்த்தக சிலாக்கியத்திற்கேற்ற ஒழுங்குகளும், மரக்கலங்களுக்கு வேண்டிய நிலக்கரி கிடைக்கத்தக்க ஒரு துறைமுகமுமே அவன் விரும்பிய விஷயங்கள்.

பெறி சேனாபதி புறப்படுவதற்கு உத்தரவுபெற்ற அதே தினத்தில் கீர்த்திபெற்ற சக்கரவர்த்தியாகிய முட்சிகிற்றோ என்ற தற்கால அரசன் பிறந்தது ஆச்சரியமான சந்தர்ப்பமே. ஜப்பான் தேசத்துப் பெரும் நலத்தைக் கோரியே இவ்விரு விஷயங்களும் ஒரே சமயத்தில் வந்து கூடின. அத்தேச சரித்திரத்தை மாற்றின முக்கிய ஹேதுக்களில் இவை முக்கியம். ஜனங்கள் தனக்குத்தானே விரோதமான அரசாட்சிப் பிரிவினையினாலும், உள்தேச கலகத்தினாலும் துன்பப்பட்டு வந்தார்கள். பழையனவைகளைக் கைப்பிடித்து பாழாவதோ, அல்லது தனக்கு முன்னிருப்பதை நோக்கி விர்த்தியடைவதோ; கன்பூஷிய பாரம்பரியத்துக்கு அடிமைகளாவதோ, அல்லது கிறிஸ்தவர்களின் நாகரிகத்தைப் பெற்று மேன்மையடைவதோ, இதுவே அவர்கள் இப்போது ஆலோசிக்கவேண்டிய முக்கிய விஷயமாயிற்று. ஒவ்வொருவன் ஜீவியத்திலும் ஓர் அதிர்ஷ்டம் உதிப்பதுண்டு. ஒவ்வொரு ராஜ்ய சம்பந்தமாகவும் இது உண்மையே. மேற்கத்தியார் கிழக்கத்தியாரிடம் கற்றுக்கொண்டதுபோல் ஜப்பானும் மேற்கத்தியாரிடம் கற்கத்தக்க நல்ல தருணம் வாய்த்தது. ஆனால் தேவனுடைய பிள்ளைகளின் பார்வையில் கிழக்கென்றுமில்லை மேற்கென்றுமில்லை. சத்தியம் எவ்விடத்ததாயினும் அது யாவருக்கும் சொந்தமான சுதந்தரம். காலபேதக் குறிகளைக் கண்டுணர்ந்து, தனக்குக் கிடைக்கும் நல்ல சமயங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும் ஜனமே பாக்கியமுள்ளது.

பெறி துரை ஜப்பானுக்கு வந்த சமயம் ஜப்பான் தனது நிர்விசாரம், தனிவாசமென்ற துர்க்குணங்களை விட்டு எழுந்த நற்சமயம். பழமையைப் போற்றிவந்த ஜப்பான் வருங்காலம் நோக்கி எழுந்தது. முன்னோர் பாரம்பரையை விட்டு



விட்டு நவீன நாகரிகத்தை அடைந்து உயரும்படி ஆரம்பித்தது. ராஜ்யம் முழுமையிலும் பள்ளிக்கூடங்களும், கைத்தொழிற்சாலைகளும் மற்றும் பல யந்திரசாலைகளும் உண்டாயின.

1859-ல் டவுன்சென்று ஹாரிஸ் என்ற ஜப்பான் தேசத்திலுள்ள அமெரிக்க மந்திரி இவ்விராஜ்யத்தோடு ஓர் முக்கிய உடன்படிக்கை செய்தார். “இவர் புறத்தேச விஷயங்கள் யாவையுங்குறித்த உத்தியோகஸ்தருக்குப் போதிக்கும் போதகனும், நல்லாலோசனையளிக்கும் சிறந்த மந்திரியுமானார்.” இப்புதிய சீர்திருத்தத்தின் சக்தி தேசமெங்கும் பரவ ஆரம்பித்தது. ஆனால் இந்த நல்ல மாறுதல்களுக்கு எதிர்த்து நின்றோர் பலராயினும், தேசத்தார் யாவரும் பொதுவாக முன்னேறிச்சென்று ராஜ்யக் குழப்பம் நிறைந்த அக்காலத்திலும் நூதன கல்வியையும் நாகரிகத்தையுமடைய வெகு ஜாக்கிரதையாக இருந்தார்கள்.

1868-ம் வருஷத்தில் நடந்த அரசாட்சி யுத்தத்திற்குப் பிறகு இளவரசு “பின்வரும் உடன்படிக்கை உறுதி” செய்துகொண்டார். அக்காட்சி வெகு விநோதமும் மனதில் ஆழ்ந்து பதியத்தக்கதாகவும் இருந்தது. இதுவே நவீன ஜப்பானின் ஆரம்பம்; புதிய ராஜ்யத்தின் ஜனனதினமும் இதுவே. ஜனப்பிரதிநிதி ஆட்சி, சட்டுள்ள ஆளுகை, சுயாதீனம், ஜனசங்க சீர்திருத்தம், கல்வியபிவிர்த்தி என்பவைகளைப் புது அரசாட்சியின் முக்கிய நோக்கமாக வைத்து அவ்வுடன்படிக்கையில் பின்வரும் ஐந்து விதிகள் எழுதப்பட்டன. அவைகளாவன:—

1. “தெரிந்தெடுக்கப்பட்ட ஆலோசனைச் சபை ஒன்று கூட்டப்பட்டு அதன் மூலமாகவே ஜனங்களின் சகல அபிப்பிராயங்களும் ஆலோசிக்கப்படவேண்டும்.

2. ஜாதி ஒருமைப்பாட்டிற்குரியதும் ராஜ்யத்தை மட்டான செலவோடு நடத்துவதற்கு ஹேதுவானதுமான சகல விதிகளையும் மேலுத்தியோகஸ்தரும் ஏழைக் குடிகளும் கற்றறியவேண்டும்.

3. சகல நல்விஷயத்திற்கென்றும் தன் சித்தத்தை விடா முயற்சியோடு நிறைவேற்றுவதற்கு இத்தேசத்தவரில் ஒவ்வொருவருக்கும் போதிய உதவி அளிக்கப்படும்.

4. புத்தியீனமான சகல பூர்வீக பழக்க வழக்கங்களையும் விட்டுவிடவேண்டும். இயற்கைப் பிரமாணத்தில் நாம் கூறும் பாரபக்ஷமின்மையும் தருமநீதியுமே இப்புதிய ராஜ்யத்தின் அஸ்திபாரமாகவேண்டும்.

5. இவ்விராஜ்யத்தின் அஸ்திபாரத்தைப் பலப்படுத்தும் பொருட்டு ஞானமும் வீரமும் உலகத்தின் எப்பாகத்தினின்று நாம் பெற்றுக்கொள்ளக்கூடுமோ அதைப் பெற்றுக்கொள்ளத்தான் வேண்டும்."

"இரண்டு வருஷத்திற்கப்பால் உடம்படிக்கைப் பிரமாணம் பின்வரும் சுருக்கமான சட்டத்தினால் ரத்து செய்யப்பட்டது. அதாவது: "கஷிகள் யாவும் தள்ளப்பட்டன. அதற்குப் பதிலாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள்." அதே வருஷமுதல் ஈனஜாதியென் றெண்ணப்பட்ட ஈற்று, ஹினின் என்பவர்கள் சாதாரண ஜனங்களாக மதிக்கப்பட்டுவந்தார்கள். அப்புறம் மேற்கத்திய கல்வித்துறைகளில் கற்கும்படி அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் ஸ்தானாபதிகளை 'இவக்கூரா' சங்கம் அனுப்பிற்று. இதனால் வந்த இரு பலன்கள், கிறிஸ்தவர்களுக்கு விரோதமாகச் செய்யப்பட்டிருந்த சட்டங்கள் ரத்து செய்யப்பட்டதும், கிறிஸ்தவ பஞ்சாங்கம் அனுசரிக்கப்பட்டதுமே."

தான் வாக்கு உறுதி செய்தவண்ணமே அரசன் நாகரிகமடைந்திருந்த மேற்குத் தேசங்களுக்கு ஸ்தானாபதிகளை அனுப்பி, அங்கிருந்து ஏராளமான கற்றோரை உபசரித்தழைத்தார். இவர்களும் வந்து இப்புதிய ராஜ்யத்திற்கு உறுதியான அஸ்திபாரம் அமைக்கவேண்டிய உதவி செய்தனர். (ஜப்பானிய டச் பண்டிதர்) வெர்பெக் பண்டிதர் வேறு நாலு கல்விமான்களோடுகூடிப் புதிய கல்விமுறைக்கு அஸ்திபாரம்போட்டு, ராஜ்ய சர்வகலாசாலையையும் ஸ்தாபித்தார். கடந்த 40 வருஷத்தில் 3,000-க்கு மேலான புறத்தேசத்தார் உபாத்தியாயராகவும், சிற்ப சாஸ்திரிகளாகவும், வைத்தியராகவும், சேனாபதிகளாகவும், ராஜ்யத்தைத் தற்சீருக்குக் கொண்டுவருவதற்கு வரும்படி விஷயத்திலும் அரசாட்சி முறையிலும் மற்ற ஆலோசனை சொல்லும் மந்திரிகளாகவும் ஜப்பானில் உழைத்து வந்திருக்கிறார்கள். பிரித்தா



னியாவிலிருந்து, ஆளுகைவிஷயத்தில் பணத்தைச் செலவிடும் முறையையும் ராஜாங்கத்துக்குரிய சீர்திருத்தங்களையும், பிரான்ஸிலிருந்து யுத்த முறையையும், (ஆனால் இப்போது ஜர்மன் முறையை அனுசரிக்கிறது) ஜர்மனியிலிருந்து சர்வகலாசாலை ஒழுங்கையும், வைத்திய சாஸ்திரத்தையும், அமெரிக்காவிலிருந்து பிரதம பாடசாலைக் கல்வி முறைகளையும், வியாபாரம் கைத்தொழில் முறைகளையும் ஜப்பான் கற்றுக்கொண்டது. ஜப்பான் இவ்வளவு சித்திபெற்றதற்குக் காரணம் இதுவே. தன் தேசத்துக்குப் புறத்தேசப் போதனாசிரியரில் கணக்கற்றபேரை வரவழைத்ததுமன்றி, அதற்கு மதிகமாகத் தன் தேசத்தவரை மேற்குத் தேசங்களுக்குக் கல்வி கற்கவும் கைத்தொழில் நூதன முறைகளைப் படித்துவரவும் அனுப்பிற்று. நமது ஸ்தானாபதிகள் சென்ற அதேகப்பலில் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜர்மனி முதலிய தேசங்களுக்குக் கல்வியின்பொருட்டு பிரயாணஞ்செய்த மாணாக்கர் வெகுபேர். ஹவாயில் 60,000 ஜப்பானியரும், அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் 30,000 பேரும், கொரியாவில் 31,000 பேரும், சீன தேசத்தில் 9,000 பேரும், இந்தியாவில் 413 பேரும், ஐரோப்பாவில் 183 பேரும் குடியேறி இருக்கிறார்கள். இதைத்தவிர கல்வி கற்க மேற்குத் தேசங்களில் கொஞ்சக்காலத்துக்குத் தங்கி இருக்கும் மாணாக்கர் தொகை ஏராளம். இது இவ்வாறிருக்க ஜப்பான் தேசத்தில் குடியேறியிருக்கும் புறத்தேசத்தாரில் சீனர் 8,411, ஆங்கிலேயர் 2,131, அமெரிக்கர் 1,585, ஜர்மன்காரர் 634, பிரான்சுக்காரர் 521; கொரியர் 227, புரோத்தஸ்தாந்து சபையைச் சேர்ந்த மிஷனெரிமார் 772. அதாவது 60,000 ஜனத்துக்கு ஒருவர். ஆயினும், கல்வி விஷயத்திலும் சன்மார்க்க, ஆத்ம விஷயத்திலும் இவர்கள் செய்த நவீன சீர்திருத்தங்களாலேயே ஜப்பான் முக்கியமாய்ப் புதுப்பிக்கப்பட்டதென்னலாம்.

இப்புதியயுக ஆரம்பத்தில் புத்தமதம் தன் வல்லமை இழந்து, விர்த்தியடையாமல் கேடடையத் துவங்கிற்று. கன்பூஷியக் கொள்கைகளினால் தேசத்தார் தங்கள் பூர்வ பழக்க வழக்கங்களில் பற்றுவைத்து, சீன முறைமையின் மூடபக்திக்குள்ளானார்கள். இது நூதன சீர்திருத்தம் உட்படு

வதற்கு ஓர் விதத் தடையாயிற்று. மேலும் முன்னோர் வணக்கமுள்ள ஷிந்தோமதம் புதிய மாறுதல்களுக்கு மற்றொரு தடை. ஜப்பான் தேசம் சீர்திருத்தம் பெறுவதற்கு அவர்கள் ஒத்தாசை தேடக்கூடிய இடம் மேற்குத் தேசங்களே. 263 ஜாதித்தலைவர்களும் தங்கள் கீழ்க்குடிகளைத் தங்கள் கட்சிக்கு அல்ல ராஜ்யத்திற்குக் சி[illegible]மையச்செய்ய, சேனாபதிக்குப் பதிலாக அரசன் தலைமை வகித்தான். இவ்வாறு யாதொரு யுத்தமுமின்றி உம்பிளிக்கைப் பிரமாணம் அற்றுப் போயிற்று. நிலங்களை இதுவரையில் அவற்றில் பயிரிட்டு வந்த குடியானவர்களுக்குக் கொடுத்தார்கள். இம்மட்டும், பட்டயமணிந்து மேன்மக்களாய்ச் செல்வாக்கில் காலங் கழித்த சாமுறாய் ஜாதியாரான 20 லக்ஷம்பேர், தங்களின் சொகுசை விட்டுப் பயிர் செய்ய ஆரம்பித்தார்கள்.

சாமுறாய் ஜாதியாரே சீர்திருத்தத்துக்கான சகல நன் முயற்சிகளிலும் முன்னின்றார்கள். இவர்கள் இந்தியாவிலுள்ள பிராமணரைப்போல் பாரம்பரையாய்ச் சகல செல்வாக்கும் பெற்று வாழ்ந்தவர்கள். ஆயினும் தேசத்துட்பட்ட புதிய நன்மாறுதல்களால் ஏவப்பட்டு ராஜ்ய நலத்தின் பொருட்டுத் தங்கள் அகந்தையை அகற்றிச் சாமான்னிய ஜனங்களோடு ஒற்றுமையுடையராய் அவரது சிலாக்கியங்களையே தாமும் அனுபவித்துவந்தார்கள்.

ஐக்கியமும், சகோதர பாசமுமின்றி ஒரு தேசமும் நற்சீர் அடைய முடியாதென்பது அவர்களுக்குத் தெரியவந்தது. ஜப்பான் இன்னும் ஜாதி வித்தியாசம் தன் தேசத்தில் பரவ இடங்கொடுத்திருந்தால் சிறு தேசத்தின் அரசாட்சிக்குட்பட்டு, பல புறத்தேசப் படையெழுச்சியினாலும் துன்புற்றிருக்கும். இப்போது, ஒருமை எனும் இன்பகுணத்தினால் ஒன்றாகக் கட்டப்பட்ட ஜப்பான் கீழ்த்தேச வல்லமை அழிவுறாமல் காத்து உலகத்தின் ஓர் முக்கிய ராஜ்யமாக விளங்குகிறது. "ஐக்கியமே அரண்" என்னும் உண்மைக்கு இத்தேசமே ஏற்ற உதாரணம்.

கீழ்க்குடிகளின் அபிவிர்த்தியைக் கெடுத்த இடையூறுகள் யாவையும் ஒழித்து அவர்கள் தேர்ச்சியடைய நற்சாதனங்கள் பல ஏற்படுத்தப்பட்டன. புதிய மாறுதல்களுக்கு



எதிர்த்து நின்று, பயிர்த்தொழில் ஒன்றே செய்து, மிலேச்சராக எண்ணப்பட்ட ஜப்பானியர் அதிதேர்ச்சியடைந்து, கைத்தொழில் பலவுங் கற்று மேன்மையடைந்திருக்கிறார்கள். முன் நிலம் மிகுந்த மிராசுக்களும், நிலமற்ற கூலிக்காரரும்; கல்வித்தேர்ச்சியுற்ற தனவான்களும், கொடுமைக்குள்ளான ஏழைகளும், என இருவித வகுப்பினர் ஜப்பான் தேசத்தில் இருந்தார்கள். இப்போதோ பற்பல கைத்தொழில்களும் வேலைகளும் செய்யும் ஒரே ஜாதியார் உண்டு. இவ்வித ஜனசங்க சமசிலாக்கியமுடைமையை மேற்குத் தேசத்தவரிடமிருந்தே இவர்கள் கற்றடைந்தார்கள். இனி மேல் சிலருக்குப் பாரபக்ஷங் காட்டி உயர்த்தி அநேகரை அவமதித்து அசட்டை செய்யாது, உத்தம ஊழியத்திலும், கைத்தொழிற் பயிற்சியிலும் முழு ராஜ்யத்தையும் நற்பதவிக்குக் கொண்டுவர ஜப்பான் பிரயாசப்பட்டது. துரோகிகளால் துன்பப்பட்டவர்களும், நூதன நன்முறைகளை எதிர்த்துநின்ற சண்டாளரால் கொலையுண்டவர்களும் ஏராளம். தங்கள் தேசத்தின் நலத்திற்கென்று நல்லோர் பலர் மாண்டார்கள்? அவர்கள் மரணத்தால் ஓர் ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது.

1889-ஆ உதாரத்துவமும் கல்வித்தேர்ச்சியும் வாய்ந்த அரசனால் ராஜ்ய சட்டங்கள் வெளியிடப்பட்டன. ஜப்பான் தேசமும் சட்டத்துக்குட்பட்ட ராஜ்யமாயிற்று. ஜப்பான் தேசத்து அரசாட்சி சம்பந்தமாக இவ்வருஷம் மகா முக்கியமானது. ஆங்கிலேய சாமான்னிய அரசாட்சி முறைப்படி இயற்றப்பட்ட இவ்விராஜ்ய சட்டங்கள் ஜப்பானியருக்குச் சுயாதீனமளித்த மகா சாசனம், ஞானமும் தயாளமும் நிறைந்த இந்த நல் ராஜன் தனக்குச் சுதந்தரமாயிருந்த சிலாக்கியங்களில் மிச்சமானவற்றைத் தன் குடிகள் நிமித்தம் உற்சாகமாய் விட்டு, இச்சாசனத்திற்குக் கையொப்பமிட்டான். மிக்காடோ ராஜ்யத்திற்குத் தலைவனாயிருந்தும் தன் சிலாக்கியங்களை அரசு முறைப்படிக்கே உபயோகித்துவந்தான். அதனால் யாவரும் தன் தன் மனச்சாட்சியின்படி நடக்க இடமுண்டாயிற்று. கிறிஸ்தவர்களுக்கு விரோதமான சட்டங்கள் ரத்து செய்யப்பட்டன.

கிறிஸ்தவ பஞ்சாங்கம் உபயோகிக்கப்பட ஜப்பானியர் ஒவ்வொருவரும் முன்னணையிற் கிடந்த கிறிஸ்து பாலகன் பிறந்த தினத்திலிருந்தே காலங் கணித்துவருகிறார்கள்.

1894-ல் சீன தேசத்தோடு ஜப்பான் செய்த யுத்தத்தினால் இவர்கள் மேற்கத்திய நாகரிகம் எவ்வளவு அடைந்திருக்கிறார்களென்பது உலகத்திற்குத் தெரியவந்தது. தன்னைவிடப் பதின்மடங்கு ஜனத்தொகையுள்ள ஓர் ராஜ்யத்தை ஜயித்தது, புதிய சீர்திருத்தம் பழைய குருட்டாட்டத்தை விட எத்தனை சிறந்ததெனக் காண்பித்தது. ஜப்பானியரின் வீரமே இந்த ஜயத்துக்குக் காரணமாகாது. ஜப்பானியர் மற்றவர்களிடமிருந்து கற்க ஆயத்தமாயிருக்க, சீனர் புறத்தேச சம்பந்தமான யாவையும் புத்தியில்லாமல் விரோதித்து அசட்டை செய்து தன் பழைய நிலையிலேயே நின்று பலக்ஷயமடைந்ததென இது ரூபிக்கிறது. இந்த யுத்தத்தினால்தான் ஜப்பானியரின் அபிவிர்த்தி உலகத்திற்குத் தெரியவந்தது.

1904-ல் ஜப்பானுக்கும் ருஷியாவுக்கும் யுத்தமுண்டாயிற்று. இதன்மூலமாய் ஜப்பானியரின் வீரமும், பற்பல விஷயத்தில் அவர்களடைந்த விர்த்தியும் எவரையும் வியப்புறச்செய்தது. நிலத்திலும் நீரிலும் அவர்கள் செய்த போரில் அவர்கள் காண்பித்த பராக்கிரமமும் ஒழுங்கும் மாத்திரமல்ல, சாஸ்திர விதிதமான வைத்தியசாலைகளும், கைதிகளுக்கு அவர்கள் காட்டிய பட்சமும், யுத்த முறைமையையும் அவர்கள் நடத்திய மகா ஞானமான விதமும் சில வருஷங்களுக்குள் இவர்கள் கற்றுக்கொண்டதெத்தனை அதிகமெனக் காண்பித்தது. இவ்வாறு ஒற்றுமையற்று, பல பிரிவினையுற்றுத் தன்னந்தனியே ஒத்தாசையின்றி வசித்துவந்த ஜப்பான் 40 வருஷத்திற்குள்ளாக உலகத்தின் வலிய ராஜ்யங்களில் ஒன்றாயிற்று. இப்பெரும் மாறுதலுக்குக் காரணம் என்ன? இக்காலத்திய ஜப்பானிய சரித்திரத்தில் இந்து தேசத்தார் கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள் எவை?

# III

## ஜப்பான் தேசத்தார் பழக்க வழக்கங்கள்.

ஜப்பானியர் மங்கோலியர்; மஞ்சள் வர்ண ஜாதியைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்குக் கறுத்த, வணங்காத தலைமயிரும், சொற்ப மீசையும், பெருத்த கன்னத்தெலும்புகளும், ஓர்பக்கம் சரிந்த கண்களும் உண்டு. இந்துக்களைவிடக் குட்டையும், அகன்ற மார்பு உடையவர்களும், பருமனுமானவர்கள். ஒரு ஐரோப்பியனுடைய நிறை சுமார் 144 பவுண்; ஒரு ஜப்பானிய வாலிபனின் நிறை 121 பவுண். ஆயினும் அவர்கள் கடினமாய் உழைக்கக்கூடிய பலசாலிகள். ஜப்பானியரின் உற்பத்தியைக் காட்டத்தக்க இருவித ரூபமுடையவர்களிருக்கிறார்கள். மேற்குலத்தவர் வெளுத்த நிறமும், மெலிந்த தேகமும், உருண்டை முகமும், சிறு மச்சம்போன்ற கண்களும் உள்ளவர்கள். தேக வலியில் சற்றுக் குறைந்தவர்களாகத் தோன்றினும் புத்திக்கூர்மையுள்ளவர்கள். மற்றச் சாமான்னிய மனிதர் குட்டையும், பருமனும், பலமுமுள்ளவர்கள். அதிக மஞ்சளும், சப்பை முகமும், அகன்ற மூக்கும், பெரிய வாயும், மந்த புத்தியுமுள்ளவர்கள். இவர்கள் இந்துக்களைவிடப் பலசாலிகளாயிருந்தும் முகத்தில் ஞானத் தோற்றமில்லை.

முற்காலத்தில் ஜப்பானியர் சாமுராய் (போர்வீரர்), குடியானவர்கள், கைத்தொழிலாளர், வர்த்தகர் என நான்கு வகுப்பினராயிருந்தார்கள். இவர்களுக்கும் தாழ்ந்தவர்கள் ஈனஜாதியாக எண்ணப்பட்ட எற்று என்பவர்கள். இவர்கள் இழிவான வேலைகளைச் செய்துவந்தார்கள். ஆயினும் மேற்குத் தேச நாகரிகம் தலையெடுக்க ஆரம்பித்தவுடன் இவ்வித ஜாதி வித்தியாசத்தை விட்டுவிட்டார்கள். அதற்குப் பதிலாக ஜனங்கள் பின்வரும் மூன்று வகுப்பினரானார்கள். (1) பிரபுக்கள் 4,000 பேர். இவர்களில் ஐந்து வகுப்பினர் உண்டு. (2) மேன்மக்கள் 20 லக்ஷம். சாமுராய் வகுப்பினரின் பின்னடியாராகிய இவர்கள் ராஜ்யபாரத்தை நடத்திவருகி



ஜப்பான் தேசப் பெருமாட்டி.



ருர்கள். (3) சாதாரண ஜனங்கள் $4\frac{1}{2}$ கோடி. இவர்கள் பயிர்த்தொழிலும் மற்றக் கைத்தொழிலும் செய்யும் உழைப்பாளிகள். ஈனஜாதி யென்று தள்ளப்பட்டவர்கள் யாருமில்லை. கல்வியும் சர்க்கார் உத்தியோகமும் எவருக்கும் பொது. ராஜ்ய சர்வகலாசாலையில் கற்கும் 2,300 பேரில் பாதிக்கு மேற்பட்டவர்கள் சாதாரண ஜனங்களைச் சேர்ந்தவர்கள். தற்கால ராஜ ஆலோசனைச்சபையில் சாதாரண ஜனங்களில் 244 பேருண்டு. அதாவது மேன்மக்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவர்களைப்போல் மூன்றுமடங்கு பேர்.

ஜப்பானியருடைய வீடு மரத்தால் கட்டப்பட்டது. நாட்டுப்புறங்களில் கூரை வேய்ந்திருக்கும்; பட்டணங்களில் ஓடு போட்டிருக்கும். சாமான்னிய வீட்டுக்கு விலை சுமார் ரூ. 300 ஆகும். சுவர் பலகையாகவாவது மூங்கில் அடைப்புமேல் பூச்சுப் பூசியாவது இருக்கும். அதில் தள்ளுதாள் கதவுகளிருக்கும். வீட்டிற்குள் காகிதத் தடுப்புச் சுவரிருக்கும். தரையில் கோரைப் பாய்கள் போடப்பட்டிருக்கும். அந்த அழகிய சுத்தமான அறைகளில் வெகு சொற்ப சாமான்கள் வைக்கப்பட்டிருக்கும்.

ஜப்பானியர் தங்கள் பிள்ளைகள்மேல் அதிக பாசமுள்ளவர்கள். உத்தம கீழ்ப்படிதலே அவர்களுடைய கல்வியின் விசேஷித்த நோக்கம். பெற்றோர்க்குக் கீழ்ப்படிவதும் ராஜபக்தியும் ஜப்பானியரின் முக்கிய குணாதிசயங்கள். ஜப்பான் இவ்வளவு சித்திபெற்றதற்கு இவைகளே காரணங்கள். பிள்ளைகளுக்கு இளக்காரம் கொடுப்பதும் சிறுவயதில் கீழ்ப்படியாமையிற் பழக இடங்கொடுப்பதும் அவர்களுக்கே கேடாய் முடிவதோடு தேசத்தையும் பலட்சயப்படுத்தும். இவ்விஷயத்தில் ஹிந்துக்களாகிய நாம் ஜப்பானியரிடம் கற்றுக்கொள்ளவேண்டியது அதிகம்.

பெண்களுக்கு அதிக சுவாதீனம் உண்டு. அவர்கள் ஆசியாவின் எந்தேசத்தாரையும் பார்க்க மெத்த மரியாதையாய் நடத்தப்படுகிறார்கள். புத்தமதம் வருவதற்குமுன் பெண்கள் அதிக சுவாதீனம் பெற்றிருந்தபோதிலும், அது உட்புகுந்தபின் அது பெண்களின் அபிவிர்த்திக்குப் பெரிய





தடையாய் நின்றது. இச்சந்ததிப் பெண்கள் மேற்கத்தியப் பெண்களைப்போல் கண்யமாய் நடத்தப்பட்டு வருகிறார்கள். பெண் கல்வியும் மிகுதியாய்ப் பரவி வருகிறது. இந்தியாவில் நூற்றுக்கு ஒரு பெண் கல்வி கற்க, ஜப்பானில் 100–க்கு 30 பெண்கள் படிக்கிறார்கள். இங்கிலாந்தில் கலியாணஞ் செய்யத் தகாதென எண்ணப்படும் முறைகள் இங்கேயும் அவ்வாறே எண்ணப்படுகின்றன. ஆண்கள் 17 வயதுக்கு மேலும் பெண்கள் 15 வயதுக்கு மேலும் கலியாணஞ் செய்துகொள்ளலாம். கிறிஸ்தவர்க்ளும் பெண் கல்வி



ஜப்பானியரின் உடுப்பு.

யும் ஜப்பானுக்குள் வருவதற்குமுன் இருந்த பெண்களின் ஸ்திதியை "ஜப்பான் மெயில்" என்ற பத்திரிகையின் பத்திராதிபர் (ஓர் அமெரிக்கன்) பின்வருமாறு எழுதுகிறார்:— (இவர்தாமே ஒரு ஜப்பானிய பெண்ணை மணம்புரிந்திருக்கிறார்.) "ஜப்பானிய ஸ்திரீ பற்பலவிஷயத்தில் சிறப்புற்றவளாயினும் தேசத்தின் கல்வி, சாஸ்திரம், ஞானம் முதலியவற்றில் அவளுக்கு அணுவளவும் தெரியாது. இதனால் அவள் புருஷனுக்கு ஆலோசனை கொடுப்பதற்கு முற்றும்

தகுதியற்றவளாவதனால் அவன் அவளை அவமதிக்கிறான்." ஜப்பான் அபிவிர்த்தியடைவதற்கு முக்கிய சாதனங்களில் பெண் கல்வி ஒன்று. மனைவிகளும் மாதாக்களும் அறிவினமும் அவபக்தியுமுடையாராய் நிற்கப்பெற்ற எந்தத் தேசமும் முன்னுக்கு வருவது அசாத்தியம். தற்காலத்திய பெண்கள் முகத்தழகும் இன்ப நடையும் உடையவராய் இருப்பது போல், கல்வி நாகரிகமென்ற அகத்தழகிலும் சிறந்து நிற்கிறார்கள். இந்த ஜனம் அபிவிர்த்தியடைந்தது ஆச்சரியமேயல்ல.



ஜப்பானியரின் உடுப்பு.

ஜப்பானியரின் உடுப்பு வெகு மரியாதையானது. கழுத்தண்டை திறப்புள்ளதும் இடையில் பட்டுக்கச்சை கட்டப்பட்டதுமான ஒரு பெரிய பட்டு அல்லது துணி அங்கியும், சிறு மேல்ஜோடுகளும், மரம் அல்லது வைக்கோல் மிதியடியுமே அவர்கள் உடுப்பு. இவ்வித உடுப்பு உடுத்தி வேலை செய்வது சற்றுக் கஷ்டமானதையால் உத்தியோகம் பார்ப்பவர்களும், கற்றவரில் பெரும்பான்மையோரும் ஐரோப்பிய உடுப்பு உடுத்திக்கொள்ளுவார்கள்.



ஜப்பானியரின் சாப்பாடு சாமான்னியமாயினும் பலமுள்ளது. நகரவாசிகளும் தனவான்களும் சாதாரணமாய் நெல்லரிசிச் சாப்பாடு சாப்பிட்டாலும், நாட்டிலுள்ள சாதாரண ஜனம் சோளம், கோதுமை, கம்பு முதலியவற்றைப் புசிக்கிறார்கள். "30 வருஷத்துக்குமுன் பத்தில் ஒருவன்தான் சோறு சாப்பிடக்கூடும்; இப்போதோ பத்தில் ஆறுபேர் தினம் ருசிகரமாய்ச் சமைத்த சோறு சாப்பிடக் கூடாவிட்டால் அதை ஒரு பெரிய துன்பமும் வறுமையுமென்றெண்ணுகிறார்கள்." (Japan Mail.)

ஜனங்கள் பொதுவாய் மரக்கறி சாப்பிடுவார்கள். அரிசியும் வள்ளிக்கிழங்கோடு சமைத்த மீனும், பாலும், கத்தரிக்காயும், மற்றக் காய்கறி கனிகளும் அவர்களின் அன்றாட போஜனம். கோழிக்குஞ்சு, மாடு, பன்றி முதலியவற்றையும் அடித்துப் புசிப்பார்கள். அவர்கள் தேயிலைத்தண்ணீர், சாக் என்னும் பானம் என்பவற்றைத் தண்ணீரைவிட அதிகமாய்ப் பானஞ்செய்வார்கள். சாக் என்பது அரிசியிலிருந்து கடச்சுட்டெடுக்கப்படும் ஓர் லாகிரிப்பானம். ஜப்பானியர் சீன தேசத்திலிருந்து தேயிலை இறக்குமதி செய்து எந்நேரமும் தயாராய்க் காய்ச்சி வைத்து, ஒருநாளைக்குப் பலதடவை குடிப்பார்கள்.

அவர்கள் பாயில் மண்டிபோட்டு அல்லது முழங்காலிலிருந்து மணைமேலாகிலும் தட்டிலாகிலும் சாப்பாடு வைத்துச் சாப்பிடுவார்கள். குடிக்கும் பாத்திரங்கள் மா எண்ணெய் பூசிப் பளபளப்பாயிருக்கும். அவர்கள் வலதுகை விரல்களுக்கிடையே இரு குச்சிகள் பிடித்து அவற்றின்மூலமாய் வெகு சீக்கிரம் சாப்பிட்டுவிடுவார்கள்.

உலகத்தில் ஜப்பானியரைப்போற் சுத்தமுள்ளவர்கள் யாருமில்லை. டோக்கியோவில்மாத்திரம் 800 ஸ்நானத்துறைகள் உண்டு. தினம் அவற்றில் 300,000 பேர் ஸ்நானஞ்செய்வார்கள். புறத்தேசத்தாருக்கு அத்தண்ணீர் தாங்கக்கூடாத சூடாயிருக்கிறதாம். இவற்றைவிட ஒவ்வொரு பெரிய மனுஷர் வீட்டிலும் ஸ்நான அறை இருக்கும்.

ஜப்பானியரின் விநோத விளையாட்டுக்கள் பலவிதமானவை. சுபாவத்திலேயே அவர்கள் சந்தோஷமும் உற்சாகமுமானவர்கள். காற்றாடி விடுதல், சிலம்பம், குஸ்தி, பாத-பந்து, சுற்றுப்பந்து விளையாட்டுக்கள் முதலியவை வாலிபரின் சாதாரண விளையாட்டுக்கள். பெரியவர்கள் மிச்சமாய் 'சதுரங்கம்' விளையாடுவார்கள். பரிச்சேதம் சூதாடக்கூடாது என்பது ராஜ்ய நீதி. வெளியில் சென்றுலாவுவது ஜப்பானியருக்கு அதிகம் பிரியம். அவர்கள் அங்குள்ள அழகிய பூங்காவனங்களில் கூட்டங் கூட்டமாய் உலாவித் திரிந்து, நறுமலர்களைக் கண்டு பூரித்து, கானருங் காட்சிகளைக் கண்டு களித்து இன்புறுவார்கள். அவர்களது புறம்பான நடை உடைகளையும் பழக்க வழக்கங்களையும் கவனித்த நாம் அவர்களுடைய உள்ளான குணாதிசயங்களைச் சற்றுப் பார்ப்போம்.



## ஜப்பானியரின் குணாதிசயங்கள்.

(1) திறந்த மனம்.—இதுவே அவர்களது குணாதிசயங்களில் முக்கியமானதும் அவர்கள் அபிவிருத்திக்கு விசேஷித்த காரணமுமானது. ஜப்பானுக்குள் எண்ணிறந்த புறத்தேச போதகாசிரியரை வரவழைத்ததுமன்றி; கல்வி கற்கும்படி தன் தேசத்து யௌவனர்களில் ஏராளமானவர்களை மேற்குத் தேசங்களுக்கு அனுப்பிற்று. புத்தமதம் தாங்கள் அனுசரித்து வந்த ஷின்டோமதத்தைவிட விசேஷித்ததெனக் கண்டவுடன் அவர்கள் புத்தமதத்தை அனுசரிக்கத் துவங்கினார்கள். கன்பூஷிய மதத்தின் உத்தம சன்மார்க்கப் போதகங்களைக் குறித்துக் கேள்விப்பட்டவுடன் அவற்றையும் அனுசரித்துவந்தார்கள். இதேவிதமாய்க் கிறிஸ்துமார்க்கத்தையும் திறந்த மனதோடு ஏற்றுக்கொண்டார்கள். சாஸ்திரத்திலும் மற்றக் கல்வித்துறைகளிலும் உண்டாகும் நூதன கோட்பாடுகளை ஆவலோடு கேட்டுப் படித்தார்கள். "தப்பிதத்தை ஒத்துக்கொண்டு பாரபக்ஷமின்றிக் காரியங்களை நிதானிக்கும் புத்தியும் திறந்த மனதும் ஜப்பானியருக்கே இயற்கையாய் அமைந்துள்ளது." தங்களைச் சூழ்ந்துள்ள விஷயங்களில் உண்டாகும் வேறுபாடுகளை உய்த்துணரும் கூர்மையும், அவற்றிற்கேற்க அவர்கள் நடத்திக்கொள்ளும் நேர்மையான மாதிரியும், உலகத்தில் அவர்கள் என்றும் நிலைநிற்க அவசியமான முக்கிய குணாதிசயங்களே. "அடிமையுமாகாதே, அதனைப்பிரசங்கியுமாகாதே; புறத்தேசத்தார் அந்நியராய் இருப்பதால் அவர்களை விரோதித்து அவர்களுக்கு விரோதமாகக் கட்சி கட்டாதே; மனிதரை அவர்கள் ஜாதியைப் பார்த்தல்ல, அவர்கள் நடக்கையின்படி நிதானி" என்பது அவர்கள் நீதிகளில் ஒன்று. சீனர் இதுவரையும் எதற்கும் இணங்கா முரட்டுக் கழுத்துள்ளவர்களாயிருக்க ஜப்பானியர் புதிய சீர்திருத்தங்களுக்கு ஞானமாய் இணங்கி இத்தனை மேன்மையடைந்தார்கள்.

(2) புத்திக் கூர்மை.—ஜப்பானியர் கூர்புத்தியும், வெகு சீக்கிரம் உய்த்துணரும் சாமர்த்தியமும், கெட்டியான ஞாபகசக்தியும் உடையவர்கள். இதுவரையும் அவர்கள் காரியங்-





களை ஆராய்ந்தறிவதிலும், சாஸ்திர ஆராய்ச்சியிலும் வெகு குறைவாயிருந்தார்கள் என்பது மெய்யே. இதனால் அவர்களுக்குப் புத்திக் குறைவென்று சொல்லலாகாது. இக்குறைவு பெரும்பாலும் அவர்களைச் சூழ்ந்த பல காரியங்களினாலும், அவர்கள் இதுவரையில் கற்பிக்கப்பட்ட குருட்டுத்தனமான போதனாமுறையினாலும் நேர்ந்தது. நவீன சாஸ்திர நூல்களைக் கற்றுத் தேறும் ஜப்பானிய மாணாக்கரின் கெட்டிக்காரத்தனமே அவர்கள் புத்திக் கூர்மையை நிரூபிக்கும். சீனரைப்போல் ஆழ்ந்த அறிவுடையவர்களல்ல, இந்தியரைப்போல் அத்தனை கூரிய புத்தியும் ஆலோசனையுமுடையவர்களல்ல. நம் தேசத்தாரைப்போல் தத்துவசாஸ்திர ஆராய்ச்சியிலும், மார்க்கவிஷயங்களிலும் அவ்வளவு நாட்டமுடையரல்லர். அவர்களோ வயதுக்கு மிஞ்சின புத்திக் கூர்மையும் அனுதின அனுபவவிஷயத்தில் விசாலித்த அறிவும் உடையவர்கள்.

(3) **தேசாபிமானம்.**—தம் அரசனிடத்துள்ள அன்பும் தம் சொந்த நாட்டிற்காக அவர்கள் பாராட்டும் பெருமையும் தெய்வ வணக்கத்திற்குச் சமமாகும். இச்சமயத்தில் அதற்கும் மிஞ்சிப்போம். முற்காலத்தில் தங்கள் கட்சிக்காகவும் தங்கள் மாகாணத்திற்காகவும் பக்தி வைராக்கியம் பாராட்டிய இவர்கள் இப்போது அதை விட்டு ராஜ்யத்தையே தங்கள் மதிப்புக்குரிய முதற்பொருளாக எண்ணுகிறார்கள். ஒருவன் தன் மாகாணத்திலுள்ளவர்களைக் கொடுமைக்கும் கேட்டுக்கும் விலக்கி மீட்கத் தன் ஜீவனையே கொடுத்தான். அவனை ஒரு சிலுவையில் அறைந்து துன்பப்படுத்தும்போது அவன்: "எனக்கு ஐயாயிரம் உயிரிருக்குமானால் அவற்றையெல்லாம் என் மாகாணத்திலுள்ளவர்களுக்காகக் கொடுப்பேன்" என்று தைரியமாய்ச் சொல்லி மரித்தான். ராஜபக்தி அவர்களுக்குள் மகா மேன்மையான புண்ணியமாக மதிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஜப்பானியனும் தன் தேசத்திற்கென்றே பிறக்கிறான், அதற்கென்றே ஜீவிக்கிறான், அதற்கென்றே மரிக்கிறான். ருஷியரோடு நடந்த யுத்தத்தில் தங்கள் சொந்தத் தேசத்திற்காகத் தாங்கள் முன்னின்று யுத்தம் செய்ய இடம்பெறாததின் நிமித்தம் சில ஜப்பானியர் தற்கொலை புரிந்துகொண்டார்கள்.

போர்ட் ஆர்தர் என்ற துறைமுகத்தின்மேல் எடுத்த மகா மோசமான படையெழுச்சிக்காகச் சேனை சேர்த்தபொழுது, தங்களுக்கு உயிர்ச்சேதமுண்டாவது மகா நிச்சயமாயிருந்த போதிலும் எண்ணிறந்தபேர் தங்களுக்கு இச்சிலாக்கிப் புரிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள்.

ஒருவன் தன் ஜாதியாருக்காகத் தன்னை ஒப்புக்கொடுக்க ஆயத்தமாயிருந்தாலன்றி அத்தேசம் அபிவிர்த்தி யடையுமென்று சிறிதும் நம்பமுடியாது. தேசமுழுதும் உயர் பதவி யடையும்படி தங்களுக்குள் இருந்த பேதங்கள் யாவையும் விட்டுவிட்டார்கள். இதுவே உண்மையான தேசாபிமானம்.

(4) **காரியத்திலே கண்.**—தத்துவ சாஸ்திர ஆராய்ச்சியில் நாட்டமற்ற இவர்கள் யந்திரவேலையில் மிக வல்லமையுடையவர்களாய்த் தங்கள் புத்தியை எவற்றையும் நல் உபயோகப்படுத்துவதெப்படி என ஆராய்ந்துவருகிறார்கள். அவர்கள் பேசுவது சொற்பமே; ஆனால் அவர்கள் அப்பியாசிப்பது அதிகம். அவர்கள் சாதுரியப் பிரசங்கிகளல்ல, ஆயினும் எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிக்கும் வல்லமை உடையவர்கள். பாவத்தின் உற்பத்தி, ஜீவியத்தின் உள்ளான தன்மை, மானிட துன்பத்திற்குக் காரண முதலிய தத்துவ சாஸ்திரங்களிற் சற்றும் நாட்டமில்லாதவர்கள். சேனை, கப்பற்படை, வர்த்தகம், கைத்தொழில் முதலிய விஷயங்களை ஆவலாகக் கற்று, செல்வப்பெருக்கும் கொண்ட ஆஸ்தியும் மிகுந்த ஜாதியாகிறார்கள்.

(5) **ஆசை.**—அவர்கள் தங்களைக்குறித்து சொல்லப்படும் குறை குற்றங்களைப்பற்றி வெகு ரோசமுடையவர்களாய் மற்ற எவரும் தங்களை எவ்விஷயத்திலும் வெட்டிக்கொள்ளக் கூடாதென விரும்புகிறார்கள். பூர்வ மேன்மையினால் அவர்கள் திருப்தி ஆகாமல் அதிலும் அதிக மேன்மையானவற்றைத் தாங்கள் செய்யவேண்டுமென்று முயற்சிக்கிறார்கள். தங்கள் துர்க்குணங்களுக்கு மூலமாக 'வழக்கம்' என்னும் சாக்குப்போக்குச் சொல்லாமல் அபிவிர்த்தியடையவே கண்ணுங் கருத்துமாக இருக்கிறார்கள். ஒவ்வொருவனும் தன் தன் சுய



ஜப்பான் தேசத்துச் சக்கரவர்த்தி.

மென்மையைத் தேடுவதோடு, ஜாதி முழுவதுமே தன் நலத்தை விரும்பி அதற்கென்று உழைக்கிறது. அவர்கள் அளவில் சிறியராயினும் புத்தி விசாலமும், பெரிய காரியங்களை நிறைவேற்ற வேண்டுமென்னும் அவலும் உடையவர்கள், தாங்களே எதையும் செய்துமுடிக்கக் கூடியவர்களென்னும் சுய நம்பிக்கை படைத்தவர்கள்.

(6) **வீரம்.**—இது ஜப்பானியரின் மற்றொரு குணாதிசயம். மரணத்துக்குச் சற்றும் அஞ்சாதவர்கள். அவர்கள் யாவும் விதியின்படி ஆகுமென்றெண்ணுவதினாலும், மானிட ஜீவியம் மிகவும் அற்பமென்று நினைப்பதினாலும் தங்கள் விசுவாசத்திற்கென்று மரிக்க அநேகர் ஆவலாயிருக்கிறார்கள். தற்கொலை வெகு சாதாரணம்; வருஷவாரி ஜப்பானில் இவ்வாறு மரிப்பவர்கள் ஏறக்குறைய 7,000 பேர். அற்ப காரணத்தின் நிமித்தமும் ஒருவன் தன் உயிரைப் போக்கிக்கொள்வான். இடதுபக்கத்து அடிவயிற்றில் கத்தியால் ஆழக் குத்தி வலது பக்கம்வரையும் கீறிக் கிழித்துக்கொள்வதே சாதாரணமாய் அவர்கள் தற்கொலை புரிந்துகொள்ளும் வழி. இதற்கு 'ஹாரகிரி' என்று பேர். இது சாமுராய் ஜாதியாரின் பூர்வ வழக்கம். இப்பொழுது இவ்வழக்கம் அற்றுப்போயிற்று. பூர்வகாலத்தில் எஜமான்கள் கொல்லப்பட்டபோது ஆயிரக்கணக்கான அவர்கள் வேலைக்காரர் தற்கொலை செய்துகொண்டார்கள். ஜப்பான் தேசக் கதைகளில் தற்கொலைகள் சாதாரணம். கிறிஸ்துமார்க்கத்துக்காகவும் புத்தமதத்திற்கென்றும் எண்ணிறந்த இரத்தசாக்ஷிகள் மரித்தார்கள். தங்கள் விசுவாசத்தை விடுவதைப்பார்க்கிலும் உயிர் துறப்பது வாசியென்று ஆயிரக்கணக்கானபேர் மாண்டார்கள்.

(7) **அலங்காரப் பிரியம்.** — இயற்கைப்பொருளை ஜப்பானியர் மிகவும் விரும்புகிறார்கள். ஜப்பானியர் மற்ற எந்த ஜாதியாரையும்விட அழகைக்குறித்து அபிப்பிராயஞ் சொல்வதில் தேர்ந்தவர்கள். புஷ்பங்கள்மேல் பிரீதிகொள்வதிலும், அழகிய தோட்டங்கள் அமைப்பதிலும், வர்ணம் பூசுவதிலும், சோடனை செய்வதிலும் இவர்களுக்கு மிஞ்சினவர் யாருமில்லை. இவர்கள் புத்தழகைக் கண்டு மயங்கும் பெண்





ஜப்பானியரின் தேசக் காட்சித் தோட்டம்.

புத்தி படைத்தவர் என்று லாட் சாஸ்திரியார் சொல்லுகிறார். சாமான்னிய கூலிக்காரனும் சூரியோதய அதிசயக் காட்சியைக் கண்டு களித்து வெகுநேரம் அசைவின்றி நிற்பதையும், ஓர் அழகிய மலரைக் கண்டு ஆனந்தக்கண்ணீர் விடுவதையும் அடிக்கடி காணலாம். "ஜப்பானியர் ரசஞ்ஞானத்தில் தேர்ந்திருக்க, சீனர் தருமசாஸ்திரத்தில் விர்த்தியடைந்திருக்கிறார்கள்" என இரிவ்லஸ் சாஸ்திரியார் சொல்லுகிறார்.

(8) மரியாதை.—ஜப்பானியரைக் கீழ்த்தேச பிரான்சுக்காரர் என்னலாம். உலகத்தில் மரியாதை செய்வதில் முதன்மையான ஜாதிகளில் இது ஒன்று. அவர்கள் மரியாதையும், பட்சமும், தாக்ஷிண்ணியமும் உள்ள ஜாதி. ஆயினும் அது உபசாரப்பேச்சும் தாழ்ந்த தலைவணக்கமும் மிகுந்த புறம்பான ஆசாரம் அதிகமுள்ள ஓர் முறை. ஜப்பானும் இந்தியாவும் மரியாதையிலும் பட்சத்திலும் மேற்குத்தேசங்களை மிஞ்சி நின்றாலும் ஜப்பான் இந்தக்குணங்களில் இந்தியாவைப்போல் அத்தனை தேர்ச்சியடைந்ததல்ல என்பது நமது அபிப்பிராயம். ஜனசங்க விஷயங்கள் யாவும் ஆசார முறைப்படியே நடத்தப்படவேண்டும். இரண்டு சிநேகிதர் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது சாதாரணமாய் நடக்கும் சம்பாஷணைக்குப்பின் வருவது ஓர் உதாரணம். தன்னைக்குறித்துத் தாழ்வாகவும் மற்றவனைக்குறித்துப் புகழ்ச்சியாகவும் பேசுவது அதன் ஒழுங்கு. இருவர் ஓர் தெருவில் சந்திக்க, தொப்பியைக் கழற்றி, தாழ்ந்து வணங்கி, பின்வருமாறு சம்பாஷிப்பார்கள்:—

"A.—தங்கள் மகத்தான கண்களில் எனக்குக் கிடைத்திருக்கும் சிலாக்கியம் எனக்கு வெகுநாளாய்க் கிடைக்கவில்லை. தங்களின் மகிமையான சுகமெப்படி?

B.—அடியேன் சௌக்கியம். தங்கள் ஞாபகத்திற்காக மிகுந்த வந்தனம்.

A.—கனம்பொருந்திய தங்கள் மனைவியாராகிய மாட்சிமையுள்ள மாது சௌக்கியமா?

B.—ஆம், வந்தனம், சோம்பேறிக் கிழவி சௌக்கியமே.



A.—தங்களின் ராஜபுத்திரரின் சுகமெப்படி?

B.—ஆயிரம் வந்தனம்! அந்த அமளிபண்ணும் அசுத்தக் குட்டிகளும் சுகந்தான்.

A.—நான் இப்பொழுது பின்பக்கத்திலுள்ள ஓர் சிறிய சந்தில் வசிக்கிறேன். என் வீடு மகா சிறிதும் அசுத்தமுமாயிருக்கிறது. ஆயினும் தாங்கள் அதைப் பொறுத்தருள்வீர்களானால் தயவுசெய்து தங்கள் பிரசன்னத்தால் என்னை மகிமைப்படுத்தக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

B.—நான் அதற்கேற்ற வந்தனமளிக்க இயலாதவனாயிருக்கிறேன். தங்களுடைய மேன்மையான மாளிகைக்குச் சீக்கிரம் வருவேன். தங்கள் உதாரத்துவம் இன்பமற்ற என் வரவினால் அபாயமுறுமெனப் பயப்படுகிறேன்.

A.—நான் போவதால் தங்களை அவமரியாதை செய்கிறேன்போலும்.

B.—அப்படியானால் எனக்கு மன்னியுங்கள்."

(9) சந்தோஷம்.—அவர்கள் கவலையற்ற ஜனங்கள். பொதுவாய்ச் சந்தோஷமாகவே இருப்பார்கள். அவர்கள் இந்துக்களைப்போல் ஆழ்ந்த யோசனைக்காரருமல்ல, சீனரைப்போல் கவலையுள்ளவர்களுமல்ல. ஆயினும் சில ஜாதியாரைவிடச் சந்தோஷமாயிருக்கிறார்கள். பொதுவாய்த் தங்களுக்குள்ள கொஞ்சத்தில் திருப்தியாகி கவலை தொல்லை சிறிதுமற்று விதிப்படி ஆகுமென்று மிகுந்த கவலைத்தீர்ச்சியுடையவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் சுயநயமின்றி மற்றவர்களுக்காகக் கவலைப்பட்டு உதாரத்துவம் காட்டுகிறார்கள். எவற்றிலும் இன்பத்தையல்ல துன்பத்தையே காணும் புத்தமத சப்பாஷம் சாந்தியாச மடங்களிலே மறைந்துகிடக்க, விளையாடும் சிறு பிள்ளைகளைப்போல் சந்தோஷமாய், மரங்களினிடையே மலர் கொய்து மனமகிழ்ச்சியடையும் ஜப்பானியரின் இன்பமுகத்தை எங்கும் காணலாம். அவர்களுடைய புஸ்தகங்களிலும் அவர்களோடு செய்யும் தனிச் சம்பாஷணைகளிலும் சஞ்சலமும் விதிப்பயனும் அவர்கள் மனத்தைப் பாரப்படுத்திய விஷயங்களென்று காணலாம். ஆயினும் இது

புத்தமதத்தின் பயனையன்றி ஜனங்களின் இயற்கைக் குணமன்று. மற்றத் தேசத்துப் புத்தர்களைவிட இவர்கள் அதிக சந்தோஷமாயிருக்கிறார்கள்.

(10) **மற்றவர்களைப் பார்த்து நடத்தல்.**—இவர்கள் பொதுவாய் மற்றவர்களின் மாதிரியைப் பின்பற்றுவார்களேயன்றித் தாங்களாய் ஓர் புதிய மாதிரி வைக்கவும், புதிய பாதை கண்டுபிடிக்கவும் கூடாதவர்கள். ஆயினும் அவர்கள் குருட்டுத்தனமாய் மற்றவர்களின் மாதிரியின்படி நடவாமல், மற்ற மாதிரிகளைத் தங்கள் அவசியத்திற் கேற்றபடி மாற்றிக்கொள்ளக் கூடியவர்கள். உலகத்திலுள்ளவைகளில் மகா உத்தமமானவைகளைத் தேடி அவைகளைத் தங்களுடையவைகளாக்கிக்கொள்ளுகிறார்கள். ஆயினும் அவற்றில் நல்ல மாறுதல் செய்யாது அவைகளை அவர்கள் அநுசரிக்கிறதேயில்லை. புறத்தேசத்தாருடைய பழக்க வழக்கங்களை அவர்கள் அவமதிக்கிறதுமில்லை. நன்மையான எந்த விஷயத்தையும் அவைகள் புறத்தேசத்தாருடையதாயிருப்பதுபற்றித் தள்ளிவிடுகிறதுமில்லை. தங்கள் பாரம்பரியங்களில் நலமானவற்றைப் பிடித்துக்கொண்டு மற்ற ஜாதியாரிடத்திலிருந்து கற்கக் கூடியவைகளைக் கற்கப் பிரயாசப்படுகிறார்கள். சேம்பர்லேன் சாஸ்திரியார் சொல்லுகிறதாவது:—"ஜப்பானியர் மற்றவர்களைப் பார்த்து நடக்கிற ஜாதியென அவர்கள்மேல் தற்காலத்தவர் குறைகூறுவது நியாயமே. அவர்கள் இப்பொழுது நம்மைப் பார்த்து நடக்கிறதென்பது உண்மையோ அவர்கள் 1500 வருஷத்திற்குமுன் அவர்கள் சீனரையும் கொரியரையும் பார்த்து நடந்தார்கள் என்பதும் உண்மை. மதம், தத்துவசாஸ்திரம், நியாயசாஸ்திரம், அரசாட்சிமுறை, எழுத்து, மகா சாமான்னியமான வித்தைகள்தவிர மற்றச் சகல வித்தைகள் சாஸ்திரங்களென்று அக்காலத்தில் சொல்லப்பட்ட சகல சாஸ்திரங்கள் யாவும் பக்கத்துக் கண்டத்திலிருந்தே இத்தேசத்துக்கு வந்தது. ஆகவே பூர்வ ஜப்பானுக்குரியதென்று நாம் கூறுவதில் நூற்றுக்கு ஒன்றுகூட சரியானபடி அவர்களுடையதே அல்ல. தங்கள் பட்டையும் லாக்கர் சாயம் பூசிய பதார்த்தங்களும் இவர்கள் கண்டுபிடியாததனால் நியாயப்படி இவர்களுடையதல்ல. அவ்வாறே அவர்கள் சித்திரங்களும் மண்



வேலைகளும், சங்கீத வித்தையும், அவர்கள் பாஷையுங்கூட அவர்களுடையதல்ல. ஏனெனில் ஜப்பானர் பாஷை விபரீதமாய் உச்சரிக்கப்படும் சீன பதங்கள் நிறைந்துள்ளது. ஆயினும் ஐரோப்பியர் இவர்கள் சுயாதீனமாய் இவ்வளவு நேர்த்தியான சித்திரங்களை எழுதினரென்று இவர்களைப் புகழுவதுண்டு. தங்கள் தேசத்திலுள்ள இடங்களுக்குச் சீன பாஷையினின்றே பேரிட்டுத் தங்கள் பூர்வ தெய்வங்களுக்கு அவர்கள் பாஷையினின்றே புதிய நாமங்களிட்டார்கள்."

கூலிக் பண்டிதர் சொல்லுவதாவது:—"மற்ற ஜாதியாருடைய அநுபவங்களையும் ஆலோசனைகளையும் வெகு நன்றாய் வகையறுத்துக் கற்கக்கூடிய ஜாதியார் யாரோ அவர்களை நெடுங்காலம் தழைத்தோங்கக்கூடிய ஜாதி. ஜப்பான் மற்ற எந்த ஜாதியையும்விட அபிவிருத்தியடையுமென்பதற்குச் சந்தேகமில்லை. தற்காலத்திய ஜாதிகளில் எவரும் செய்யாத விதமாய் இவர்கள் ஒன்றுக்கொன்று விரோதமாகத் தோன்றும் மேற்கு, கிழக்குத்தேச நாகரிகங்களையும் பாஷைகளையும் ஒன்றாகச் சேர்க்கிறார்கள். மற்றெவரையும்விட அன்றாடக ஜீவிய மாதிரியிலும், உடையிலும், பாஷையிலும், ஆலோசனைகளிலும், பிரமாணத்திலும், விநோத விளையாட்டுகளிலும், அநேகவிதங்களை அநுசரித்து இன்பமடையக் கூடியவர்கள். வித்தியாசமான பாஷைகளும், பழக்க வழக்கங்களும், ஆலோசனையும், மதமும் மிகுந்துள்ள இத்தேசம் மேற்கு, கிழக்குத்தேச நாகரிகங்கள் கலக்குமிடமாகையால் இன்னும் கொஞ்சக்காலத்துக்குள் மகா ஆச்சரியப்படத்தக்கவிதமாய் ஐசுவரியத்திலும் பலத்திலும் அதிகரிக்கும் என்று நிச்சயிக்கப் போதிய நியாயங்களுண்டு."

ஜப்பானியரின் குணவிசேஷங்களைப்பார்த்த நாம் அவைகளில் எத்தனை நமக்குண்டு என்று நம்மையே சோதித்துக் கொள்வது நலம். நமது பெருங்குறை எது, நமது சிறந்த நற்குணமெது? நாம் நம்மை ஐரோப்பியரோடும் ஜப்பானியரோடும் ஒத்துப்பார்த்து அவ்விருவரிடமிருந்தும் நாம் கற்கத்தக்கவை என்னவென்று பார்ப்போம்.

---

## ஜப்பானியரின் நற்குண நற்செய்கைகள்.

இது அவர்கள் புத்தி சாமர்த்தியத்தைப்போல் அத்தனை சிறந்ததன்று. ஆயினும் கன்பூஷிய மதமும் புத்தமதமும் அவர்கள் நடக்கையை செவ்வழிப்படுத்துவதில் மிகப் பிரயோஜனமாயிருந்தன. நாம் கவனிக்கத்தக்க விசேஷ குணவிஷயங்களாவன:—

(1) **ராஜபக்தி.**—பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து உம்பிரிக்கைகட்டு பிரமாண அளவத்தில் தங்கள் கூதிக்கும் பிறகு அரசனுக்கும் உண்மைப்பட்டு, இப்புதிய சீர்திருத்தக்காலத்தில் ராஜபக்தி என்னும் நற்குணத்தை அவர்கள் தங்கள் மதத்தினால் காத்துக்கொண்டார்கள். அவர்களது சன்மார்க்க சாஸ்திரத்துக்கு அஸ்திபார சற்குணம் இதுவே. ஜப்பானியர் ஒவ்வொருவரும் தன் தன் நலத்தைக் குறித்தல்ல, ஜனசங்க நலத்தைக் குறித்தே எண்ணுவார்கள். பழைய சற்குணம் கீழ்ப்படிதல்; புதியதோ சுவாதீனம். லவல் என்பவர் சொல்லுகிறதாவது:—"ராஜ்யமென்பது ஓர் பெரிய குடும்பம்; குடும்பமோ ஓர் சிறிய ராஜ்யம். ராஜ்யம் எப்போதும் ஏகாதிபத்தியமுடையதாகவே இருந்திருக்கிறது" என்கிறார்.

(2) **குருபக்தி.**—சீனாவிலும் இந்தியாவிலும்போல் இது இங்குள்ள சன்மார்க்க சாஸ்திரத்திலும் விசேஷித்த தன்மை. இந்தியாவில்போல் குடும்பத்தின் அவயவங்கள் எல்லாம் ஒன்றாய் வசிப்பதுண்டு. பெற்றோருக்கும் தங்கள் குடும்பத்திற்கும் அவர்கள் காட்டும் பாசம் மெச்சி இன்பமும் சம்பத்தில் மனத்தை உருக்குவதுமாக இருக்கும். இதை மேற்குத் தேச ஆசிரியர் மறுப்பதுண்டு; சில சமயங்களில் இவற்றை வெகு நுட்பமாக அநுசரிப்பதால் அடிக்கடி பிள்ளைகளுக்குரிய சிலாக்கியங்களைக் கவனிக்கிறதில்லை. டி. பாரெஸ்ற்று சாஸ்திரியார் இதைக்குறித்துச் சொல்லுகிறதாவது:—"கொஞ்சக்காலத்துக்குமுன் தரித்திரரான சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளைக் கொல்வதும், வயதுப்பெண்களை அசுத்த ஜீவியத்துக்கு விற்றுப்போடுவதும் சகஜம். புதிய சீர்திருத்தச்



சட்டங்களோ பெற்றோரின் அதிகாரத்தை மட்டுப்படுத்தி 30 வயதுக்குமேலான வாலிபரும் 25 வயதுக்குமேற்பட்ட பெண்களும் பெற்றோருக்கு இஷ்டமில்லாதிருந்தாலும் தாங்கள் இஷ்டப்பட்டவர்களை மணம்புரியலாமெனத் தீர்த்தது. பிள்ளைகள் நிறைவேற்றவேண்டிய கடமைகளன்றி அவர்களுக்குச் சில சிலாக்கியங்களும் உண்டென்பது பூர்வ குடும்ப ஜீவியத்திற் காணப்படாத நவீன சீர்திருத்தம்."

(3) **தன்னடக்கம்** என்னும் சற்குணமும் அவர்கள் முன்னோரிடமிருந்து அவர்களுக்கு வந்த சுதந்தரம். புத்தமதமும் சாமுராய் ஜாதியார் அநுசரித்த புஷிடோ (Bushido) கொள்கைகளும் கற்பித்த முக்கிய சன்மார்க்கம் இது. இவர்கள் இச்சற்குணத்தினாலல்லவோ பெரும் வீரச்செயல்கள் செய்யக்கூடியவர்களானார்கள். அகத்துள்ள ஆசைகளை வெளியிடாது அடக்கவும் சந்தோஷம் துக்கமுதலிய உணர்ச்சிகளை அடக்கி ஆளவும் திட்டமாய்ப் பயிற்றுவிக்கப்பட்டார்கள். பெருஞ் சஞ்சலத்தையும் பிறரறியாமல் மறைப்பார்கள். அவர்களடக்கமுடைமையை அவர்கள் முகத்திலேயே காணலாம். இரகசியத்தை வெளியிடாது காத்து, தங்களுக்குத் தெரிந்ததெல்லாவற்றையும் அப்படியே மனதில் வைப்பார்கள். அவர்கள் மகா ஆழ்ந்த குணமும் மற்றவர்களிடம் மிகுந்த அடக்கமுமுடையவர்கள். மேற்கு ஜாதியாரைப்போலாகிலும் இந்துக்களைப்போலாகிலும் அபட்டுக் கலகலவென்று பேசமாட்டார்கள்.

நாம் உண்மையுரைக்க உடன்பட்டமையால் இத்தனை நற்குணமிகுந்த இவ்விடத்துள்ள சில குற்றங்களையும் கூறுவது அவசியம். இக்குற்றங்களை அவர்களில் அநேகர் கவனித்துப் பார்ப்பதுபோல் வேறு யாரும் கவனிப்பதில்லை. ஜப்பானிய போதிவாளர் இக்குற்றங் குறைகளை மறையாது ஒத்துக்கொள்ளுவார்கள். அவற்றை நீக்கிவிட அவர்கள் படும் பிரயாசையும் மிகுதி. ஆயினும் ஜப்பானியரோடு சம்பந்தப்பட்ட யாவையும் குருட்டுப்பக்தி வினயமாய்ப் புகழ்ந்து போற்றத் தலைப்பட்டால் அவர்களுடைய குறைவைச் சற்றும் கண்டுபிடிக்க முடியாது. அவர்கள் ஆச்ச

ரியப்படத்தக்கவிதமாய் அபிவிர்த்தியடைந்தது உண்மையாயினும் அவர்கள் கற்கவேண்டியது மெத்த உண்டு. இக்குறைகள் சேர்க்கையால் வந்ததேயன்றி இயற்கையாய் அவர்களுக்குள்ளதன்று. பூர்வ சகவாசக்குறையும் அவர்களைச் சூழ்ந்துநின்ற பற்பல விஷயமுமே இதற்குக் காரணம். ஜப்பான் அபிவிர்த்தியடைய இவை யாவும் ஒழியுமென்பது நிச்சயம்.

(1) லௌகீக சார்மையே ஜப்பானியரின் முக்கிய குறைவு. சீனரைப்போல் இவர்களும் தேவபக்தியைவிட உலகப்பற்று மிகுந்தவர்கள். கன்பூஷிய (Confucian) மதக்கொள்கையினால் இவர்கள் காணக்கூடாத கடவுளை அசட்டைசெய்து காணப்படுவனவற்றை நாடித் தேடி இவ்வுலகிலேயே வாழ்நாளைக் கழிக்கிறார்கள். இவ்வுலகவிஷயத்தில் இத்தனை சீக்கிரமாக அடைந்த ஆச்சரியமான அபிவிர்த்தியை நோக்கும்போது இந்தியா எந்நிலையிலிருந்தாலும் ஜப்பானை வர்த்தக, கைத்தொழில் விஷயங்களில் முந்துவது சந்தேகம். உலகவிஷயத்தில் எத்தனைக்கு ஜப்பான் விர்த்தியடை (சிறந்து விளங்கு) கிறதோ அத்தனைக்கு இந்தியா ஆத்மவிஷயத்தில் விர்த்தியடைகிறது என்பது நமது நம்பிக்கை. அவபக்தியினால் அந்தகாரப்பட்டு, அவிவேகத்தாலும் அபவாதத்தினாலும் மந்தாரப்பட்டுப்போன காலத்திலும் இந்துக்கள் பக்தி அவிந்துபோகவில்லை. ஆத்மவிஷயமே அவர்கள் வேலை. இதுவே இந்தியா உலகத்துக்குச் சொல்லும் நன்மொழி. இந்தியா உலகவிஷயத்தில் ஜப்பானிடம் எவ்வளவு கற்றுக்கொள்ளவேண்டியதோ அவ்வளவு ஜப்பான் ஆத்மவிஷயமாய் இந்தியாவிடம் கற்கவேண்டியதாகும். ஜனசமூக நலத்தின்பொருட்டும் செல்வ பிருதிக்காகவும் உழைத்து, ஜப்பான் மேற்குத்தேசத்தாரிடம் கற்ற கல்விவிஷயங்களை நாம் அவரிடத்தில் கற்க முயலும் இந்தத் தருணத்தில் நாம் நமது உன்னத அழைப்பை மறவாதிருப்போமாக. விலையுயர்ந்த முத்தை இழந்துவிடாதிருப்போமாக. செல்வத்திரளைப் பார்க்க தேவதாபக்தியில் தேர்ந்து, உலக ஆஸ்தியைவிட ஆண்டவரை முந்தத் தேடுவோமாக. சேம்பர்லின் (Chamberlain) சாஸ்திரியார் சொல்லுகிறதாவது: "சீனருக்கும் ஜப்பானியருக்கும்



உள்ள முக்கிய ஒற்றுமை லௌகீகமே. இதுவே அவர்களின் விசேஷித்த பலவீனம். கடவுளைத் தேடும் அறிவு ஜப்பானியரிடம் அவிந்ததற்கு இரு முக்கிய காரணங்களுண்டு.

1. கடவுள் உண்டென்று நம்புவது அபத்தம் எனப் பெரும்பாலும் போதிக்கும் கன்பூஷியக் (Confucian) கொள்கை கடந்த 300 வருஷங்களாக அத்தேசத்தாரின் மனதில் பதிக்கப்பட்டதே அதற்குக் காரணம். கன்பூஷிய (Confucian) போதகம் ஒருவனை நிரீச்சுரவாதியாக்கக்கூடியது.

2. மேற்குத்தேச நிரீச்சுரவாதிகளின் கெடான கொள்கையெல்லாம் அவலோகித்து கற்றுவந்தது மற்றொரு காரணம். தற்காலத்து ஜப்பானிய படிப்பாளிகள் அநேகர் மார்க்கவிஷயத்தில் நிர்விசாரிகளாயிருப்பது வெகு பரிதாபம். தங்கள் மதத்தை அற்பமாக எண்ணுவதும் தெய்வ வணக்கத்தில் வெகு அசட்டையாய் இருப்பதும் அவர்கள் ஜாதிக் குணம். மதம் ஓர் விருந்துக்குச் சமானம்; "குடும்ப நலமே அதனால் கொண்டுபிடும் காரியம்" என்று கனம் புகுசாவா (Fukuzawa) சொல்லுகிறார். ஆயினும் குலிக் (Gulick) சாஸ்திரியார் தற்காலத்து அவபக்தி எதிர்காலத்து மெய்ப்பக்திக்கு முற்குறியென்றும் புத்தமதம் கன்பூஷியமதம் இவற்றால் திருப்தியடையாமல் ஒன்றான கடவுளண்டை ஜப்பானியர் மனந்திரும்புவார்கள் என்றும் கூறுகிறார்.

(2) ஆழ்ந்த அறிவின்மையும் உறுதியின்மையும் அவர்கள்பேரில் சாட்டப்படும் மற்றொரு குறை—வெகுசீக்கிரம் கிரகித்து, உடனே அவற்றைக் கற்பதே இதில் முந்தின குற்றத்துக்குக் காரணம். இலக்கிய நூல்களாவது, தத்துவ சாஸ்திர நூல்களாவது ஜப்பானியர் எழுதத் துணிவதில்லை. இந்திய தத்துவ சாஸ்திர நூல்களையாவது உபநிஷத்தையாவது ஒத்த ஜப்பானிய நூல்கள் யாதுமில்லை. ஜப்பானியர் அன்றாடக ஜீவியத்திற்கு அனுகூலமானவற்றை இயற்றுவதில் இந்துக்களைவிடச் சாமர்த்தியராயிருந்தும் இந்துக்களைப்போல் ஆழ்ந்த யோசனையுடையரல்ல. ஒரே சமயத்தில் அநேக புதிய விஷயங்களைக் கேள்விப்படுவதும், ஒன்றன்பின் ஒன்றாக அவைகளையும் எத்தனிப்பதும் இப்படித்

உறுதி இன்மைக்கு முக்கிய காரணங்கள். சீனருடைய எதற்குஞ் சளியாப் பொறுமையும் உறுதியும் இவர்களுக்கு இல்லை என்றே சொல்லவேண்டும். இவர்களை ஆங்கிலேயருக்கல்ல பிரெஞ்சுக்காரருக்கே ஒப்பிடலாம். தற்சமயம் சீன தேசத்துக்கு ஓர் புதிய உயிர் வந்திருக்கிறது. இப்புதிய கிளர்ச்சி பூரண பக்குவமடையுமாயின், உட்சிவிய வளர்ச்சிக் கனுகூலமானவிஷயத்தில் அது ஜப்பானைவிடச் சிறந்து நிற்கும். ஆ! நமது இந்தியா இப்பந்தயத்தில் தோற்றுப்போகலாமா?

(3) **உண்மைக் குறைவு** ஜப்பானியர்மேல் கூறப்படும் மற்றொரு வசை.— மேல்தேசத்தார் ஜப்பானியரோடல்ல, உண்மையும் உறுதியுமுள்ளவர்களெனப் பேர்பெற்ற சீனரோடேயே வாணிகம் செய்வர். டி பாரஸ்ட் (De Forest) சாஸ்திரியார் சொல்வது: ஜப்பானியருடைய இந்தக் குறைவைத் தாங்களே அறிந்திருக்கும் அளவு மற்றொருவரும் அறியார். சீர்திருத்தமுற்ற ஜப்பானிய சன்மார்க்கப் போதகரைப் போல் இதற்காகத் துக்கிப்பார் அருமை. ஜப்பானிய வர்த்தகர் தங்கள் உண்மைத்தாழ்ச்சியை ஒழித்து, தங்கள் சகல நடபடிக்கையிலும் முற்றும் யோக்கியராக விளங்க வேண்டுமென்று ஜப்பான் தேசப் பத்திரிகைகளில் அடிக்கடி ஆன்றோர் விரும்பி எழுதியதை நாம் வாசித்திருக்கிறோம். வர்த்தகரையும் கம்மாளரையும் நம்ப முடியாது. சர்க்கார் உத்தியோகஸ்தர் உண்மையும் நீதியுமுள்ளவர்கள். பரிதானமென்பது வெகு அபூர்வம். மற்ற தேசத்தாரோடு இவர்களுக்குச் சம்பந்தம் மிகுதி. ஜப்பானியரின் உண்மையின்மைக்கு அவரது பூர்வ சரித்திரமே காரணம். "புத்த உத்தியோகஸ்தர்களைவிட வர்த்தகரும் கைத்தொழிலாளிகளும் வரவர அதிக உண்மையுள்ளவர்களாகி வருகிறார்களென்பது சரித்திரங்களால் தெரியவருகிறது. ஜப்பானியர் வர்த்தகரும், வேளாளருமாகவே அதிக உண்மையுள்ளவர்களாகப் பிரயாசப்படுகிறார்கள். கிறிஸ்துமார்க்கமும் அவர்களை நற்சீருக்குக் கொண்டுவரத் தன்னாலியன்றதைச் செய்கிறது.

(4) **கற்பின்மை** ஜப்பானியருக்குள்ள மிகப் பெரிய குற்றம்.—ராஜ்ய உத்தரவுபெற்ற பரஸ்திரீகளிருப்பது ஜாதிக்கு அவமானம். அதற்குச் சாபம். ஜப்பான் தேச மதங்கள் கடவுள் உண்டென்று ஒப்புக்கொள்ளாததால் சன்மார்க்கத்திற்கான தகுந்த ஆதார விதிகள் அவர்களுக்கில்லை. அரசனது பிரமாணங்களாவது, கன்பூஷிய (Confucian) சன்மார்க்கப் பிரமாணமாவது, புத்தமத தர்மசாஸ்திரமாவது அவர்களைச் சுத்த நடக்கைக்கு ஏவ முடியவில்லை. இதுபோல் அசுத்தக் கிரியைகள் இத்தனை சாமான்னியமாகவும், செலவின்றியும் செய்யப்படும் வேறெந்தத் தேசமும் உலகத்தில் இல்லை. வைப்பாட்டி வைத்துக்கொள்ளல் வெகு சாதாரணம். "தற்கால அரசனுக்கு அவன் மனைவியைத்தவிர ஐந்து வைப்பாட்டிகளுண்டு. அவருக்கிருக்கும் நாலு பிள்ளைகளும் வைப்பாட்டிகளின் பிள்ளைகளே." சில நூல்களில் இதற்கு மேற்கோள் உண்டு. புத்தமதமும் பெண்களின் நிலைமையை விர்த்திசெய்யப்படாவிட்டது. கடந்த 30 வருஷத்தில் பரஸ்திரீகள் தொகை ஜப்பானில் வெகு அதிகமாகியிருப்பது மிகவும் பரிதாபமே. கலியாணத்துக்கு முன்னும் பிறகும் ஆண் பெண்களுக்குள்ள சம்பந்தமே சன்மார்க்கவிஷயத்தில் ஜப்பானுக்குள்ள பெரிய குறைவு. அங்குள்ள கிறிஸ்தவ சபையார் நல் முன்மாதிரி காட்டிவருகிறார்கள். "இருதயத்தில் சுத்தமானவர்கள் பாக்கியவான்கள்; ஏனென்றால் அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" என்று கிறிஸ்துவின் ஆசீர்வாதத்துக்கு அவரே அவர்களைப் பங்குள்ளவர்களாக்குவார்.

(5) **பெருமையும் அகங்காரமும்** அவர்களுடைய பெலவீனத்துக்குக் காரணம். அந்த ஜாதியும் அதன் தனி ஆட்களும் வீண் பெருமைக்காரர். சுபாவத்திலே அவர்கள் பிடிவாதக்காரரும், தன்னம்பிக்கையுடையவர்களும், சுயாதீனப் பிரியருமானவர்கள். இந்தியரைப்போல அவர்கள் அவ்வளவு தாழ்மையும், பக்தியும், அன்புக்குரியவர்களும் அல்லாத போதிலும் அவர்களுடைய நற்செய்கைகளினால் நாம் கற்க வேண்டியவை பலவுள. இந்தக் குறைவுகள் யாவும் ஜப்பானியருக்கு இயற்கையான குணங்களன்று. பூர்வத்து அவர் அனுசரித்த மார்க்க நடபடிக்கைகளினாலும், பயிற்சியினாலும் இவை விளைந்தன. ஜப்பானியருக்கிருந்த அதே காரியாதிகள் நம்மையும் சூழ்ந்திருந்தால் நாமும் அவர்களைப்போற்றான் இருப்போம். நமது நிலைமையில் அவர்கள் இருந்திருந்

தால் அவர்களும் நம்மைப்போன்றா ளிருப்பார்கள். இவ்வாறு ஆண்டவது பார்வையில் நாம் எல்லாரும் பிரதிகூலமானவிஷயங்கள் சம்பவிக்கும்போது ஒரேவித சோதனைக்கு இடங்கொடுத்து, இடறி விழவும், ஆண்டவர் உகைத்தாருக்குச் சொல்லும் சத்தியத்தை ஏற்றுக்கொண்டால் அச்சுவிசேஷத்தால் இரட்சிக்கப்பட்டு நற்பேறு அடையவுங்கூடிய ஒரே மானிட சுபாவமுள்ள சகோதரராக இருக்கிறோம். ஆகையால் ஜப்பானியரின் இக்குற்றங்களை நாம் கருணையோடு நோக்கவேண்டும். கனம் உசிமூரா (Uchimura) "என் ஜாதி இன்னும் குழந்தையாக ஒரு சிறு பாலகனாயிருக்கிறது" என்கிறார். இந்தியாவிற்குச் சுவிசேஷம் வந்து 200 வருஷமும், சீனாவுக்கு வந்து 100 வருஷமும்; ஜப்பானுக்கு வந்தோ 50 வருஷமும் ஆயிற்றென்றறிகிற நாம் அதன் அபிவிர்த்தியைக் கண்டு ஆனந்திப்பதே அன்றி, அதன் சில குறைவுகளைக்குறித்து அவர்களை அவமதிப்பது நியாயமல்ல. ஆயினும் நாம் அக்குற்றங்களைக்குறித்துக் கவலையற்றவர்களாகாமல், நாம் இருவரும் ஓர் கண்டத்தில் வசிக்கும் சகோதரராதலால் அவர்களுக்காக ஜெபிக்கவேண்டும்.

கிலெமெந்து ஜப்பானியரின் சன்மார்க்கவிஷயத்தைக்குறித்துச் சொல்லுகிறதாவது:—சரியான ஓர் ஜப்பானியன் ராஜபக்தி, குருபக்தி, மரியாதை, பிதுர்பக்தியுமுடையவனும் உண்மை, பட்சம், மெத்தனவு, தாழ்மை, சுயபயமற்ற உதாரத்துவம் முதலிய நற்குணங்கள் வாய்ந்தவனுமாயிருக்கிறான். அவனை ஆளும் பாவங்கள் மாய்மாலம், குடிவெறி, விபசாரமுமே. இப்பாவங்களையும் இவை பாவமென்று அறியாததினால் செய்கிறானேயன்றி அறிந்து செய்கிறதில்லை. ஷின்டோ கன்பூஷிய (Shints Confucian); புத்தமதங்கள் இவற்றைத் தொலைக்கச்செய்த பிரயாசை யாவும் பயனற்றதாகவே கிறிஸ்துமார்க்கமே இவற்றை ஜயிக்கும் மேன்மையுடையதென்று ஜனங்கள் காணத் துவங்குகிறார்கள்.

# IV

## அரசாட்சி, கல்வி, வர்த்தகம்.

### அரசாட்சி.

ஜப்பான் தேச அரசாட்சி புறம்பாகவேனும் முற்றும் நவீன முறையை அனுசரித்ததாகத் தோன்றும். 1868-ம் வருஷத்திற்றான் அத்தேசத்துத் தற்கால அரசன் அதை ஜனசமூக அபிப்பிராயத்தை அனுசரித்து அரசாள வாக்களித்தார். 1889-ம் வருஷத்தில் அவர் இப்புதிய அரசாட்சி முறையை விளம்பரஞ்செய்தார். அதன்படி அரசனே யாவருக்கும் மேலான அதிகாரி. ஆனால் இது உண்மையல்ல, பேருக்குத்தான் அதிகாரி. அவரே சகல உத்தியோகஸ்தரையும் நியமித்து, சேனையையும் கப்பற்படைகளையும் நடத்துகிறவர். அரசாட்சியின் பற்பல விஷயங்களை நிர்மாணிக்கிறவரும் ஸ்தாபிப்பவரும் அவரே. திருஷ்டாந்தமாக, போருக்கு அழைப்பவரும், சமாதானஞ் செய்பவரும், உடன்படிக்கை செய்பவரும் அவரே. இவ்வரசாட்சிமுறை ஜர்மன் தேசத்தின் முறைப்பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டது. அரசனது ஆண்மையே இதில் விசேஷித்தது. தற்காலம் கல்வித்திறமையும் நவீன நாகரீகமுமுற்ற ஒருவர் அரசனாயிருப்பது ஜப்பான் தேசஞ்செய்த புண்ணியமே. இச்சிறந்த குணசம்பன்னரற்ற வேறொரு அரசன் வந்து அரசாட்சி செய்யுங்காலத்தில் என்ன சம்பவிக்குமென்று பார்ப்போம். அரசனுக்கு உதவியாக நியமிக்கப்பட்டவர்கள்:—

(1) மந்திராலோசனைச் சபை (Privy Council); இதில் அரசனுக்கு ஆலோசனை கொடுக்கும்படி அரசன் தானே தெரிந்தெடுத்த 25 பேர் உண்டு.

(2) மந்திராலயம் (Cabinet); இதில் பத்துப் பாகங்களுண்டு. இது மந்திரிமார் சங்கம். இதுவே ஜனசமூக சங்கத்துக்கும், அரசனுக்கும், மூப்பருக்கும் ஆலோசனைச் சங்கம் (Diet) என்ற பெரிய சங்கத்திற்கும் உத்தரவாதி,

மந்திரிகள் பின்வரும் விஷயங்களில் ஒவ்வொன்றையும் விசாரிப்பவர்:—அரசாட்சி, புறதேசவிஷயம், வருமானம், சேனை, கப்பற்சேனை, நீதி, கல்வி, பயிர்த்தொழில், வர்த்தகம், கடிதப் போக்கு வரவு.

அரசாட்சி மந்திரிக்குச் சம்பளம் ரூ. 14,000–க்குமேல் இருக்கும். மற்ற மந்திரிகளுக்கு ரூ. 9,000. இப்பொழுது ஜப்பானிய ஜனசமூக சங்கத்தில் 376 அங்கங்களுண்டு. இவர்கள் 4 வருஷத்துக் கொருமுறை மாற்றப்படுவார்கள். ஜப்பான் அரசாட்சிவிஷயத்தில் மிக முன்னேறிவருகிறது. அங்குள்ள அதிகாரிகள் பொதுவாய் லஞ்சம் பரிதானம் வாங்காத மேன்மக்கள். பிறர்களிடத்துப் பெற்றுக்கொள்ளும் லஞ்சத்தினால் தனக்கு சேர்ப்பதல்ல, தன் தேசத்துக்கென்று உழைப்பதே தன் கடமையென்று உத்தியோகஸ்தர் ஒவ்வொருவரும் உணருகிறார்கள். பரிதானம் வாங்கும் உத்தியோகஸ்தருள்ள எந்தத் தேசமும் தரித்திரமடையும். ஒவ்வொருவனும் தேசாபிமானியாக விளங்க, உத்தியோகஸ்தரும் ஜனங்களும் ஒருங்கே தேசநலத்தைக் கோரி உழைத்தால் அத்தேசம் செழித்து வளம்பெறும் என்பதற்கு ஜப்பானே தக்க சான்று. முற்காலத்தில் பற்பல கட்சிகளாகப் பிரிந்திருந்த ஜப்பான் இப்போது 3 மாகாணங்களாகவும் வகுக்கப்பட்டிருக்கிறது. 43 ஜில்லாக்களாகவும், ஒவ்வொரு மாகாணத்தின் நடவடிக்கைகளையும் மேல்விசாரணை செய்து அரசாட்சியை நடத்திவர ஒவ்வொரு கவர்னர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஜனங்களின் குறைவுகளையும் அவர்கள் விருப்பங்களையும் வெளிப்படுத்தும்படி ஜனங்களால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு சபை ஒவ்வொரு மாகாணத்திலும் உண்டு. நகரங்களும் பட்டணங்களும், கிராமங்களும் சுயவரசாட்சி யுடையன.

ஜப்பானின் அபிவிருத்தி அனைவருக்கும் மகா ஆச்சரியமாகத் தோன்றுவதாலும், வெளித்தோற்றமாய்ப் பார்ப்பவர்க்கும் பிரயாணிகளுக்கும் அங்குள்ள யாவும் வெகு சிறந்தவைகளாகத் தோன்றுவதாலும் நாம் அதனை உள்ளவண்ணமல்ல மிஞ்சினவிதமாய்ப் புகழ ஏவப்படுவோம். ஆனால் தேசத்து நிலைமையை உள்ளவண்ணம் உற்றுணர்ந்தவர் இது



சாலவடையவேண்டிய உன்னத பதவிக்கு வெகுதூரம் பிந்தியே நிற்கிறதென்று அங்கலாய்ப்பார். உண்மை உரைக்கப்போனால் இத்தேசம் சொற்ப மனிதரால் ஆளப்படும் குடியாசனும் பொய்க்காமம் கூடியது. எண்ணிறந்தபேரை ஆளுகை செய்பவர் வெகு சிறு கூட்டத்தார். சாதாரண ஜனம் கைத்தொழில் வியாபவிதிகள் தங்களுக்கு அனுகூலமாயிராதது பற்றியும், தம்மேல் சுமந்திருக்கும் மிகப் பெரும் வரிகளினாலும் கலங்கித் தவிக்கிறார்கள். ஜப்பானியர் ஜர்மனியின் புத்திசாலித்தனத்தையாகிலும், அமெரிக்கரின் குடியாசமுறையையென்கிலும், பிரித்தானியரின் இர[illegible]ன அரசாட்சிப் பிரமாணங்களையாகிலும் இன்னும் [illegible] கற்றடையவில்லை. ஜனங்களால் ஆளப்படுவதும், ஜனங்களுக்கென்று நடத்தப்படுவதும், ஜனங்களுக்குப் பிரீதிகரமானதுமான ஓர் அரசாட்சிமுறையை இன்னும் கண்டுபிடிக்கவில்லை. ஆயினும் நமது தற்கால நிலைமை மாறினால் நாம் இந்தியாவில் செய்யக்கூடிய பற்பல பாடங்களை நமக்குக் கற்பிக்கக்கூடிய அந்தஸ்தைப் பார்க்க ஜப்பான் தேர்ச்சியடைந்திருக்கிறது.

ஆயினும் இந்தியாவின் நிலைமைக்கும் ஜப்பானின் நிலைமைக்கும் மெத்த வித்தியாசம் உண்டென்பதை நாம் மறக்கவொண்ணாது. ஜப்பான் ஒரே பாஷை பேசி, ஒரே நோக்கத்திற்கென்று உழைத்து, அன்னியோன்னியமாய் வசிக்கும் ஒரே ஜாதியுள்ள ஒரு சிறு தேசம். இந்தியாவிலோ ஜாதிகளுக்குக் கணக்கில்லை, பாஷைகளுக்குங் குறைவில்லை; மேலும், இது பாரம்பரியங்களினாலும், ஜாதிபேதத்தினாலும், பாஷையினாலும், தூரத்தினாலும் பற்பல எண்ணிறந்த பிரிவினையுள்ள பெரிய கண்டம். நாம் மற்றவர்களின் நல் முன்மாதிரியைக் குருட்டுத்தனமாயல்ல, ஜப்பானைப்போல் நமது இந்தியாவின் தற்கால நிலைமைக்கு ஏற்றபடி அவற்றை மாற்றி அனுசரித்தலே புத்தி.

## கல்வி.

அரசாட்சியைப்போலவே ஜப்பானிய கல்வியும் விசேஷித்தது. பூர்வ கல்விமுறை புத்தமதத்திற் கனுசாரணையாகவே இருந்தது. 18-ம் நூற்றாண்டில் கன்பூஷியக் (Confucian) கொள்கைகளுக்கு ஒத்ததாகச் சாமூராய் என்ற போர்வீரர்களுக்கே கல்வி கற்பிக்கப்பட்டுவந்தது. இம்முறை மனப்பாடமாய் யாவையும் கற்கும் நூன்முறை: 1872-ஷு அரசன் பின்வரும் விளம்பரம் அனுப்பினார்:—"இனிமேல் கல்வி ஓர் சிறு வகுப்பாருக்கென்றல்ல, வாசிக்கத்தெரியாத கிராமமும், கிராமத்திலே வாசிக்கத்தெரியாத குடும்பமும், குடும்பத்திலே வாசிக்கத்தெரியாத பிள்ளையும் இல்லையென்னும்படி கல்வி விசாலிக்க இடங்கொடுப்பேன்." 1890-ஷு அரசன் மற்றொரு விளம்பரம் பிரசுரித்தார். அதாவது:—"என் அருமைக் குடிகளே, உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள், சகோதரரைச் சிநேகியுங்கள், ஒருவரை ஒருவர் நேசிக்கும் புருஷரும் மனைவிகளுமாயிருங்கள், உத்தம நண்பர்களாயிருங்கள். அறிவில் தேறுவதாலும், கைத்தொழிலைக் கற்பதனாலும் புத்தியை விர்த்திசெய்து, சன்மார்க்கத்தில் பூரணப்படுங்கள்" என்பதே.

வெகு பூர்வமாயுள்ள இந்த ஜப்பானியர் மற்ற ஜாதியார் அதிக கஷ்டத்தோடும் வெகுகாலமாகவும் அனுபவமாய்க் கற்றடைந்த நன்மைகளை அவற்றின் சுதந்தரவாளிபோல் தாங்கள் அனுபவிக்கக் கூடியவர்களானார்கள். சடுதியாகச் செய்யப்பட்ட சகல சீர்திருத்தங்களிலும் அவர்களுக்கு உதவிபுரிந்தவை இவைகளே.

கல்விவிஷயமான சங்கத்தில் அதற்குரிய மந்திரியும் உபமந்திரியும் மற்றும் அநேக உத்தியோகஸ்தரும் உண்டு. இம்மந்திரி மந்திராலயத்தி (Cabinet) லே ஓர் அங்கம். இச்சங்கத்துக்கு உதவியாக ஒரு கல்விவிஷய ஆலோசனைச்சங்கம் ஒன்று உண்டு. கீழ்த்தரப் பாடசாலைகளில் வாசிப்பு, எழுதுதல், கணக்கு, விலாசம் எழுதல், இலக்கணம், பூமிசாஸ்திரம், சரித்திரம், இயற்கைசாஸ்திரம், சன்மார்க்கசாஸ்திரம், ஆங்கிலம் முதலியவை படிப்பிக்கப்படுகின்றன. உயர்தரப் பாட-



சாலைகளில் ஜப்பானிய சீன சரித்திரங்களும், பாஷைகளும், நூல்களும், இயற்கைசாஸ்திரம், தத்துவசாஸ்திரம், ஆங்கிலம், ஜர்மன், பிரெஞ்சு (French) முதலியவைகளும் சர்வகலாசாலையில் இவற்றோடு லாத்தீன், கிரீக், சமஸ்கிருதம் முதலிய பூர்வ பாஷைகளும் கற்பிக்கப்படுகின்றன. ஜப்பானில் ஒரு லக்ஷம் வாலிபர் ஆங்கிலம் கற்கிறார்கள். ஜப்பானை இந்நற்சிருக்குக் கொண்டுவருவதற்கு உபயோகமானவிஷயங்களில் 10-ல் ஒன்பது பாகம் அவர்கள் ஆங்கில நூல்களினின்றே கற்றார்கள். இவ்விதமாய் ஆங்கிலேயருக்கும் ஜப்பானியருக்கும் நூற்சம்பந்தமாய் உண்டான சம்பந்தம் நாளடைவில் நெருங்கிய அன்பும் கரிசனையுமாக மாறத் துவங்கிற்று. இதுவே இவ்விருஜாதியாருக்குமுள்ள உடன்படிக்கைக்கு ஆதாரம்.

இந்தியாவில் இருப்பதுபோல் இங்கேயும் சர்க்கார் லோக்கல் பண்ட் (Local Fund) பள்ளிக்கூடங்களும் தனி ஆட்களுக்குச் சொந்தமான பாடசாலைகளும் உண்டு. 6 முதல் 14 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகவேண்டும், நாலு வருஷம் அவர்கள் பள்ளிக்கூடத்தில் ஆஜராகவேண்டியது அவர்கள் கடமை. அதுவே பிரமாணம். அந்த நாலு வருஷமும் அவர்கள் பள்ளிக்கூடச் சம்பளம் கட்டவேண்டியதில்லை. கீழ்த்தரக் கல்வி முடிக்க எட்டு வருஷம் செல்லும். வேலைவிஷயமான கல்வியும், கைத்தொழிலும், போதனமுறைகளும் எங்கும் கற்பிக்கப்படுகின்றன.

1900-ம் வருஷத்தில் சம்பளப்பணம் தண்டப்படவில்லை. பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு வரக் கட்டாயப்படுத்தும்பொருட்டு 100-க்கு 95 கீழ்த்தரப் பள்ளிக்கூடங்களில் கல்வி இனமாகக் கற்பிக்கப்பட்டது. நல்ல கீழ்த்தரப் பாடசாலைகளில் மாதம் பள்ளிக்கூடச் சம்பளம் 6 அணாவுக்கு அதிகப்படாது. ஒரு பிள்ளை 6 வயதில் பள்ளிக்கூடம் போகத் துவக்கி 4 வருஷத்துக்கேனும் கட்டாயம் படிக்கவேண்டும். பள்ளிக்கூடம் போகாத பிள்ளைகளின் ஜாப்தா தயார்செய்து உத்தியோகஸ்தர் பள்ளிக்கூடச் சங்கத்தாரின் உதவியைக்கொண்டு ஒவ்வொரு பிள்ளையின் விஷயத்தையும் ஆய்ந்தோய்ந்து

பார்ப்பார்கள். தரித்திரத்தினாலோ, வியாதியினாலோ, அன்றி வேறெந்தத் தடையினாலோ பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பக்கூடாதவர்கள் அக்காரணத்தை ஒரு விண்ணப்பப் பத்திரத்தினால் தெரிவிக்கவேண்டும். இவ்விதச் சாக்குப்போக்கில்லாச் சகல பிள்ளைகளும் பள்ளிக்கூடம் போகிறதென்கிற நிச்சயமடையுமட்டும் இவ்வித விசாரணை நடக்கும்.

இந்தியாவில் கல்வி விசேஷமாய்ப் புத்தகக் கல்வியாயிருக்க, ஜப்பானிலே கைத்தொழிலும் தொழிற்றுறைப் பாடங்களும் முக்கியமாக எண்ணப்படுகிறது. நம் கலாசாலைகள் போல் மேன்மையான ஒன்பது பெரிய தொழிற்றுறைப் பள்ளிக்கூடங்களும் வர்த்தகப் பாடசாலைகளு முண்டு. இக்கலாசாலைகளினின்று நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்ட நவீன விஷயங்களையும் முறைகளையும் கற்றுவரும்படி சர்க்கார் செலவில் வருஷந்தோறும் இக்கலாசாலைகளிலிருந்து மாணாக்கரும் போதகரும் நாற்பதுக்கு அதிகமாகப் புறத்தேசம் போவார்கள். அங்குள்ள தொழிற்றுறைப் பள்ளிக்கூடங்களின் மொத்தம் 1,954. சிறுவர்க்கான பாடசாலைகளையன்றி குடியானவர்களும் கைத்தொழிலாளிகளும் கற்கும்படி சாயங்காலத்திலாவது வெயிற்காலத்திலாவது அவர்களுக்கென்று வைக்கப்படும் அநேக கைத்தொழிற் பள்ளிக்கூடங்களுண்டு. அவற்றில் யந்திரபடம் வரைதல், நிலத்தின் தன்மையையும் எருவின் தன்மையையும் அறியும்முறை, பயிரைச் சேதப்படுத்தும் பூச்சிகள், செடிகளுக்குண்டாகும் நோய், வீட்டு மிருகங்களையும் பட்டுப்பூச்சியையும் வளர்க்கும் வழி, மீன் பிடித்தல், பதப்படுத்தி உபயோகப்படுத்தும் முறை, கணக்கன்வேலை, வர்த்தகமுறை முதலிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. மத்திய தொழிற்றுறைகளில் மாணாக்கரைத் தொழிற்சாலைகளுக்கு மேஸ்திரிகளாகவும், விசாரணைக்காரராகவும், வர்த்தகசாலைகளில் கணக்கர்களாகவும் பயிற்றுவிக்கிறார்கள்.

டோக்கியோ (Tokyo) சர்வகலாசாலையே ஜப்பானிய கல்வி முறைகளென்ற சிப்பியினின் றிழிந்த உயர்ந்த முத்து. அங்கே நீதிசாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், சிற்பசாஸ்திரம், ஞானாராய்ச்சி, இயற்கை சாஸ்திரம், விவசாயமென்ற முக்கிய



விஷயங்களைத் தனித்தனியே கற்பிக்கும் ஆறு கலாசாலைகளுண்டு. ஆயினும் ஜப்பானிய இரண்டு சர்வகலாசாலைகளிலும், 5,256 மாணாக்கரே படிக்கிறார்கள். ஆனால் இந்தியாவின் 145 கலாசாலைகளில், 17,651 மாணாக்கர் வாசிக்கிறார்கள்.

பெண் கல்வியை இத்தேசத்தில் முதல்முதல் ஸ்தாபித்தவர்கள் கிறிஸ்தவ மிஷனரிகளே. "ஆடவரைப் படிப்பிப்பதே நம் ஒன்றான நோக்கமென்று எண்ணி உழைத்த தேசங்கள் யாவும் அபிவிர்த்தியடையாது அபஜயமடைந்தன. ஆனால் ஜப்பானோ பெண்களை அவர்களுக்குரிய உயர்பதவிக்குக் கொண்டுவரும்படி இவ்விரு நோக்கத்திற்கென்றும் பிரயாசப்படவேண்டும்" என்று ஒக்குமா பிரபு (Count Okuma) சொல்லுகிறார். இவ்வாறு பெண்கல்வி வெகு பிரபல்யமாகி வருகிறது. இந்தியாவில் பள்ளிக்கூடம் போவது ஒரு பெண்ணானால் ஜப்பானில் போவது 30 பெண். இயற்கை சாஸ்திர அப்பியாசப் பாடங்களில் ஜப்பான் வெகு முன்னேறியிருக்கிறது. இலகுவான ஜப்பானிய எழுத்திருக்க ஜப்பான் இன்னும் அலங்கோலமும் அதிகஷ்டமுமான சீன எழுத்துக்களை உபயோகிப்பதும், யாதொரு தீர்மானத்துக்கும் வாராத உபயோகமற்ற சன்மார்க்க சாஸ்திரமும், இந்தியரைப்போல் விஷயம் அறியாது மனப்பாடம் பண்ணும் முறையும், ஜப்பானியரின் கல்விமுறையில் காணப்படும் முக்கிய குறைகள்.

இந்தியாவி லிருப்பதுபோல் ஜப்பானில் அத்தனை சர்வகலாசாலைகளும் கலாசாலைகளும் இல்லை. பின்வரும் கணக்கில் காட்டியிருக்கிறபடி கீழ்த்தரப் பள்ளிக்கூடங்களை அதிகரிப்பதே ஜப்பானின் முக்கிய நோக்கம்.

ஜப்பானில்—

| | | | |
|---|---|---|---|
| 2 | சர்வகலாசாலைகளில் | 5,256 | மாணாக்கரும் |
| 103 | உயர்தரப் பாடசாலைகளில் | 23,464 | ,, |
| 276 | மத்திய ,, | 101,196 | ,, |
| 67 | போதக ,, | 20,000 | ,, |
| 1,954 | தொழிற்றுறைப் ,, | 114,291 | ,, |
| 27,363 | கீழ்த்தரப் ,, | 5,144,118 | ,, |
| ஆக மொத்தம் 31,755 | பாடசாலைகளில் | 5,585,436 | மாணாக்கர் |

படிக்கிறார்கள்.

ஜப்பானையும் இந்தியர்களையும் கல்விவிஷயத்தில் ஒத்துப்பார்க்கையில் சில குறிப்புகளைக் காணலாம்:—

| | ஜப்பான். | இந்தியா. |
|---|---|---|
| பிரைமரி பாடசாலைகள் | 27,383 | 97,854 |
| ,, மாணாக்கர் | 5,144,113 | 3,204,336 |
| தொழிற்துறைப் பாடசாலைகள் | 1,954 | 123 |
| மொத்தம் பாடசாலைகள் | 31,755 | 104,622 |
| ,, மாணாக்கர் | 5,565,496 | 3,886,493 |
| ,, செலவு | ரூ. 77,000,000 | 40,121,000 |

இந்தியா கல்விக்கென்று செலவிடும் தொகை வரவர அதிகரிப்பதைப் பின்வரும் கணக்கில் காணலாம்:—

| | 1901 | 1881 |
|---|---|---|
| மாகாண வரி | ரூ. 10,400,000 | ரூ. 7,400,000 |
| முனிசிபல், லோக்கல் | ,, 7,400,000 | ,, 200,000 |
| சம்பள வசூல் | ,, 12,700,000 | ,, 4,400,000 |
| மற்ற வரும்படி (பீஷன் முதலிய) | ,, 9,600,000 | ,, 3,800,000 |
| மொத்தம் | ரூ. 40,100,000 | ரூ. 18,800,000 |

ஜப்பானில் பள்ளிக்கூடம்போகும் பிள்ளைகளில் 6 முதல் 14 வயதுக்குட்பட்டவர்கள் 7,551,445. பிரைமரி பாடசாலைகளில் வாசிப்போரின் மொத்தம் 5,144,113. (இந்தியாவிலோ ஜனத்தொகை ஆறுமடங்கு அதிகமாயிருந்தும் 3,204,336) ஜப்பானில் கல்விக்கென்று செலவிடப்படும் தொகை ரூ. 77,000,000. இந்தியாவிலோ முற்கூறிய பற்பல விதமாய்ச் செலவிடப்படுவது ரூ. 40,000,000. 1873-ம் வருஷத்தில் நூற்றுக்கு 40 பையன்களும் 15 பெண்களும் கல்வி கற்றார்கள். இப்போது பள்ளிக்கூடம் போகக்கூடிய வயதுள்ள பையன்களில் 100-க்கு 97 பேர் கல்வி கற்றுக்கொண்டிருப்பார்கள், அன்றி நாலு வருஷம் படித்துத் தீர்ந்திருப்பார்கள். அப்படியே பெண்களிலும் 100-க்கு 91 பேர் படிக்கிறார்கள். ஆகப் பிள்ளைகளில் சராசரி 100-க்கு 94 பேர் பள்ளிக்கூடம் போகிறார்கள், அல்லது 4 வருஷம்படித்து விட்டிருப்பார்கள். இந்தியாவில் 10-க்கு 1 ஆணும், 144-க்கு 1 பெண்ணும் எழுத வாசிக்கத் தெரியுமானால், ஜப்பான் ஒரு தலைமுறைக்குள்ளாக



வாசிக்கும் ஜாதியாகிவிட்டது வியக்கத்தக்கதல்லவா? ஜப்பானியர் கீழ்த்தரக் கல்வியின் உபயோகத்தை உணர்ந்து அதைக் கற்க ஆவலுள்ளவர்களாயிருக்க, இந்துக்களில் பெரும்பான்மையோர் இதனருமையை அறியாததனால் இதற்காகக் கவலைப்படாமலும், தாங்கள் எளியவர்களாயிருப்பதனால் தங்கள் பிள்ளைகளை வேலையினின்று பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப முடியாதென்றும் சாக்குப்போக்குச் சொல்லுகிறார்கள்.

இந்தியாவில் பேர்போன ஒருவர் எழுதுகிறதாவது:—"சர்க்கார் இந்தியரின் கல்விக்காக அதிகம் பணம் செலவிடுகிறதில்லையென்று நாம் அடிக்கடி முறுமுறுக்கிறோம். இன்னும் அதிகம் தாராளமாய்ச் சர்க்கார் உதவிசெய்தால் கல்வி இத்தேசத்தில் அதிகமாகப் பரவும் என்று எண்ணுகிறோம். பெண்களுக்குக் கல்வி கற்பிக்க ஜனங்கள் மனமற்றிருக்குமட்டும் சர்க்காருடைய உதாரத்துவமோ வேறெந்த உபாயமோ சற்றும் கைகூடாது. தற்காலத்தில் பொதுவாய் நாம் பார்க்கிறபடி ஜனங்கள் பெண்கல்வியைப்பற்றி நிர்விசாரமாகவாவது அதற்கு விரோதமாகவாவது இருக்கும்வரையில் சர்க்கார் 100-க்கு 81 பெண்களைப் பள்ளிக்கூடம் வரச்செய்வது சாத்தியமென்று யார்தான் சொல்லக்கூடும். இவ்விஷயத்தில் நாம் ஜப்பானின் முன்மாதிரியைப் பின்பற்ற விரும்பினால் நாம் செய்யக்கூடியதும் செய்யவேண்டியதுமான ஓர் முக்கியவேலை உண்டு. அதாவது ஜப்பானியரிடம் காணப்படுவதுபோல் கல்வி கற்கவும் நாகரிகமடையவும் ஆரா அவாவை உண்டாக்கி, அதைக்குறித்த சகல தப்பெண்ணங்களையும் தகர்த்தழிப்பதே."

கீழ்த்தர மத்திய பாடசாலைகளில் பற்பல தேசத்தில் படிக்கும் பிள்ளைகளைக் கணக்குப்பார்க்கையில் (அமெரிக்க) ஐக்கிய மாகாணத்தில் சுமார் 100-க்கு 18-ம், ஜர்மனியில் 100-க்கு 16-ம், ஜப்பானில் 100-க்கு 11-ம், ருஷியாவில் 100-க்கு 3-ம், இந்தியாவிலோ 100-க்கு 1-ம் என்று தெரியவருகிறது. அமெரிக்காவில் ஒவ்வொருவரும் கல்விவிஷயத்திற்கென்று கொடுக்கும் வரி ரூ. 4-12. இந்தியாவிலோ ஒவ்

வொருவன் செலவழிப்பது 2 அணா; பரோடா என்ற சுதேச ராஜ்யத்தில் வருஷம் ஆளுக்கு 7 அணா செலவிடுகிறார்கள்; ஜர்மனியில் ஆளுக்கு ரூ. 5–7–2; பிரான்சில் ரூ. 3–1–3; இங்கிலாந்தில் ரூ. 3; ஸ்பானியாவில் ரூ. 1–7–0; இத்தாலியில் ரூ. 1–1–0; இந்தியாவிலோ 2 அணா.

சன்மார்க்கவிஷயங் கற்பிப்பது ஜப்பானிய போதனா முறையின் முக்கிய பாடங்களில் ஒன்று. அரசன் விளம்பரத்திலடங்கிய சன்மார்க்க விதிகளை அனுசரித்து வாசகப் புத்தகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. "ராஜபக்தி, தேசாபிமானம், கீழ்ப்படிதல், உதாரத்துவம், உண்மை, காலக்கிரமம் கட்டவாமை, பொய்யுரையாமை முதலிய நற்குணங்களை யாவும் பேர்போன பண்டிதரின் போதனையாலும் சாதனையாலும் பிள்ளைகளின் மனதில் பதிப்பிக்கிறார்கள்." சன்மார்க்க விதிகளை நிலைநிறுத்தக்கூடிய உறுதியான அஸ்திபாரமுமில்லை, அதை அனுசரித்து நடக்கப் பலமளிக்கும் உயர்பலமும் இல்லாததுமே அவர்கள் கல்விமுறையின் பெரிய குறை. "எங்கள் உபாத்தியாயர்கள் நாங்கள் உண்மையும், சத்தியமும், நற்குணமு முள்ளவர்களா யிருக்கவேண்டுமென்று போதிக்கிறார்கள். ஆனால் அவற்றின்படி நடக்க எங்களுக்குப் பலங் கொடுக்கிறதில்லை" என அம்மாணாக்கரில் ஒருவன் முறையிட்டான். இதுவே அதன் குறைவு. அதன் சன்மார்க்க விதிகளுக்கு உபயோகமற்ற ஆதாரமும் அதன் கல்விமுறைக்கு மாதிரியுமானது 1890–ல் அரசன் செய்த விளம்பரமே. அதாவது:—

நம்முன்னோர் நற்குணச் செய்கைகளை நமக்குப் புகட்டி யிருக்கும் தேச அரசாட்சியைச் செவ்வனே ஒழுங்கு செய்யவில்லை. நமது குடிகள் ராஜபக்தியிலும் பெற்றோருக்குக் காட்டும் பட்சத்திலும் ஒருமித்து நின்று தங்கள் பூரண சற்குணத்தை எக்காலத்திலும் வெளிப்படுத்துகிறார்கள். இதுவே நமது அரசாட்சிமுறையின் அழகு. நமது முறைகள் உற்பத்தி ஸ்தானமாகவேண்டுவதும் இச்சற்குணங்களே. என் ஆளுமைக் குடிகளே, உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள், சகோதரரைச் சிநேகியுங்கள், ஒருவரை ஒருவர் நேசிக்



கும் புருஷரும் மனைவிகளுமாயிருங்கள். உத்தம நண்பர்களுமாயிருங்கள். அடக்கமுடையராய் எப்போதும் நடந்துகொண்டு, யாவருக்கும் நன்மை செய்யுங்கள். அறிவில் தேறுவதாலும் கைத்தொழில் கற்பதாலும் புத்தியை விர்த்தி செய்து சன்மார்க்கத்தில் பூரணப்படுங்கள், மேலும் ஜனசமூக விஷயத்தில் அதிக கருத்துங் கவனமுமாயிருந்து அதற்கு அனுகூலமான யாவற்றையும் விர்த்தி செய்யுங்கள். தேச ஒழுங்குகளை எப்போதும் மதித்துத் தேச சட்டங்களுக்குக் கீழ்ப்படியுங்கள். அவசியமானால் உங்கள் ஜீவனையும் தேசத்தின் நலத்திற்கென்று ஒப்புக்கொடுங்கள். உலகமுள்ளளவரையிலும் ஒழியாதிருக்கும் நமது மகிமையான அரசாட்சியை எவ்விதத்திலும் பரிபாலியுங்கள். இதனால் நீங்கள் நமது உத்தம குடிகளாக இருப்பதுமன்றி உங்கள் முன்னோரின் சற்குணங்களை வெளிப்படுத்துவீர்கள்.

"நமது முன்னோர் கீழ்க்குடிப்பின் வைத்த ஏற்பாடுகள் இவைதான். அவற்றிற்கு அவர்களின் பின்னோரும் குடிகளும் கீழ்ப்படியவேண்டும். இப்பிரமாணங்கள் எக்காலத்துக்கும் எத்தேசத்துக்கும் செல்லக்கூடிய பூரணப் பிரமாணங்கள். நாம் எல்லோரும் எப்போதும் இச்சற்குணங்களுள்ளவர்களாயிருக்கும் நமது குடிகளைப்போல நாமும் இவைகளை நம் இதயத்தில் வைத்துக் காக்க விரும்புகிறோம்."

## கைத்தொழிலும் வர்த்தகமும்.

ஜப்பானியரின் முக்கிய அலுவல் விவசாயம். மிகுதியானவர்களின் வேலை இதுவே. பயிர்ச்செலவு செய்யக்கூடிய நிலம் சொற்பமே. அவைகள் தோட்டங்களேயன்றி வயல்களல்ல. சாதாரணமாக ஒரு குடியானவனுக்கு நன்செய் நிலத்தில் ஒரு ஏக்ராவும், புன்செய்யில் 2½ ஏக்ராவுமிருக்கும். ஒரு குடும்பத்தின் சராசரி வரும்படி வருஷத்துக்கு ரூ. 40 கூட இராது. நிலம் மிகுதியாக வுடையவர்கள் ஜப்பானில் இல்லை. அந்தேசத்து விளைவை அவற்றிற்குரிய மதிப்பின்படி சொன்னால் அதின் முறையாவது:—அரிசி, சோளம், வாற்கோதுமை, கம்பு, பயறு, கேழ்வரகு, உருளைக்கிழங்கு, பருத்தி, சணல், நீலம், புகையிலை, சர்க்கரை.

இந்தியாவில் நிலத்தில் 100–க்கு 30 பாகம் பயிர் செய்யப்பட. ஜப்பானில் 100–க்கு 15 பாகம் சாகுபடி செய்யப்படுகிறது. ஜப்பானில் பயிரிடும் நிலம் 1½ கோடி ஏக்ரா. இதில் 70 லக்ஷம் ஏக்கரில் நெல் விளைகிறது. இங்கே 60 லக்ஷம் அதாவது 100–ல் 63 பாகம் பயிரிடுகிறவர்கள். இந்தியாவிலோ நூற்றுக்கு 60–க்குமேல். ஜப்பானியக் குடியானவன் சுறுசுறுப்பாய்க் கஷ்டப்பட்டு உழைப்பான். தேசவறிவுடையவன். இந்தியாவில் பூர்வ வழக்கங்களைப் பேணி நூதன சீர்திருத்தங்களை அசட்டை செய்பவன்.

ஜப்பானில் கைத்தொழிலாளர் மிகுந்த அதிர்ப்தியடைந்து அடிக்கடி கலகம் செய்கிறார்களென்பதை மறக்கக்கூடாது. நாம் இந்தியாவின் நிலவரியைக்குறித்து முறையிடுகிறோம். அது நியாயமே. ஆயினும் 1904–ம் வருஷத்திய சர்க்கார் அறிக்கையின் பூர்வபாகத்தில் ஜப்பான் தேசத்து பிரபுக்களுக்கு நிலத்தின் வரும்படியில் கட்டின வாய்தா 100–க்கு 30 முதல் 70 வரையும் இருந்ததென்றால் அவர்களின் வரியின் கொடுமையைக்குறித்துப் பேசுவானேன்? தற்சமயத்திலும் வரி கடுமைதான். இந்தியாவில் பயிர் நிலத்து வரி ஏக்ராவுக்குச் சராசரி ரூ. 1–7–8 இருக்க, சாதாரண நாட்களில் யுத்தவரியின்றி, ராஜ்ய உள்ளூர் நிலவரிகள்



ஏக்ரா ஒன்றுக்குச் சராசரி ரூ. 9–3–0 இருக்கும். இந்திய குடியானவன் பயிரிடுவதற்குச் சென்ற செலவைச் சற்று அதிகமாகவே கணக்கிட்டு விளைவு வரும்படியில் கழித்த மிகுந்ததில் பாதியைச் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டும். ஆயினும் இது ஜப்பானியர் செலுத்துவதற்குக் குறைந்ததே.

யுத்தத்தின் பொருட்டும் மற்றச் சந்தர்ப்பங்களினாலும் ஜப்பானில் வரி முன்னிருந்ததைவிட அதிகப்பட்டிருக்கிறது. இது குறைந்து முன்னிலைமைக்கு வருமோ என்பது சந்தேகம். ஜப்பான் தேசக் கணக்குப் புத்தகப்படி 1906–ம் வருஷத்தில் நன்செய் நிலத்திற்கு வரி ஏக்ரா வொன்றுக்கு ரூ. 36, புன்செய்க்கு ஏக்ரா ஒன்றுக்கு ரூ. 12. ஜப்பானியக் குடியானவன் தன் முழு விளைவிலும் 100–க்கு 13 ராஜ்யத்துக் களிப்பதுமன்றி, தன் மிராசுக்குப் பெரும் வாய்தாவும் கட்டவேண்டும். இந்தியாவின் நிலவரி முழு விளைவிலும் 100–க்கு 5½ பாகந்தான். சர்க்காருக்குக் கொடுக்கவேண்டிய நிலவரியும் மிராசுதாருக்குக் கட்டவேண்டிய கப்பமும் ஐரோப்பிய தேசங்களிலிருப்பதைவிட வெகு அதிகம். இதையன்றி மற்ற வரிகளும் ஜப்பானில் உண்டு. ஏறக்குறைய ஜப்பானியர் யாவரும் சுருட்டுக் குடிப்பார்கள். ஒவ்வொரு குடும்பமும் கொடுக்கும் புகையிலைச் சுங்கம் சுமார் ரூ. 5–8–0. உப்பு வரியும் இந்தியாவைவிட அதிகம்; தலைக்கு 8 அணா கொடுக்கிறார்கள். ஏறக்குறைய யாவரும் மதுபானம் பண்ணுகிறவர்கள், ஆக ஒவ்வொருவனும் வருஷவாரி ரூ. 2 வரி கொடுக்கிறான். குடியானவன் வீட்டுவரியும் கொடுக்க வேண்டும். இப்போது அவன் யுத்தவரியும் கொடுக்கவேண்டியதாயிருப்பதால் அவன் படுந்துன்பம் சொல்லிமுடியாது.

பயிர்த்தொழிலில் ஜப்பானியர் அபிவிர்த்தி செய்திருக்கிறார்கள்; எருப்போடுவதைப்பற்றியும், நிலத்தைப் பண்படுத்துவதைக்குறித்தும், யூகமாய்ப் பயிரிடுவதைக்குறித்தும் நாம் ஜப்பானியரிடம் கற்கவேண்டியது அதிகம். சாஸ்திரவீதமாய்ப் பயிரிடுவதில் அவர்கள் விர்த்தியாயிருப்பதால் அவர்கள் வரும்படி ஏக்ரா ஒன்றுக்கு நன்செய் ரூ. 136.

புன்செய் ரூ. 120. அதாவது இந்தியாவைப்போல் 4 மடங்கு அதிகம்.

கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும் ஜப்பான் செய்திருக்கும் அபிவிர்த்தி மிகப் பெரிது. ஷோகன் (Shogun) அரசாட்சியின் 100 வருஷத்தின் ஜனத்தொகை விர்த்தியானதைவிட இக்காலின அரசாட்சியின் அம்பைந்து வருஷங்களிலுண்டாகும் விர்த்தி அதிகம். 1884-ம் வருஷத்தில் இருந்த தொழிற்சாலைகள் 379. அவற்றின் மொத்த மூலதனம் ரூ. 7,527,000. 1904-ம் வருஷத்திலோ தொழிற்சாலைகள் 2,381. ஆக மூலதனம் ரூ. 320,000,000. 1884-ம் வருஷத்தில் ஜப்பானின் புறதேச வர்த்தகம் ரூ. 99,000,000. 1904-ம் வருஷத்திலோ ரூ. 1,035,000,000 ஆயிற்று. 1872-ம் வருத்தில் ஜப்பானின் இருப்புப்பாதை 18 மைல் நீளமாகவிருக்கத் தற்சமயம் 4,889 மைல் நீளமானது. இந்தியா ஜப்பானைவிட 10 மடங்கு பெரிதாயிருந்தபோதிலும் இங்குள்ள இருப்புப்பாதையின் நீளம் 27,728 மைல்தான்.

ஜப்பான்தேசக் கைத்தொழிலில் விசேஷித்தது பட்டுவேலை. வருஷவாரி ஏற்றுமதியாகும் பட்டின் கிரயம் ஏறக்குறைய ரூ. 100,000,000. புதிதாகப் பருத்திநூல் நூற்க ஆரம்பித்திருக்கிறார்கள். இத்தொழில் சீக்கிரம் விர்த்தியடைந்து வருகிறது. இந்தியாவிலும் அமெரிக்காவிலுமிருந்து பருத்தி மிகுதியாக இறக்குமதி செய்யப்படுகிறது. உலக முழுமையுமுள்ள கற்பூர வர்த்தகக் குத்தகை ஜப்பானுடையது. கப்பல் செய்வதில் அதிதயாகத் தேர்ச்சியடைந்துவருகிறார்கள். ஜப்பானிலுள்ள தொழிற்சாலைகளை அவற்றின் மூலதனத்தின் அளவின்முறைப்படி சொல்லுவோம்:—

நூல் நூற்றல், மண்ணெண்ணெய், மின்சார விளக்கு, கப்பல்செய்தல், காகிதம், வாயு (Gas), சுரங்கவேலை, பட்டெடுத்தல், சிமிட்டி (சுண்ணாம்பு), சர்க்கரை, கம்பளிநூல், யந்திரம், துணி நெய்தல், எஃகு, புகையிலை, தீப்பெட்டி முதலியன.

பற்பல வேலைக்குக் கிடைக்கும் கூலி:—



சாதாரண வேலைக்காரனுக்கு நாளொன்றுக்கு 3 அணா முதல் 8 அணா. கெட்டிக்காரத் தொழிலாளிக்கு 8 அணா முதல் 1 ரூ. இவ்வாறு தச்சனுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 1. சக்கிலிக்கு அணா 12. நெய்கிறவனுக்கு அணா 9. பண்ணை ஆள் ஆணுக்கு அணா 8, பெண்ணுக்கு அணா 4. செம்படவனுக்கு அணா 9. கூலிக்காரனுக்கு அணா 8. போஜன பதார்த்தங்களின் விலை வர வர அதிகரித்து வருவதால் தொழிலாளிகளுக்குள் மிகுந்த அதிருப்தியும் உண்டாயிருக்கிறது. ஜாதிகளுக்குப் பதிலாக அந்தந்தத் தொழிலாளிகள் ஒருவருக்கொருவர் உதவி ஒத்தாசை செய்துகொள்ளும்படி ஒரு சங்கம் ஏற்படுத்திக்கொள்ளுவார்கள். ஜாதி வித்தியாசத்தாலுண்டாகும் கெடுதல் நீங்கி இதனால் பெரு நலமுண்டாகிறது.

ஜப்பானிய அரசாங்கம் தன் சேனையின் தொகை இன்னதென்று திட்டமாய்ச் சொல்லாவிட்டாலும் அதன் தற்காலச் சேனை ஏறக்குறைய 220,000 பேர் என்று கணிக்கப்படுகிறது. ஜப்பானைவிட ஆறுமடங்கு ஜனத்தொகையுள்ள இந்தியாவிலோ ஆங்கிலேய சேனை 74,484-ம் இந்திய சேனை 158,343-ம் ஆக மொத்தம் 239,827 தான். யுத்த விதியின்படி 17 வயதுமுதல் 40 வரையுமுள்ள சகல சுதேசிகளும் அவசியம் நேரும்போது தேசத்திற்காக யுத்தத்திற்குச் செல்ல ஆயத்தமாயிருக்கவேண்டும். ஜப்பானிய வாலிபரில் பாதிக்கு மேலானோர் இரண்டு வருஷம் சேனையில் உழைக்கக் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். ஜப்பான் வருஷவாரி சுமார் 17 கோடி ரூ. சேனைக்கென்று செலவிடுகிறது.

30 வருஷத்துக்குமுன் ஜப்பானுக்குப் போர்க்கலங்களில்லை. இப்பொழுதோ 146 யுத்தக் கப்பல்களுண்டு. இன்னும் பெருங் கப்பற்சேனை இருக்கும்பொருட்டு வருஷவாரி ஜனங்களிடம் யுத்தவரியாக ரூ. 12 கோடி சேர்க்கிறது. இந்தியாவிலுள்ள நமக்கு இவ்வித பாரமில்லாததற்காக ஆங்கிலேயருக்கு அனந்த வந்தனம். இந்தியாவின் ஜனத்தொகை ஜப்பானைவிட ஆறுமடங்கு பெரிதாயிருந்தாலும் தரைச்சேனைக்கும் கடற்சேனைக்குமாக இருதேசங்களிலும் செலவிடப்படும் தொகையில் வித்தியாசமில்லை.

ஜப்பானின் செலவுக் கணக்கைப் பார்க்க சிலர் விரும்புவார்கள். அத்தேசத்து 1907-ம் வருஷத்திய செலவுக் கணக்குப் பின்வருமாறு:—

(யென் = 1½ ரூ.)

| | சாதாரணம். | அசாதாரணம். |
|---|---|---|
| இராஜகுடும்பம் | யென் 3,000,000 | ... |
| புறத்தேசவிஷயம் | 3,260,312 | 495,240 |
| உள்நாட்டுவிஷயம் | 19,215,683 | 12,634,595 |
| வரவு செலவுவிஷயம் | 266,166,823 | 12,687,882 |
| கரைச்சேனை | 53,663,786 | 57,953,380 |
| கடல்சேனை | 33,414,695 | 49,667,524 |
| நியாயஸ்தலம் | 10,716,131 | 605,485 |
| கல்வி | 2,034,920 | 1,391,156 |
| பயிர்த்தொழிலும் வர்த்தகமும் | 5,694,342 | 14,087,923 |
| கடிதப் போக்கு வரவு | 24,077,404 | 50,325,770 |
| மொத்தம் | 412,154,163 | 199,238,955 |

ஆக மொத்தச் செலவு யென் 611,393,118 அதாவது ரூ. 917,089,677

இந்தியாவின் வரவு செலவுக் கணக்கை ஜப்பானுடையதோடு ஒப்பிட்டுப் பார்ப்போம்.

| | இந்தியா. | ஜப்பான். |
|---|---|---|
| மொத்த வரும்படி | ரூ. 12,722 லட்சம். | 5,696 லட்சம். |
| மொத்தச் செலவு | ,, 12,103 ,, | 6,164 ,, |
| நிலவரி | ,, 2,471 ,, | 1,234 ,, |
| காடுகளினால் வரும்படி | ,, 109 ,, | 47 ,, |
| உப்பு வரி | ,, 712 ,, | 243 ,, |
| சுங்கம் | ,, 613 ,, | 355 ,, |
| மொத்த வரிகள் | ,, 3,249 ,, | 3,644 ,, |
| மொத்த ஏற்றுமதி | ,, 15,771 ,, | 4,822 ,, |
| மொத்த இறக்குமதி | ,, 10,441 ,, | 7,328 ,, |

இவ்விதம் ஒத்துப்பார்க்கும்போது இந்தியாவின் ஜனத்தொகை ஜப்பானுடையதைவிட ஆறுமடங்கு பெரியதென்பதை மறக்கலாகாது. ஜப்பானில் ஒவ்வொருவனும் கொடுக்கும் உப்பு வரி இந்தியாவில் ஒருவன் கொடுப்பதைப்போல் இருமடங்கு அதிகம். ஜப்பானில் ஒவ்வொருவனும் கொடுக்கும் ராஜ்ய வரி ரூ 8; ஏறக்குறைய கொடுக்கவேண்டிய வரிகளெல்லாவற்றையும் கூட்டினால் ஒவ்வொருவனும் வருஷவாரி



சுமார் ரூ. 12 கொடுப்பதாகத் தெரியவரும். இந்தியாவில் நிலவரி தலைக்கு ரூ. 1-3-7, சகல வரிகளின் மொத்தம் ரூ. 2-க்கு குறைவாகவும் இருக்கிறது. அதாவது ஜப்பானியரின் கஷ்டத்தில் நமக்கு ஆறில் ஒரு பங்குகூட இல்லை. இந்தியா வரும்படியில் உண்டாயிருக்கும் விர்த்தி சொற்பமோ. 1840-ம் வருஷத்தில் 28 கோடியாயிருந்த ஏற்றுமதி இறக்குமதி தற்சமயம் 261 கோடியாகியிருக்கிறது. அதே சமயம் இந்திய வரியும் 21 கோடியிலிருந்து 127 கோடியாயிற்று. என்றாலும் இந்தியாவின் எளிமை எளிமையே. நாம் இதைப் போக்க உதவி செய்தோம், இனி இதைவிட அதிகமும் செய்வோமாக.

# V

## ஜப்பானியரின் மதஙகள.

ஜப்பானியர் மூன்று மதங்களைத் தொன்றுதொட்டு அனுசரித்து வருகின்றனர். எவையெனில்: ஷின்ற்றோமதமும், கன்பூஷியஸ்மதமும், புத்தமதமுமே. தேவர்களின் மார்க்கம் என்றர்த்தங்கொள்ளும் ஷின்ற்றோமார்க்கம் காலஞ்சென்ற வீரர்களின் வணக்கத்தைப் போதித்து இறந்தகாலத்துக் குரியதாயிருக்கிறது. நீதிசாஸ்திரப் போதனையடங்கிய தான கன்பூஷியஸ்மதம் இன்றுடைய ஜீவியத்தையே வற்புறுத்துகிறதாகையால் நிகழ்காலத்துக்குரியது. ஆவிக்குரிய ஆராதனைகளின் மூலமாய் ஒன்றுமில்லாமற்போகிற நிர்வாண நிலைமையைத் தேடவேண்டுமென்று போதிக்கிற புத்தமதம் இனி வருங்கால ஜீவியத்தை வற்புறுத்துகிறதாகையால் எதிர்காலத்துக் குரியது. ஆகிலும் ஜப்பானியர் இம்மூன்று மதங்களையும் முற்றிலும் ஒன்றுக்கொன்று பிரத்தியேகப்பட்டவைகளாய் மதிக்கிறார்களென்று நினைக்கவுங்கூடாது. "இவைகளை திட்டமாய் ஆராய்ந்து அவற்றின் பேதங்களைக் கண்டுபிடிக்கும்படி தேடுகிறவர்கள் அத்தேசத்தில் வெகு சொற்பம்; இவைகள் எல்லாம் சேர்ந்துதான் மனிதஜீவியத்தின் கடமைகளைப் போதிக்கிறதென்று அவர்கள் எண்ணுகிறார்கள்." "ஜப்பானியர் ஷின்ற்றோமார்க்கத்திலிருந்து தங்கள் தேசபக்தியையும் கன்பூஷியஸ்மார்க்கத்திலிருந்து சன்மார்க்கத்துக்கும் ஜனசங்கத்துக்குமுரிய சட்டதிட்டங்களையும் புத்தமார்க்கத்திலிருந்து இரட்சிப்பென்று அவர்கள் எண்ணுகிற நிலைமையைக்குறித்த நம்பிக்கையையும் பொதுப்படக் கற்றுக்கொள்ளுகிறார்கள்."

ஜப்பான் பூர்வத்திலே கேவலமான அஞ்ஞானத்திலும் மூடபக்தியிலும் அமிழ்ந்திருந்தது. இந்த மூடபக்தி பிந்தி உண்டான மதங்களிலெல்லாம் கலந்துபோயினும் நாளதுவரையிலும் பட்டிக்காட்டு ஜனங்களின் மார்க்காசாரம் பெரும்பாலும் இப்படிப்பட்டதாகவே யிருக்கிறது. ந



டெங்கும் லட்சக்கணக்கான அசுத்த ஆவிகள் இருக்கிறதென்றும் அநேக மாந்திரியங்களாலும் ஜெபங்களாலும் அவைகளைச் சாந்திபண்ணி வரவேண்டுமென்றும் சாதாரண ஜனங்கள் நம்புகிறார்கள். இப்படியாக ஜப்பானில் அதரிசனமான ஆவிகளின் வணக்கமும் உயிரற்ற பொருட்களையும் இயந்திரங்களையும் வணங்குகிற பொருள்வணக்கமும் இயற்கையின் ஜெனிப்பிக்கிற சக்துவங்களை வணங்குகிற வணக்கமும் மரம், பாம்பு ஆகிய இவற்றின் வணக்கமும் தற்காலத்திற் காணப்படும். இவைகளெல்லாம் ஆதிமுதல் நாளதுவரையிலும் மெத்தப் பிரபலமாயிருக்கின்றன.

அருவருப்பான சிலமார்க்காசாரங்களும் அங்கே யுண்டு. இவைகளை இப்பொழுது அரசாங்கத்தின் சட்டங்களால் விலக்கப்பட்டிருந்தபோதிலும் காட்டுப்புறங்களிலே இன்னும் நடந்தேறிவருகின்றன. சமுசாரிகள் மலைச்சரிவுகளிலே ஒரு கல்லை அல்லது மரக்கட்டையை நட்டு வைத்துக்கொண்டு அதைக் கும்பிட்டபிறகுதான் உழவு, நடவு வேலைகளை ஆரம்பிப்பார்கள். கொசுக்கூட்டங்களைப்போல் அத்தனை ஏராளமான பேய்கள் மனிதனைச் சூழ்ந்திருக்கிறதென்பது அவர்கள் கருத்து. இவைகள் பிரவேசியாதபடி தடைகட்ட அநேக இயந்திரங்களை வீடுகள்தோறும் வைப்பார்கள். ஜப்பான் தேசத்துப் பிரதான மார்க்கங்களின் விவரங்களைச் சற்றே கவனிப்போம்.

(1) ஷின்ற்றோமார்க்கம். — ஜப்பான் தேசத்துப் பூர்வ வணக்கங்களையெல்லாம் சேர்த்து ஒழுங்குபடுத்தித் தேசமார்க்கமாக்கி அதற்கு ஷின்ற்றோமார்க்கம் என்ற பெயரைக் கொடுத்தார்கள். இது இயற்கை வணக்கமும் மூதாக்களின் வணக்கமும் கலந்துண்டானது. இம்மதஸ்தர் தங்கள் ஆலயங்களிலே சிலைகள், விக்கிரகங்கள் யாதொன்றையும் வைக்கிறதில்லை; தேவர்களுக்குப் பலி செலுத்துவார்கள்; ஆராதனை ஒழுங்குகளை உபயோகித்து ஜெபிப்பார்கள்; இயற்கையின் சக்துவங்களையும் ஆவிகளையும் மூதாக்களையும் வீரர்களையும் வணங்கிக் கடைசியாக இப்பொழுது ராஜகுடும்பத்தாரையும் பட்டத்துச் சக்கரவர்த்தியையுங்கூட வணங்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். பட்டத்துச் சக்கரவர்த்தியைத் தெய்வாம்ச

மாக மதிப்பார்கள். தேவனுக்கு விரோதமான துன்மார்க்கக் கிரியைகளைக்காட்டிலும் சடங்காசாரத்துக்கு விரோதமான தீண்டல்களே பெரிய பாவமாக மதிக்கப்படுகின்றமையால் மார்க்க ஆராதனைகளும் அதற்கிசைவாகச் சடங்காசாரத்துக்குரிய சுத்திகரிப்பாகவே யிருக்கும். இவ்வகை மார்க்கத்தின் பயனென்னவெனில்: ஜப்பானியர் சன்மார்க்கத்திற் தேறியிருப்பதைவிட தேச சுத்தத்தில் அதிகமாய்த் தேறி வந்திருப்பதும், மிக்காடோ என்ற சக்கரவர்த்தியின் தேச ஆளுகை சர்வாதிகாரம் பொருந்தியதாயிருப்பதும், தேசபக்தியே மார்க்கபக்தியாக மதிக்கப்படுவதுமே. சக்கரவர்த்தி பரத்திலிருந்து வந்தவரென்று இம்மார்க்கம் போதிக்கிறபடியால் அவருடைய கட்டளைகளுக்கு மிஞ்சின சன்மார்க்கப் பிரமாணம் அவர்களுக்கில்லாமற்போகிறது. இது தேசபக்திக்கு உதவியானென்றாலும் மார்க்கமாக உபயோகமற்றதுதான்: மார்க்கமென்ற பெயருக்கும் தகுதியுள்ளதல்ல; இரட்சணியத்தாருக்கு நடந்துகொள்ளவேண்டிய கிரமத்தைக் காட்டுகிற ஒரு ஒழுங்குமன்று. உனக்குள்ளே வைக்கப்பட்டிருக்கிற மூளை இயற்கையின்படி நட, தேசச் சட்டங்களுக்குக் கீழ்ப்படி என்ற இரண்டு கற்பனைகளுக்குள்ளே மனிதருடைய கடமைகளனைத்தையும் அது அடக்கிப்போடுகிறது. சன்மார்க்கப் போதனையும் மறுமையைப்பற்றிய உபதேசமும் அதிகமாயில்லாத இந்த மார்க்கம் மனிதருடைய சன்மார்க்க ஜீவியத்தைச் சீர்திருத்துவதற்குப் போதியதல்ல.

ஷின்றோ மார்க்கத்திலே யாதொரு விசுவாசப்பிரமாணமுமில்லை; சன்மார்க்கப்பிரமாணமுங் கிடையாது. இம்மார்க்க சரித்திரத்தை மூன்று காலங்களாகப் பிரிக்கலாம். புத்தமதம் ஜப்பானில் பிரவேசிக்கும் வரையிலுமுள்ளது முதலாங்காலம். இக்காலத்திலே மதத்தைப் பிரத்தியேகமான ஒரு ஏற்பாடாக ஜப்பானியர் நினைக்கவில்லை. மரித்தவர்களையும் இயற்கையின் மேலவஸ்துக்களையும் கும்பிட்டுவந்தார்கள். மோட்ச நரகங்களைப்பற்றி அவர்களுக்கு யாதொரு நம்பிக்கையுமில்லை. இரண்டாங்காலத்திலே ஷின்றோ மார்க்கம் புத்த மார்க்கத்தோடு கலந்துபோனபடியால் அது வளருவதற் கிடமில்லாமற்போயிற்று. மூன்றாங்



காலம் ஏறக்குறைய 1700-ம் வருஷத்தோடு ஆரம்பிக்கிறது. இதுமுதற்கொண்டு இந்த மார்க்கம் புதிய உயிரடைந்து தேச ஆளுகைக்கும் லௌகீக விஷயங்களுக்கும் சார்ந்ததாயிற்று; விசேஷமாக ராஜபக்தியைப் போதிக்கிறதாயிற்று. 1868-ம் வருஷத்திலே புத்தமார்க்கம் ராஜாங்கமார்க்கமாயிராதபடி தள்ளப்பட்டுப்போனபின்பு ஷின்றோமதம் அதன் ஸ்தானத்திலே ராஜாங்கமார்க்கமாயிற்று. அக்காலத்திலே சுதேச வைராக்கியத்தின்பொருட்டுப் பூர்வ மார்க்கமாகிய இதைப் பிரபல்யப்படுத்தும்படி பலத்த ஒரு முயற்சி செய்யப்பட்டது. ஆயினும் அம்மார்க்கம் ஜனங்களைத் திருப்திபண்ணக் கூடாததாயிருந்தமையால் அம்முயற்சி முற்றிலும் தவறிப்போயிற்று. ஷின்றோமதத்தின் முக்கியமான கற்பனைகள் மூன்று:—

1. தேவர்களைக் கனம்பண்ணு; தேசத்தை நேசி.

2. பரத்துக்குரிய சட்டதிட்டங்களையும் மனிதனுடைய கடமைகளையும் தெளிவாய்க் கற்றுக்கொள்.

3. சக்கரவர்த்தியை உன் ராஜாவாக மதித்து அவருடைய சபையிலிருந்து பிறக்கும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படி.

இந்த மார்க்கத்தின் பூர்வீக வேதத்திற்கு கோஜிக்கி என்று பெயர்; இது ஏறக்குறைய கி. பி. 700-ம் வருஷத்துக்கு முன் எழுதப்பட்டது. இதிலே தேவர்களும் உலகமும் உண்டான விதத்தைப்பற்றிய வீண் கட்டுக்கதைகள் நிறைந்திருக்கின்றன. மனுஷ உண்டாவதற்கு முன்னமே சடப்பொருள் இருந்ததென்றும் இது சுயமாய் வளர்ந்து தெய்வங்கள் உண்டானார்களென்றும் இந்நூலிலே எழுதியிருக்கிறது. இதின் சில பாகங்கள் வேறெந்த நூலிலுங் காணப்படாத அவ்வளவு அவலட்சணமானவை; இந்துப் புராணங்களிற்கூட இவ்வளவு அருவருப்பான சரித்திரங்களிருக்கமாட்டா. ஷின்றோமார்க்கத்தின் தெய்வங்களும் மெத்த அருவருப்பானவை. ஜப்பானியருடைய வீடுகளொவ்வொன்றிலும் இந்தத் தெய்வங்களுக்கு ஒரு மாடக்குழியும் அதிலே அநேக சுரூபங்களும் ஒரு பலிபீடமும் ஒரு தீபமும் வைக்கப்பட்டிருக்கும்.

இந்த மார்க்கத்தின் மேன்மையான பாகத்தைக் கவனித்தால் அது சிறப்பான யோசனைகளடங்கிய மனமயக்கமென்றே சொல்லவேண்டும். அதின் குறைவான பாகத்தைக் கவனித்தால் துரைத்தனத்தாரும் பூசாரிகளும் விதிக்கிற கட்டளைகளுக்குக் குருட்டுத்தனமாய்க் கீழ்ப்படிவதிலேயே அது அடங்கும். ஆகவே ஜப்பான் தேசத்து ஆதி மார்க்கமாகிய ஷின்ரோமதம் எவ்விஷயத்திலும் குறைவுள்ளதென்று விளங்குகிறது.

(2) புத்தமதம்.—இது கி. பி. 552-லே ஜப்பானிற் பிரவேசித்தது. இந்து தேசத்துப் புத்தமதத்துக்கும் ஜப்பான் தேசத்துப் புத்தமதத்துக்கும் வித்தியாசம் மெத்தவுண்டு. கௌதமர் மரித்துச் சுமார் 1000 வருஷங்களானபின்புதான் இது ஜப்பானுக்கு வந்திருக்கிறது. இதற்குள்ளாக அது பெரும் மாறுதலடைந்திருந்தது. இந்தியாவிலே சீர்குன்றிப்போன இந்துமார்க்கத்துக்கு எதிரியாக அது ஏற்பட்டது. ஆதி ஆரியமார்க்கமும் அதன் வேதங்களும் வரவரக் கலப்புள்ளதாகிக் கஷ்டமான சடங்காசாரங்களும் அடிமைப்படுத்துகிற ஜாதிபேதமும் விக்கிரகாராதனைக்குரிய விருத்தியும் நிறைந்த பிராமணமார்க்கம் தலையெடுத்தது. மெய்ப்பக்தனாகிய புத்தனுக்கு இந்தச் சீர்கெட்ட மார்க்கம் பிடிக்கவில்லை. ஆகவே அவர் அதின் பலியாசாரங்களையும் ஜாதி வித்தியாசத்தையும் விக்கிரகங்களின்மேலுள்ள வீண் பக்தியையும் கண்டித்துப் பேசினார். இவைகளுக்கு எதிரிடையாகத் தம் மதத்தை உண்டாக்கி, சுயபோதனையையும் விசாலமான அன்பையும் அப்பியாசிப்பதிலே ஆசையை மேற்கொள்ளுவதே பிரதானமென்று போதித்தார். பிராமணமார்க்கத்தின் ஜாதி பேதத்தையும் பிராமணப் பூசாரிகளின் பெருமையையும் கண்டித்து மனிதரனைவரும் சமமானவர்களென்று கற்பித்தார். இவருடைய மதஸ்தருக்குள் கி. பி. 311-ம் வருஷத்தில் ஒரு பெரும் பிரிவினையுண்டாயிற்று. ஆதிக்கொள்கைகளை யனுசரித்த தெற்கத்தியார் இலங்கை, பர்மா, சீயம் தேசங்களிற் தங்கள் மார்க்கத்தைப் பிரபல்யப்படுத்தினார்கள். இந்தத் தேசங்களிலே புத்தமார்க்க உபதேசம் பற்பல ஆசாரங்களாக



மாறிக்கொண்டதென்றாலும் ஆதிக்கொள்கைகளுக்கு அவ்வளவாய்ப் பேதப்படவில்லை. வடக்கத்தியார் நேபாளம், திபெத்து, சீனு, கொரியா, ஜப்பான் முதலிய தேசங்களிலே மார்க்க பிரபல்யம் செய்தார்கள். புத்தமார்க்கம் சிறந்த சன்மார்க்க போதனைகளடங்கியதாயிருந்தபோதிலும் மனிதனிலேயிருக்கும் மதத்துக்குரிய கட்டத்தைக் கவனியாமலும் தேவனுக்கும் அவனுக்குமுள்ள சம்பந்தத்தைப் போதியாமலும் விட்டுவிட்டபடியால் தேவதாபக்தியுள்ளவர்களான இந்துக்களைத் திருப்திசெய்யக் கூடாமற்போயிற்று. இந்த மார்க்கத்திலே ஒரு பெரும் மாறுதல் மாத்திரம் உண்டாகியபின் அது இத்தேசத்திலே அற்றுப்போயிற்று. ஆயினும் வடக்கத்தியாருடைய புத்தமார்க்கம் தேவனைப்பற்றிய போதனையுள்ளதாகச் சீர்திருத்தமடைந்தது. தான் சென்ற இடங்களிலுள்ள ஜனங்களுக்குப் பொருத்தமான அநேக தெய்வங்களை உண்டாக்கிக்கொண்டது. அவர்களுடைய வீண்பக்திக்குரிய ஆசாரங்களையும் ஏற்றுக்கொண்டது. இவ்வாறு அது தன் ஆதி நிலைமையையும் புத்தனுடைய சன்மார்க்க நோக்கத்தையும் விட்டுவிட்டதென்றாலும் தேவனைப்பற்றிய போதனையிலே முன்னேறியது; தெய்வத்தைப்பற்றிப் புத்தனுக்குண்டா[illegible]வைவிட மேலான போதனைகளைப் போதித்தது. ஆகவே ஜப்பான் தேசத்திலுள்ள புத்தமதஸ்தரில் மிகுதியானவர்கள் தேவனொருவருண்டென்றும் அவருக்கு மார்க்க ஆராதனை செய்வது அவசியமென்றும் மோட்சம் நரகமுண்டென்றும் நம்புகிறார்கள். புத்தமதம் ஜப்பான் முழுமையிலும் பரம்பப் பல நூற்றாண்டுகள் சென்றன. கி. பி. 572-லே ஆண்ட ஷோட்டோக்கூ என்ற அரசன் இப்புது மதத்தைப் பிரபலப்படுத்தும்படி அதிக முயற்சிசெய்தான். ஆதலால் இவனுக்குப் புத்தமதக் கொன்ஸ்தாந்தீன் என்னும் பெயர் தகும். அவன் காலத்திலேதான் இந்த மார்க்கம் மேன்மையடைந்து அதிகமாய்ப் பரம்பினது.

அதுமுதல் ஆயிரம் வருஷங்களாக ஜப்பானியருடைய கல்வி யாவற்றுக்கும் புத்தமதமே மூலமாயிருந்தது. சேம்பர்லேன் பண்டிதர் எழுதியிருக்கிறபடி: "கல்விவிஷயம்

முழுவதும் அநேக நூற்றாண்டுகளாகப் புத்த மதஸ்தாபனத்திலேயே கட்டப்பட்டுவந்தது. புத்தமதமே சாஸ்திரங்களையும் வைத்திருந்ததுமின்றி அத்தேசத்திற் கொண்டுவந்தது; ஜனங்களுடைய கலைகளுக்கும் நாடகங்களுக்கும் அஸ்திபாரமாயிற்று; தேசப் பிரமாணங்களுக்கும் ஜனசங்க முயற்சிகளுக்கும் சாஸ்திராப் பியாசங்களுக்கும் ஆதாரமாயிற்று. சுருக்கிச் சொன்னால் புத்தனுடைய உபதேசத்திலேதான் ஜப்பானியர் பயிற்சியடைந்து வந்தார்கள். ஆகிலும் அவர்கள் ஒரு ஜாதியாக இந்தச் சத்தியத்தை முற்றிலும் மறந்துபோயிருக்கிறார்கள். படிப்பாளியான எந்த ஜப்பானியனிடத்திலும் போய் புத்த மதத்தைக்குறித்து ஒரு கேள்வி கேட்டுப்பார்; அவன் உன்னைப்பார்த்துச் சிரிப்பான்; அதைப்பற்றி ஒன்றும் அறியாதவனும் தன் அறிவீனத்தைக்குறித்துப் பெருமை பாராட்டுகிறவனுங் காணப்படுவான்."

புத்தமதத்தின் திடமான தத்துவசாஸ்திரப் போதனையில் ஜப்பானியருடைய மனம் கவியவேயில்லை; புத்தமத வேதாகமத்தைத் தங்கள் பாஷையிலே மொழிபெயர்க்கும்படி அவர்கள் எந்தக்காலத்திலாவது முயற்சி செய்ததேயில்லை. புத்தனுடைய ஜீவிய சரித்திரத்தையாவது அவனுடைய மார்க்கத்தின் சன்மார்க்கப் போதனையையாவது திட்டமாயும் தெளிவாயும் சொல்லுகிற யாதொரு புஸ்தகமும் அவர்களுக்குக் கிடையாது. புத்தமார்க்க உபதேசங்கள் சாதாரண ஜனங்களுடைய புத்திக்கு எட்டாத ஆழமாயிருந்தபடியால் அவர்கள் அறிவுக்கு இசைந்ததான இயந்திரங்களையும் காப்புத் தாயித்துகளையும் புண்ணிய யாத்திரைகளையும் ஆடம்பரமான ஆராதனைகளையும் இம்மார்க்கத்திலே சேர்த்தார்கள். நிரீச்சுரவாதியான புத்தனையும் பெரோனியின் தெய்வமான அமீதா என்பவனையும் வேறுதேவதைகளையும் தேவர்களாகப் பாவித்து அவர்களுக்கு ஆலயங்களைக் கட்டி ஆராதனை செய்துவந்தார்கள்.

பூர்வ புத்தமதத்திலே: அந்த மதத்தின் வேதம் முழுவதையும் படித்துக் கண்டிப்பான சன்னியாசத்தையும் தியானத்தையும் அப்பியாசிக்கிறதினாலேமாத்திரம் நிர்வாணமடையலாமென்று போதிக்கப்பட்டது. இவ்விஷயத்திலே மனுஷனுக்குத் தேவ ஒத்தாசை யாதுமில்லாமல் அவன்தானே தன் இரட்சிப்புக்குரிய சகலத்தையும் செய்து முடிக்கவேண்டியவனாயிருந்ததுபற்றி அநேகர் மனஞ்சோர்ந்துபோகக்கூடியதாயிருந்தது. ஆனால் ஜப்பானிலே புதிதாய் உண்டான புரொட்டெஸ்டாண்டு புத்தமார்க்க வகுப்பாருக்குள் இந்தக் கொள்கைகள் மாறி சர்வஜன ரட்சகனான அமீதாவின் வல்லமையை விசுவாசிப்பதினாலேயே இரட்சிப்படையலாமென்ற போதனையுண்டாயிற்று. இந்தக் கொள்கைகள் புத்தனுடைய ஆதி உபதேசத்துக்கும் தற்காலத்தில் இலங்கையிற் காணப்படும் புத்தமத உபதேசத்துக்கும் நேர்விரோதமானது. இதற்குத் திருஷ்டாந்தமாக ஷின் வகுப்பாரான புத்தமதஸ்தரை எடுத்துக் கவனிக்கலாம். ஜப்பானிலுள்ள புரொட்டெஸ்டாண்டு புத்தமதக் கொள்கைக்காரருக்குள் இவர்களே விசேஷித்தவர்கள். இவர்களுக்குச் சுமார் 2,000 ஆலயங்கள் அங்கே உண்டு. இவர்கள் கொள்கை மெத்தப் பேதமானது. வேறொருவருடைய புண்ணியத்தினாலேமாத்திரம் மனிதன் இரட்சிப்படையலாமென்று இவர்கள் போதிக்கிறார்கள். கிரியைகளினாலும் விசுவாசத்தினாலுமல்ல, விசுவாசத்தினால்மட்டும் இரட்சிப்பு வரும் என்கிறார்கள். ஆதலால், "தபசுகளும் உபவாசங்களும் புண்ணிய யாத்திரைகளும் துறவறமும் அநேக வீண்பக்திகளும் இவர்களுக்குள் கிடையாது" என்று ஒருவர் சொல்லுகிறார். புத்தன்பேரில் விசுவாசமும், ஊக்கமான ஜீவியமும், பரிசுத்த நடக்கையும், அன்பான ஜெபமுமாத்திரம் வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். வேத விசுவாசத்தைவிட சன்மார்க்க ஜீவியமே பிரதானமென்று போதிக்கிறார்கள். மனிதன் ஜீவியத்தில் குணப்பட்டும் பரிசுத்தமாக்கப்பட்டும் வருகிறானென்ற போதனையும் அவர்களுக்குண்டு. இவ்வகுப்பாருடைய கொள்கைகளிலநேகம் குறைந்தபட்சம் அறுநூறு வருஷங்களுக்குமுன் உண்டானவை.

கிறிஸ்துமார்க்கம் ஜப்பானிலே பிரவேசித்த காலமுதற்கொண்டு ஜனங்களுக்குப் புத்த மதத்திலேயிருந்த பற்றுக் குறையத்தொடங்கினது. இதைக் கவனித்த புத்தமதக் குருக்கள் கிறிஸ்துமத விர்த்தியைத் தடுக்கவும் தங்கள் மார்க்

சத்தை நிலைநிறுத்துவதற் தக்கதாகக் கிறிஸ்துமார்க்கத்துக்குரிய ஏற்பாடுகளின் வெகுகத்தைத் தங்கள் மார்க்கத்திலும் நுழைத்துவருகிறார்கள். ஆகவே இப்பொழுது அந்தத் தேசத்திலே புத்தமார்க்க ஞாயிறுபாடசாலைகளும், புத்த வாலிப ஐக்கிய சங்கங்களும் புத்தமதப் பாடசாலைகளும் புத்தமதப் பிரசங்க ஆராதனைகளும் போர்ச்சேவகருக்குள்ளும் தாழ்ந்த ஜாதியாருக்குள்ளும், ஸ்திரீகளுக்குள்ளும் விசேஷித்த வேலையும், புத்தமத ஆதரவுசாலைகளும் ஏற்பட்டிருக்கின்றன. புத்தமார்க்கத்தின் பூர்வக்கொள்கைகளை மாற்றித் தற்காலத்துக்கேற்றபடி அதைச் சீர்திருத்தி இவ்வாறுகக் கிறிஸ்துமார்க்க விர்த்தியைத் தடுக்கத்தக்க பிரயாசம் அதிகம் நடந்துவருகிறது. ஆழ்ந்த யோசனையடங்கியதான சாஸ்திரத்துக்குரிய புத்தமதம் படிப்பாளிகளும் பிரபுக்களுமானவர்களால் இன்னும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. ஆயினும் அது சகலமும் நிறைவுதாமென்ற கேவலமான போதனையுள்ளதாயும் சாதாரண ஜனங்களுக்குப் பயன்படாததாயுமிருக்கிறது. சாதாரண புத்தமார்க்கம் படிப்பாளிகளைத் திருப்திசெய்யக் கூடாததாயிருக்கின்றமையால் பெரும்பாலோர் அதைத் தள்ளிவருகிறார்கள். கிறிஸ்துமார்க்க ஏற்பாடுகளைப் புத்தமதத்தில் நுழைக்கும்படியான முயற்சி புதிய திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்துவைக்கிறதற் கொப்பாகும். ஆகவே புத்தமார்க்கம் அங்கே நன்மைசெய்து வந்தகாலத்துக்கு முடிவு வந்துவிட்டது; தற்காலத்தாருக்குத் திருப்திசெய்யத் தக்கதான கிறிஸ்துமார்க்கத்தின் பேரொளிக்கு முன்பாக அது மங்கிப்போக வேண்டியதுதான்.

இதைக்குறித்து ஜார்ஜ் உவ்லியம் நாக்ஸ் என்பவர்: "புத்த மார்க்கம் தன் கிரியையைக் காட்டுவதற்கு ஜப்பான் தேசம் ஏற்ற இடமாயிருந்தது; ஆகிலும் அது அத்தேசத்தாரை மேன்மைக்குக் கொண்டுவராமற்போயிற்று; அது வெளியலங்காரத்தை விர்த்திபண்ணி வந்திருக்கிறதேயொழிய சன்மார்க்க ஜீவியத்தை விர்த்திக்கவில்லை" என்று சொல்லுகிறார். சாதாரண ஜனங்களைத் திருப்தி செய்வதற்கென்று இந்த மார்க்கத்திற் கணக்கற்ற தெய்வங்களையும் அசுத்த



ஆவிகளையும் கொண்டுவந்து நுழைத்தார்கள். ஜெபம்பண்ணுகிற தொல்லையைத் தொலைக்கும்படி ஜெபக்குட்டைகளையும் பாவட்டாக்களையும் காற்றிலே கட்டிப் பறக்கவிட்டார்கள். ஜெபச்சக்கரங்களும் ஜெபசூத்திரங்களும் வேறநேக இயந்திரங்களும் உண்டாக்கப்பட்டன. மகமதியமார்க்கத்திலே சொல்லப்பட்டிருப்பதற்கொப்பாய்ச் சிற்றின்பங்கள் நிறைந்த மோட்சமிருக்கிறதென்று ஜனங்களுக்குப் போதித்தார்கள். இப்படிப்பட்ட உபாயங்களால் அதை ஜப்பானிலே நிலைநிறுத்திவந்தார்கள். ஆயினும் 17-ம் நூற்றாண்டிலே கன்பூஷியஸ்மார்க்கம் திரும்பவும் அங்கே தலையெடுத்த காலமுதற்கொண்டு படிப்பாளிகளில் மிகுதியானவர்களுக்கு அதின்பேரிலிருந்த பற்று அற்றுப்போய்விட்டது. இப்பொழுது அந்த மார்க்கத்தில் அறிவாளிகளானவர் அநேகர் கிடையாது. இந்தியாவினின்று இந்த மார்க்கம் ஒழிந்துபோனதுபோல் இன்னம் கொஞ்சக்காலத்துக்குள்ளே ஜப்பானையும் விட்டு முற்றிலும் ஒழிந்துபோகுமென்பதற் கையமில்லை. அது ஒருவருக்கும் திருப்திகொடுக்கக்கூடிய மார்க்கமல்ல, மார்க்கங்களும் ஆசாரங்களும் கொள்கைகளும் ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொரு ஜனத்தாருக்குள் அதிக மதிப்பாயிருப்பதுண்டு. ஆயினும் அதைவிட அதிக மேன்மையான வேறொரு மார்க்கம் அல்லது ஆசாரம் வரும்போது அவைகள் முன்னே கவுளவுக்குக் குறையாகவும் தேவைக்கான வழியீனவுங் காணப்பட்டன; அவ்வளவுக்கு இருளாகவும் அடிமைத்தனத்தின் சங்கிலியாகவும் அந்தஜாதிகளுக்குக் காணப்படுவதன்றி. அப்படியே புத்தமதமாகிய விளக்கும் ஒருகாலத்திலே ஆசியாவின் அந்தகாரத்திற் பிரகாசித்துவந்தது. ஆயினும் இப்பொழுது நீதியின் சூரியனானவர் உதயமாகிப் பகற்காலம் ஆரம்பித்துவிட்டமையால் இனி அதன் மகிமை மங்கிப் போகும்.

(3) கன்பூஷியஸ்மார்க்கம். — "சன்மார்க்கமும் மனவெழுச்சியுங்கூடியதே கன்பூஷியஸ்மார்க்கம்" என்று ஒருவர் சொன்னார். இம்மதத்தை ஸ்தாபித்த கன்பூஷியஸ் புத்தனோடு ஏறக்குறைய ஏககாலத்திலே இருந்தவராகக் கொள்ளுகிறது. இவர் சீனருடைய சிறந்த இலக்கிய

களையெல்லாம் ஒழுங்குபடுத்தித் திரட்டினவர். இவருடைய காலத்துக்குமுன்னே ஏதோ ஒருவகையான ஏகேச்சுரமார்க்கம் அங்கே இருந்ததாகத் தெரிகிறது. இந்த மார்க்கத்திலே "கடவுள்" என்று வழங்கின ஆளுக்குரிய பதத்தைக் கன்பூஷியஸ் நீக்கிவிட்டு "பரம்" என்னும் குணப்பெயரை உபயோகித்தார். ஜனசங்கத்துக்கும் ராஜாங்கத்துக்குமுரிய கடமைகளையே அவர் முழுவதும் வற்புறுத்திப் பேசி "ஆவிக்குரிய ஆட்களைப்பற்றியோவெனில் அவர்களுக்கு ஒதுங்கி நடவுங்கள்" என்று சொன்னார். இவர் தம் கற்பனைகளாற் சிலவகைப் பாவங்களுக்குச் சீனரையும் ஜப்பானியரையும் விலக்கிக் காத்தது மெய்தானென்றாலும் தேவனைப்பற்றி யாதொன்றும் பேசியாமலிட்டதிலே தம் மதத்தின் ஆணிவேரையே அறுத்துவிட்டு அதனால் சீனருக்கும் ஜப்பானுக்கும் யாதொரு முன்னேறுதலில்லாதபடி செய்துவிட்டார். ஏனெனில் தேவனைத் தேடாத எந்த மனிதனும் ஆவிக்குரிய வளர்ச்சியடைவது கூடாத காரியம். கன்பூஷியஸ்மதம், புத்தமதம் ஆகிய இரண்டும் உன்னதமான சன்மார்க்கப் போதனைகளைப் போதித்தாலும் இந்தப் பிரதானமான குறைவு அவை இரண்டையும் முற்றிலும் கெடுக்கிறது. கன்பூஷியஸ்மார்க்கத்தின் நீதிபோதனைகளைத் திரட்டிப் பார்த்தால் அவைகள் மனிதருக்குள்ளிருந்து சம்பந்தங்களுக்கு இசைவாக ஐந்து பிரிவாய்க் காணப்படும். அரசனுக்கும் பிரஜைகளுக்கும், தகப்பனுக்கும் பிள்ளைக்கும், புருஷனுக்கும் மனைவிக்கும், அண்ணனுக்கும் தம்பிக்கும், இஷ்டனுக்கும் இஷ்டனுக்கும் உள்ள பரஸ்பர கடமைகளைக்குறித்த போதனைகளே. இப்படி இது ஜனசங்கத்துக்கும் ராஜாங்கத்துக்கும் தக்க உபதேசத்திலே விசேஷித்ததாயிருந்தாலும் மார்க்கத்தின் பிரதான நோக்கமாகிய தேவனைப்பற்றும் உபதேசத்திலே குறைவுள்ளதாயிருக்கிறது. ஜப்பானில் இம்மதம் போதிக்கிற மூல உபதேசம் தேசபக்தியே.

கி. பி. 600-ஆம் முதல் கி. பி. 1600-ஆம் வரையுமுள்ள ஆயிரவருஷக்காலமாக புத்தமதக் குருக்களே கன்பூஷியஸ் உடைய நீதிபோதகத்தைப் பிரபல்யப்படுத்துவதற்கு உதவியாயிருந்தார்கள். ஜப்பான் தேசமெங்கும் கன்பூஷியஸ் மதப்



பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன; சாமுராய் என்னும் போர்வீரக் குலத்தவர்கள் இந்த மதநூல்களையே கற்றுவந்தார்கள். கல்விமான்களை மயக்கும்பொருட்டாய் இந்த மதத்திலே (Pantheism) ஜகத்துவாதம் என்ற தத்துவசாஸ்திரக் கொள்கையும் சேர்க்கப்பட்டது. இப்படி இந்த மார்க்கம் வளர்ந்து பெலப்பட்டுக் கடைசியிலே புத்தமதத்துக்கே கொடிய சத்துருவாகிவிட்டது. பதினேழாம் நூற்றாண்டிலே அது ஒரு நூதனக் கிளர்ச்சியடைந்து உயர்குலத்தவர்களின் மார்க்கமாக மேன்மைபெற்றது. சீனபாஷையிலெழுதப்பட்ட அதன் நூல்கள் இந்த மேன்மைக்கு ஒரு காரணம். 1870-ஆம் வரையிலும் இந்த நூல்கள் தான் அத்தேசத்தில் பிரதான படிப்பு. தற்காலத்திலேயோ இந்த மார்க்கம் ஒரு சன்மார்க்க ஒழுக்கமாக மதிக்கப்படுகிறதேயன்றி மதமாக அவ்வளவாய் மதிக்கப்படுகிறதில்லை. ஆயினும் இதன் போதனைகளை புத்தமதத்தின் போதனைகளைக்காட்டிலும் அதிகமாய் ஜனங்களுடைய ஜீவியத்திலே காணப்படும். கன்பூஷியஸ்மதம் எந்தக் காலத்திலாகிலும் கீழ்க்குலத்தாராகிய ஜப்பானியருக்குள் அவ்வளவு பிரபல்யமடையவில்லை; அதை மிகவும் பரிபாலித்தவர்கள் மேற்குலத்தோர்தான். ஆனால் இவர்களும் இப்பொழுது இதைக் கைநெகிழ்ந்து மேற்கத்துச் சாஸ்திரங்களிலே தங்கள் கவனத்தைச் செலுத்திவருகிறார்கள். சீனராகிய கன்பூஷியஸ் இனிமேல் நமக்குப் போதகராயிருப்பது கூடாது என்று ஜப்பானியர் எண்ணத்தொடங்குகிறார்கள். அவருடைய மார்க்கம் ஒருகாலத்திலே நமக்கு எவ்வளவு அருமையும் பிரயோஜனமுமாயிருந்தாலும் அது இப்பொழுது மரித்துப்போயிற்றென்று அதைக் கைவிடவேண்டியதுதான் என்று காண்கிறார்கள். தேவனற்றதாகிய இந்த மதம் ஜப்பானையாவது சீனாவையாவது புதுப்பிக்கத்தக்கதான சக்தியுள்ளதல்ல.

**புஷிடோ** அல்லது **யுத்தவீரர்மார்க்கம்** என்னும் ஒன்று ஜப்பானிலே யுண்டு. ஆகிலும் உள்ளபடி பார்த்தால் அது ஒரு மதமாயிராமல் மானியம்பெறுகிற யுத்தவீரருக்கடுத்த ஒழுக்க நூல்தான். இதைச் சீர்திருத்தித் தற்

காலத்துக்கேற்கப் புதுப்பித்த ஒரு மார்க்கமாக்கலாமென்று பிரசாரப்படுத்தி வருகிறார்கள். இது ஷின்றோ மதத்திலிருந்து ராஜவிசுவாசம் என்னும் போதனையையும், கன்பூஷியஸ் மதத்திலிருந்து சன்மார்க்கப் போதனையையும் புத்த மதத்திலிருந்து விதியென்னும் கொள்கையையும் எடுத்துப் போதிக்கிறது. நேர்மை, தைரியம், இரக்கம், மரியாதை, உண்மை, ராஜவிசுவாசம், இச்சையடக்கம் ஆகிய நற்குணங்களை அதிகம் வற்புறுத்துகிறது. ஆயினும் இதிலே சில குறைகளுமுண்டு. புருஷர் கற்பைக் காத்து நடக்கவேண்டுமென்று அது போதிக்கிறதில்லை; தற்கொலையும் பழிவாங்குகிற சிந்தையும் சரியென்று போதிக்கிறது; இவைகள் எல்லாவற்றிலும் பெரிய குறை என்னவெனில், தெய்வத்தைப்பற்றி யாதொன்றும் சொல்லாமல் விட்டுவிடுவதே. இவ்விதமாக அது மார்க்க விரோதமான தத்துவ விருத்திகொண்டாலும் சரியான மார்க்கமல்ல. ஜப்பானியருக்கிருக்கும் மார்க்க தாகத்தை இது தீர்க்கக்கூடியதுமல்ல. ஷின்றோ இருந்தோமா என்ற ஜப்பானியன் சொல்லுகிறபடி: "ஜப்பானில் தற்காலத்திலே சரியான நீதியொழுக்க நூல் இல்லையாகும்." அது மாத்திரமல்ல, சரியான மார்க்கமும் அங்கே கிடையாது. ஜப்பானியர் இப்பொழுது அதைத் தேடிக்கொண்டிருக்கிற நிலைமையிலிருக்கிறார்கள். ஷின்றோமதம் தேசபக்தியைமாத்திரம் போதிக்கிற ஏற்பாடாயிருக்கிறது; கன்பூஷியஸ்மார்க்கமோ வெறும் சன்மார்க்கப்பிரமாணம்; புத்தமதம் ஒருபக்கத்திலே வீண் பக்தியாசாரங்களும் மறுபக்கத்திலே சூனியமான தத்துவ சாஸ்திரமுமாயிருக்கிறது. இவைகளிலொன்றும் ஜப்பானியருக்குத் திருப்தி செய்யக் கூடியதல்ல. ஜப்பானியர் மேற்கத்தியரிடத்திலிருந்து தற்காலத்துக்கேற்ற சிந்தனையையும் மேற்கத்து நாகரிகத்துக்குரிய சிந்தையையும் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்; ஆயினும் அந்த சிந்தையின் மேன்மைவாய்ந்ததைத் திருப்தி செய்யவும் நடத்தவுமதக்கதான அவர்களுடைய மதத்தைமாத்திரம் புறக்கணித்துவருகிறார்கள். இதைக் குறித்துப் பேர்பெற்ற ஒரு ஜப்பானியன் "மேற்கத்து நாகரிகம் என்னும் இப்பெரும் யந்திரத்தை நாம் வாங்கிக்



கொண்டோம்; ஆயினும் அதை ஓடுவதற்கு அவசியமான சன்மார்க்க எண்ணெயையோ தேடாமலிருக்கிறோம்" என்று சொல்லுகிறார். அப்படியே கவிப்பண்டிதரும்: "தனித்தாட்களின் உரிமைகளை மேன்மைப்படுத்துகிற ஜனசங்க நிலைமைக்குத் தனித்தாட்களின் உரிமைகளை மேன்மைப்படுத்துகிற மதமுங்கூட வேண்டும்" என்கிறார்.

ஷின்றோ, புத்தன், கன்பூஷியஸ் என்பவர்களுடைய மதங்கள் யாவும் ஜப்பானியரை மாற்றவும் அவர்களுக்குத் திருப்தி கொடுக்கவும் கூடாமற்போயின. ஆதலால் படிப்பாளிகளான ஜப்பானியரில் பலர் தற்காலத்தில் ஒரு மார்க்கமுமற்றவர்களாகவே ஜீவிக்கிறார்கள். இந்த மார்க்கங்கள் அநேக விஷயங்களில் குறையுள்ளவைகளாயிருக்கின்றன:—

(1) அருள் தத்துவமும் அன்பும் பொருந்தியவராகிய ஒரு தெய்வ முண்டென்றும் அவர் நமது பரமபிதாவானவர் என்றும் அவர் மனிதர் யாவரையும் தமது பிள்ளைகளாகப் பாவித்து வருகிறாரென்றும் இந்த மார்க்கங்களிலொன்றாவது போதித்ததில்லை.

(2) மனிதனுடைய மதிப்பையும் மேன்மையையும் இவைகள் போதித்ததுமில்லை. சிற்சில ஆட்களையும் விசேஷித்த வகுப்பாரையும் இது மேன்மைப்படுத்தியிருக்கிறதேயொழிய ஒவ்வொரு தனித்த ஆளும் விலையேறப்பெற்றவன் என்ற சத்தியத்தைப் போதிக்கவில்லை. மனிதருடைய சகோதரத்துவத்தை வற்புறுத்திக் காட்டவுமில்லை.

(3) இந்த மதங்களிலொன்றாவது ஸ்திரீயானவளுக்குரிய சரியான அந்தஸ்தை அவளுக்குக் கொடுக்கவில்லை. மதவிஷயமாகவும் கைத்தொழிலிலும் சாஸ்திர அறிவிலும் அவள் மனிதனுக்குக் குறைந்தவளல்ல; இவை யாவற்றிலும் அவனோடே சமமாயிருந்து அவனுக்கு ஞானமுள்ள கூட்டாளியாயிருக்கும்படிக்கே உண்டாக்கப்பட்டிருக்கிறாளென்று கிறிஸ்துமார்க்கம் போதிக்கிறவண்ணம் அவைகளிலொன்றுகூடப் போதிக்கவில்லை.

(4) இவைகள் குழந்தைப்பிராயத்தைக் கனப்படுத்தவில்லை. "பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" என்று போதித்தவர் கிறிஸ்துவே. சிறுவர்களைப்போலவே சிறுமிகளும் படிப்பிக்கப்படத் தக்கவர்கள் என்றும் காண்பித்தார். "கிறிஸ்து ஒருவர்தான் ஒரு சிறு பிள்ளையின் ஒப்பற்ற அருமையை அறிந்தவர்."

(5) பாவமற்றவரும் மனிதரைத் தேவனிடம் சேர்க்கும்படியாகத் தாமே உயிர்விட்டவரும் மரித்தோரிலிருந்தெழும்பினவரும் மனிதருக்கு நித்தியஜீவனைக் கொடுக்கும்படி என்றென்றைக்கும் பிழைத்திருக்கிறவருமான ஒரு இரட்சகரை ஜப்பானிய மதங்களி லொன்றாகிலும் போதிக்கவில்லை.

கிறிஸ்துமார்க்கம் இப்பொழுது ஜப்பானில் தீவிரமாய்ப் பரவியிருக்கிறது. அது போதிக்கிற கிறிஸ்துவே ஜப்பானியரையும் இந்துக்களையும் இரட்சிக்கவும் பூரணமாய்த் திருப்திசெய்யவும் கூடியவர்.

# VI

## ஜப்பானியரின் மதங்கள்—(முன் தொடர்ச்சி.)

### ஜப்பான் தேசத்தில் கிறிஸ்துமார்க்க அபிவிர்த்தி.

ஜப்பானிலே கிறிஸ்துமார்க்கம் பரம்புதலடைந்த சரித்திரம் முற்றிலும் வெவ்வேறான இரண்டு காலங்களாகப் பிரிக்கப்படும். முதலாவது காலச்சரித்திரம் ரோமைச்சபையின் பிரபல்யத்தைப்பற்றிச் சொல்லும். சவேரியார் ஜப்பானுக்குப் போன 1542-ஆம் முதல் 1637-ஆம் வரையிலுமுள்ள சுமார் ஒரு நூற்றாண்டுதான் இந்த முதற்காலம். இதிலே முதல் ஐம்பது வருஷங்களுக்குள்ளாகவே ரோமைச்சபையாரின் தொகை அத்தேசத்தில் 10 லட்சத்துக்கு அடுத்துவிட்டது. இத்தனைபேரையும் சரியானபடி நடத்திவந்திருந்தால் ஜப்பான் வெகு சீக்கிரம் கிறிஸ்தவ ராஜ்யமாயிருக்கும். ஆயினும் அக்காலத்துக் கிறிஸ்துமார்க்கம் ராஜாங்க ஒத்தாசையின்பேரில் நின்றதாகையால் அதற்கு விரோதமாக வெகு சீக்கிரத்தில் ஒரு போர் ஆரம்பித்தது. 1600-ம் வருஷத்தில் ஷோகன் ஐயாசு என்ற அதிகாரி கிறிஸ்தவர்களான சிற்றரசர்களுடைய தலைகளை வாங்கிப்போட்டதோடு ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களையும் யுத்தத்திலும் மற்றும் விதங்களிலும் கொன்றுபோட்டார். அநேகர் சிலுவையி லறையப்பட்டுப் பயங்கரமாய்த் துண்டிக்கப்பட்டார்கள். மற்றவர்கள் தகனிக்கப்பட்டுச் சித்திரவதை யடைந்தார்கள். 1605-ம் வருஷத்திலே சக்கரவர்த்தியானவர் ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பது தேசத்துக்கு விரோதமான குற்றமென்று ஒரு சட்டத்தைப் பிறப்பித்ததுமல்லாமல் கிறிஸ்தவர்களுக்கு மரணதண்டனையையும் விதித்து அதை ஜப்பானைவிட் டோட்டிவிட்டார். அக்காலத்திலே ஜப்பான் முழுமையிலும் ஆயிரம் ரோமைக் குருக்களும் இரண்டு லட்சம் கிறிஸ்தவர்களும் கொல்லப்பட்டார்களாம். கிறிஸ்துமார்க்கத்துக்கு விரோதமாக ஏற்பட்ட கட்டளைகளி லொன்று என்னவெனில்: "சூரியனுள்ள நாள்

வனாயினும் எந்தக் கிறிஸ்தவனும் ஜப்பான் தேசத்திலே செல்லக்கூடாதபடி. எச்சரிக்கையாயிருப்பானாக. ஸ்பானியா தேசத்து ராஜனென்றாலும் சரி, கிறிஸ்தவர்களுடைய தேவனென்றாலும் சரி, வேறெந்த மஹாதேவனாயிருந்தாலும் சரி; இந்தக் கட்டளையை மீறுவார்களேயாகில் அவர்கள் தலை கட்டாயமாக வாங்கப்படும்" என்பதே. ஜப்பான் மற்றத் தேசங்களோடு யாதொரு சம்பந்தமுமின்றி ஜீவித்த இரண்டு நூற்றாண்டுகளிலே அதாவது கி. பி. 1600—1868 வருஷங்களிற்கூட அங்கே அநேக இரகசிய கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். டச்சுக்காரர் வந்து வியாபாரம் பண்ணும்படி இடம்பெற்ற ஒரே துறைமுகமாகிய நாகசகி பட்டணத்திலேயும் அவர்கள் செல்வாக்கரிய புனிதமா அந்தரங்கமாய்க் கிரியை செய்துவந்தது.

ஜப்பான்தேசத்துக் கிறிஸ்துமார்க்க சரித்திரத்தின் இரண்டாங்கட்டம் புரொட்டெஸ்டாண்டு மிஷன்கள் அங்கே பிரவேசித்த 1859-ம் வருஷத்தோடே தொடங்குகிறது. கிறிஸ்துமார்க்கத்தை ஒருவரும் ஏற்றுக்கொள்ளக் கூடாதென்று கண்டிப்பான கட்டளை இன்னும் தெருவுக்குத் தெரு ஒட்டப்பட்டிருந்த இக்காலத்திலே எப்பிஸ்கோபல் சபையைச் சேர்ந்த உவில்லியம்ஸ் கனகரணியாரும் பிரஸ்பிற்றீரிய சபையைச்சேர்ந்த ஹெப்பர்ண் பண்டிதரும் டச்சு சீர்திருத்தச் சபையைச்சேர்ந்த வெர்பெக் பண்டிதரும் துர்ப்பம் நிறைந்த இவ்விடத்திலே சுவிசேஷவேலை செய்யப் புறப்பட்டார்கள்.

1871 — ஆம் புத்தமதம் ராஜாங்கமார்க்கமாயிராதபடி தள்ளுண்டுபோயிற்று. மறுவருஷத்தில் கிறிஸ்துமார்க்கத்துக்கு விரோதமான சட்டங்கள் ரத்துப்பண்ணப்பட்டன. அவ்வருஷத்தில் (1872) ஜப்பான்தேசத்து முதற் திருச்சபை பதினொரு அங்கங்களோடே தொடங்கிற்று.

1873-ம் வருஷத்திலே கிறிஸ்தவர்களின் ஓய்வுநாளை ராஜாங்கத்தாரே தேசமுழுவதிலும் ஆசரிக்கத் தொடங்கினார்கள். அதேவருஷத்தில் கிறிஸ்து சகாப்தம் துரைத்தனத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டது; நாளதுவரையிலும் ஜப்பானி



யர் மாட்டுக்கொட்டகையிற் பிறந்த கிறிஸ்துவின் வருஷத்தையே தங்கள் கடிதங்களிலெல்லாம் எழுதுகிறார்கள்.

வெர்பெக் பண்டிதர் என்ற பெயர்பெற்ற மிஷனெரிதான் ஜப்பானியருடைய வித்தியாமுறையை ஒழுங்குபடுத்தியதில் பிரதானமானவர். மேற்றிசையாருடைய வழக்கவழக்கங்களையும் நாகரிகத்தையும் ஆராய்ச்சி செய்யும்படி ஜப்பானிய ஸ்தானாபதிக் கூட்டத்தார் உலகத்தைச் சுற்றி வரவேண்டுமென்று துரைத்தனத்துக்கு ஆலோசனை சொன்னவரும் இவரே. அப்படிப் புறப்பட்ட முதற்கூட்டத்தாரை நடத்திக்கொண்டு போனவரும் இவரே. அந்த முதலாங் கூட்டத்தாரிற் பாதிக்கு மேலானவர்கள் வெர்பெக் பண்டிதரின் பழைய மாணவர்கள். இதற்குப்பின் ஆறு ஜப்பானியப் பெண்களும் அநேக வாலிபரும் அமெரிக்காவுக்குப் போய்க் கல்வி கற்கும்படி அனுப்பப்பட்டார்கள். இப்படிப் போன பெண்களுக்குள் கிறிஸ்துமார்க்க அனுசாரியான ஒரு அம்மாள் இப்பொழுது யுத்த இலாக்கா மந்திரியும் பெரிய தளகர்த்தருமான ஓயாமா என்பவருடைய மனைவியாயிருக்கிறார்கள். வேறொரு அம்மாள் உரியூ என்னும் இரண்டாம் அட்மிராலுடைய மனைவியாயிருக்கிறார்கள். இவர்களும் கிறிஸ்தவர்கள். இந்த அட்மிரால்தான் ருஷிய போரில் நடந்த கடற்சண்டையில் முதல் வெற்றிபெற்றவர். ஜப்பானிலிருந்து புறப்பட்டுப்போன ஸ்தானாபதிக் கூட்டத்தார் அமெரிக்காவிலுள்ள உவாஷிங்டன் நகர் சேர்ந்து அக்காலத்தில் அமெரிக்க பிரஜாதிபதியாயிருந்த ஜெனரல் கிராண்ட் என்பவரைக் கண்டு பேசினார்கள். அக்காலத்தில் மார்க்குவிஸ் பட்டத்தையும் தற்காலத்தில் இளவரசர் என்னும் பட்டத்தையும் பெற்றிருக்கிற ஈற்றோ என்பவர் அக்காலத்தில் உவாஷிங்டனுக்குப் போனவர்களி லொருவர். இவர்தான் பிற்காலத்தில் ஜப்பான் ராஜ்யத்துச் சட்டதிட்டங்களை உண்டுபண்ணினார். அந்த ராஜ்யத்தின் பிரதம மந்திரியாகவும் ஐந்துமுறை வேலை பார்த்திருக்கிறார். உவாஷிங்டனுக்குப் போன வேறநேகரும் ஜப்பானுக்குத் திரும்பி வந்து தேசத்திற்கேற்ற அநேக சீர்திருத்தங்களைச் செய்தார்கள்.

1869-ம் வருஷத்திலே அமெரிக்கன் போர்டார் அங்கே வேலை தொடங்கினார்கள். ஜப்பான் தேசத்தின் சிறந்த சுதேசாபிமானியாகிய ஜோஸெவ் நீசிமா என்பவரைக்கொண்டு கீர்த்தி பெற்ற டோஷிஷா சர்வகலாசாலையை அங்கே ஸ்தாபித்தார்கள். 3,500 புத்தமத ஆலயங்களும், 8,000 பூசாரிகளும் அடங்கிய பிரதான புத்தமத ஸ்தானமாகிய கியோற்றோ பட்டணத்திலே இக்கலாசாலை ஸ்தாபிக்கப்பட்டது. இப்பாடசாலைக்காக அமெரிக்கன் போர்டார் சுமார் ரூ. 30 லட்சம் செலவழித்து ஏறக்குறைய 10,000 வாலிபரைப் படிப்பித்திருக்கிறார்கள். இவர்கள் ஜப்பானியருக்குள் முதன்மை பெற்று அதன் சரித்திரத்தை மிகவும் மாற்றியிருக்கிறார்கள். சில வருஷங்களுக்குமுன் அச்சர்வகலாசாலையின் தலைவராயிருந்த கற்றயோக்கா என்பவர் மிகவும் சிறந்த கிறிஸ்தவர்; ஜப்பானிய மந்திராலோசனைச் சபைக்கும் அநேக வருஷங்களாகத் தலைவராயிருந்தவர். இப்பொழுது இக்கலாசாலைக்குத் தலைவர் ஸ்ரீ ஹாராடா என்பவர். இவர் சில வருஷங்களுக்குமுன் நமது தேசத்துக்கு வந்திருந்தது அநேகருக்கு ஞாபகமிருக்கலாம்.

1859-௵ முதல் 1872-௵ வரையிலுமுள்ள காலம் மிஷன்வேலையில் மிகவும் கஷ்டநிறைந்த ஆயத்தகாலமாயிருந்தது. கிறிஸ்துமார்க்கத்துக்கு விரோதமான சட்டங்கள் ரத்துச்செய்யப்பட்ட 1872-௵ முதல் 1890-௵ வரையிலுமுள்ள காலமோ திருச்சபை மிகவும் விருத்தியடைந்தகாலம். 1890-௵ முதல் 1904-௵ வரையிலுமுள்ள காலத்திலே தேசமுழுவதிலும் அந்நியமான யாவற்றையும் விரோதிக்கிற சிந்தை யுண்டாயிற்று; பூர்வமதங்களை உயிர்ப்பிக்கும்படியான பிரயத்தனம் நடந்தேறியது. ஆயினும் ருஷியரோடு நடந்த யுத்தத்திற்குப் பின்பு இந்த விரோதம் முற்றிலும் நீங்கிப்போயிற்று; கிறிஸ்துமார்க்கத்தின்பேரில் புதிதான வாஞ்சை யுண்டாயிருக்கிறது. இதன் பிரதான காரணம் மஞ்சூரியா நாட்டிலிருந்த போர்ச்சேவகருக்குள் வாலிபர் கிறிஸ்தவ சங்கத்தார் செய்த வேலையே. ஜப்பானிய போர்ச்சேவகர்களில் மிகுதியானவர்கள் இச்சங்கத்தார் போட்டிருந்த கூடாரத்துக்கு வந்து மிக உபசாரணைகளை



யடைந்து சுவிசேஷ போதனைகளைச் சந்தோஷத்தோடு கேட்டு கிறிஸ்துமார்க்கத்தைப்பற்றி நல்லெண்ணங்கொண்டார்கள்.

ஜப்பானில் கிறிஸ்தவர்களின் தொகை இன்னும் சொற்பந்தான். ஆயினும் அது வெகு சீக்கிரமாகப் பெருகிவருகிறது. இவர்களிற் பெரும்பாலோர் சாமுறாய் என்னும் போர்ச்சேவக வகுப்பைச் சேர்ந்தவர்களாதலால் அவர்கள் செல்வாக்கு அந்நாட்டில் மிகுதி. முன்னே அத்தேசத்தில் அஞ்ஞானக் கோயில்கள் நாலு லட்ச மிருந்தன. இப்பொழுது அவைகள் பாதிக்குங் குறைவுதான்.

ஜப்பானில் சீர்திருத்தம் ஆரம்பித்த நாள்முதற்கொண்டு மிஷனெரிமாரின் செல்வாக்கு அங்கே பலத்ததாகவே யிருக்கிறது. இந்தியாவில் நடக்கும் மிஷன் வேலையைப்போலவே அங்கே நடக்கும் வேலையும் சுவிசேஷ பிரபலியவேலை, கல்வி யபிவிர்த்திவேலை, வைத்தியவேலை, தர்மசகாயவேலை, புத்தகப் பிரசுரவேலை யென்று பிரிக்கப்படலாம்.

வாலிபர் கிறிஸ்தவ சங்கம ஜப்பானிய வாலிப ரனைவரையும் ஒன்றாக்கி அங்கே பலத்தவேலை செய்திருக்கிறது. அத்தேசத்து அதிகாரிகளுங்கூட இச்சங்கத்தின் வேலையை மிகவும் நன்குமதிக்கிறார்கள். "மெய்யான சீர்திருத்தத்தையும் நீதியையும் அபிவிர்த்தி செய்துவருகிற வல்லமைகளை ஒவ்வொன்றாய்க் கவனிக்கையில் வாலிபர் கிறிஸ்தவ சங்கம் அவைகளில் மிகவும் முக்கியமானதென்று காணப்படும். நாலுவகுப்பாரான கிறிஸ்தவர்களுக்குள் பரஸ்பர அநுதாபத்தைப் பிறப்பிப்பதிலும் அவர்களனைவரும் ஏகோபித்துப் பலத்த வேலை செய்யும்படி அவர்களை ஐக்கியப்படுத்துவதிலும் மற்றத் தேசங்களிற்போலவே ஜப்பான்தேசத்திலும் இந்தச் சங்கம் விசேஷித்த அநுகூல மடைந்திருக்கிறது. ஜப்பானிலுள்ள பட்டணங்களிலும் பாடசாலைகளிலும் வாலிபர் கிறிஸ்தவ சங்கங்களுண்டு. பாடசாலைச் சங்கங்கள்தான் அங்கே ஏராளம்; அவைகளே செல்வாக்குள்ளவைகளாயுமிருக்கின்றன. பட்டணச் சங்கங்களுங்கூட நாளுக்குநாள் தொகையிலும் செல்வாக்கிலும் வளர்ந்துவருகின்றன" என்று ஒருவர் எழுதுகிறார்.

ஜப்பான்தேசத்து வியாபாரத்திலும் கிறிஸ்துமார்க்கத்தின் செல்வாக்கு காணப்படத் தொடங்குகிறது. கைத்தொழில், வர்த்தகம் முதலியவற்றில் சீர்திருத்த முன்னேற்றத்துக்குத் தக்கதாக அத்தொழிலாளிகளின் உண்மையும் யோக்கியமும் சீர்திருந்தவேண்டியதா யிருக்கிறது. உத்தரவாதமான வேலைகளுக்குக் கிறிஸ்தவ பாடசாலைகளிற் பயின்ற மாணுக்கரையே பிரதானமாய்த் தேடுகிறார்கள். ஜப்பானியருடைய பத்திரிகைகளிலும் மேலான சன்மார்க்கத்தை நுழைக்கக் கிறிஸ்தவர்கள் பிரயாசப்பட்டுவருகிறார்கள். கிறிஸ்தவர்களல்லாத பத்திரிகாசிரியர்களிற் பெரும்பான்மையோர்களும் கிறிஸ்துமார்க்கத்தைப் புகழ்ந்தே எழுதுகிறார்கள். விசேஷமாக ஜனசங்கத்துக்கும் சன்மார்க்கத்துக்குமடுத்த அதின் சிறந்த போதனைகளையே புகழுகிறார்கள்.

ஜப்பானியர் யாவரும் தேசாபிமானிகளே. ஆயினும் அவர்களிலும் பெயர் பெற்றவர்கள் கிறிஸ்தவர்கள். அவர்களிற் பலர் தலைமை அதிகாரிகளாகவு மிருக்கிறார்கள். அவுஸ் ஆப் காமன்ஸ் என்ற பார்லிமென்ற் சபையிலே எப்பொழுதும் கிறிஸ்தவர்களே பெருந்தொகையாயிருப்பார்கள்.

தர்மசகாய வேலைகளைத்திலும் முன்னுக்கு நிற்கிறவர்களும் கிறிஸ்தவர்களே. ஜப்பானிலே இப்பொழுது ஐம்பது அநாத சாலைகளுண்டு; இவைகளிலே முப்பத்தாறு கிறிஸ்தவர்களாலே தொடங்கப்பட்டு அவர்களாலேயே நடத்தப்பட்டுவருகிறது. இவர்களுடைய அநாதசாலைகளைப் பார்த்து அவைகளின் மாதிரிப்படியே மற்றவைகளை இதர மதஸ்தரும் ஸ்தாபித்து நடத்திவருகிறார்கள். குஷ்டரோகிகள், பைத்தியக்காரர், ஏழைகள் முதலியவர்களுக்கு ஆதரவுசாலைகளும் கிறிஸ்து மார்க்கத்தின் மூலமாக வந்திருக்கிறது, கைதிகள் அன்போடே நடத்தப்படுகிறார்கள். எல்லா மனிதரும் சகோதரர் என்ற கருத்து ஜப்பானில் வளர்ந்தோங்கிவருகிறது. முற்காலத்தில் புறக்கணிக்கப்பட்டிருந்த ஈற்றா என்ற ஜாதியாரையும் கிறிஸ்தவர்கள் சீர்திருத்தி மேன்மைக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். "இந்த மிலேச்சருடைய பாஷைக்கு எழுத்து அமைக்கும் வேலையைக் கிறிஸ்தவர்கள்தான் செய்



தார்கள். ஈற்றா ஜாதியாருடைய ஆத்தும தன்மையைக் கருதி இவர்கள் பாஷையிலே கிறிஸ்துமார்க்கத்தின் ஆழ்ந்த கருத்துகளையும் வேதத்தையும் மொழிபெயர்த்துக் கொடுத்திருக்கிறார்கள். இவர்களுக்குக் கோவில்களையும் ஆஸ்பத்திரிகளையும் வேறு கட்டடங்களையும் கட்டிவைத்திருக்கிறார்கள்" என்று ஒருவர் எழுதுகிறார். கடந்த 2000 வருஷக் காலமாக எவ்வித சீர்திருத்தமு மடையாதபடி புறக்கணிக்கப்பட்டிருந்த மிலேச்சரான ஈற்றா ஜாதியார் இப்பொழுது உயர்த்தப்படுகிறார்கள். மற்ற மனிதருக்குச் சமமானவர்களாக மதிக்கப்பட்டுவருகிறார்கள்.

இப்பொழுது ஜப்பான் முழுவதிலும் 889 மிஷனெரிமாரும் புரொட்டெஸ்டாண்டரான 64,621 கிறிஸ்தவர்களுமுண்டு; இவர்களில் 54,352 பேர் உட்சபையார். ரோமானித்தரின் தொகை 59,437; கிரேக்குச் சபையாரின் தொகை 29,115. இந்தச் சபைகளுக்குள் புரொட்டெஸ்டாண்டு சபைதான் மற்றவைகளிலும் அதிகம் தீவிரமாய்ப் பரவுகிறது. கடந்த வருஷத்திலே ரோமான் சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்களின் தொகை [illegible]; கிரேக்குச் சபையிலே 656. புரொட்டெஸ்டாண்டு ச[illegible] 1,439 குழந்தைகளும் 4,411 புருஷரும், [illegible] பேர் புதிதாய் ஞானஸ்நானம் பெ[illegible]. புரொட்டெஸ்டாண்டு சபைகளின் மொத்தம் [illegible]. இவைகளிலே 11[illegible] பூரண சுயசகாயமுள்ளவைகள்; மற்றவைகளும் சீக்கிரம் அப்படிப்பட்டவைகளாகும். ஜப்பானிய கிறிஸ்தவர்கள் கடந்த வருஷத்திலே பொது தாபரிப்புக்காகவும் சுவிசேஷ பிரபல்ய வேலைகளுக்காகவும் கொடுத்த காணிக்கை ரூ. 270,000. முன் சொன்ன 54,3[illegible] புரொட்டெஸ்டாண்டு உட்சபையாரில் 6,880 பேர் இங்கிலீஷ் [illegible] சபையையும், 9,403 பேர் மெதடிஸ்ட் சபையையும், 12,[illegible] பேர் காங்கிரிகேஷனல் சபையையும், 11,569 பேர் பிரஸ்பிற்றீரிய சபையையும் சேர்ந்தவர்கள். காங்கிரிகேஷனல் சபைகள் இப்பொழுது எல்லாம் சுயாதீன ஆளுகைக்கு வந்துவிட்டன. இவைகளை ஸ்தாபித்து நடத்திவந்த அமெரிக்கன் போர்ட் சங்கத்தார் இன்னும் உதவ

ளுக்கு மூன்று வருஷம் மாத்திரம் பணவுதவி செய்வோமென்று சொல்லி விலகிக்கொண்டார்கள். இப்பொழுது அவைகள் பூரணமான சுயதாபரிப்பாய் நடைபெறுகின்றன; எளிய சபைகளுக்கு வலிய சபைகள் உதவி செய்கின்றன. மற்றச் சபைகளும் இந்த முன்மாதிரியைப் பின்பற்றிச் சுயதாபரிப்புக்குத் தீவிரித்துவருகின்றன.

ஜப்பான் புரொட்டெஸ்டாண்டு கிறிஸ்தவர்களின் தொகை வளர்ந்துவருகிற தீவிரம் மெத்தத் திருப்திகரமானது. 1864-ம் வருஷத்திலே அங்கே ஒரு கிறிஸ்தவன்மாத்திரம் இருந்தான். 1872-ம் வருஷத்திலே 10 பேரிருந்தார்கள். 1882-ம் வருஷத்திலே 4,987 பேரும், 1892-ம் வருஷத்திலே 35,534 பேரும், கடைசியாக 1909-ம் வருஷத்திலே 64,621 கிறிஸ்தவர்களுமாகப் பெருகியிருக்கிறார்கள். இப்பொழுது ஜப்பானிலே 47 மிஷன் சங்கங்கள், 853 மிஷன் ஸ்தானங்களிற் தங்கி வேலைசெய்து வருகிறார்கள்.

இந்தியா, ஜப்பான் தேசங்களிற் காணப்படும் கிறிஸ்துமார்க்க விர்த்தியை ஒத்துப்பார்ப்போம். இந்தியாவின் கடைசியான குடிமதிப்புக் கணக்கைப் பார்த்தால் 1891-ஆம் முதல் 1901-ஆம் வரையிலுமுள்ள 10 வருஷங்களுக்குள்ளே இந்துதேசத்து ஜனத்தொகை நூற்றுக்கு 2½ விதம் வளர்ந்திருக்கிறது. இதில் பாரசீகரைமாத்திரம் பிரித்தெடுத்துப் பார்த்தால் அவர்கள் விர்த்தி நூற்றுக்கு 4 விதமானது. யூதருடைய விர்த்தி நூற்றுக்கு 6 விதம். மகமதியருடைய விர்த்தி நூற்றுக்கு 8 விதம். இந்துக்கள் நூற்றுக்கு 1 விதம் குறைந்திருக்கிறார்கள். புரொட்டெஸ்டாண்டு சுதேசக் கிறிஸ்தவர்களின் தொகையோ நூற்றுக்கு 50 விதம் பெருகியிருக்கிறது. ஜப்பான்தேசத்துக் கிறிஸ்தவர்களின் பெருக்கம் இதிலும் மிக்க அதிகம்; ஏனெனில் அங்கே ஜாதி வித்தியாசமில்லை.

இப்பொழுது ஜப்பான் கிறிஸ்தவர்களுடைய குறைகுணங்களைச் சற்றுக் கவனிப்போம். (1) **சுயாதீனப்பிரியம்,** சுயமாய் யாவற்றையும் நடத்தவும் உத்தரவாதத்தை ஏற்றுக்கொள்ளவும் சுயஆளுகையைத் தேடவும் பிரியப்படுகிறார்



கள். அநாவசியமாய் அன்னியரின் ஒத்தாசையை ஒரு நிமிஷமாயினும் பெறச் சம்மதியார்கள். பிறதேசத்தாரிடத்திற் கற்றுக்கொள்ளக் கூடியவைகளைமாத்திரம் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளுவார்கள். (2) **சுயதாபரிப்பு,** தங்கள் சுயாதீனத்துக்கு இது அவசியமென்று உணர்ந்து தங்களைத் தாங்களே ஆதரித்துக்கொள்ளுந் தீர்மானமுடையவர்களாயிருக்கிறார்கள். (3) **மனோபலம்,** தங்கள் காரியங்களைத் தாங்களே யோசித்து முடித்துக்கொள்ளத்தக்க தைரியமுள்ளவர்களாயிருக்கிறார்கள். (4) **வேதசாஸ்திர உபதேசங்களில் மனவிசாலம்,** ஒவ்வொரு புதிய கொள்கையையும் கவனிக்க மனமுள்ளவர்களும் யுக்தி நியாயத்தை மேன்மைப்படுத்தும் சிந்தையுமுள்ளவர்கள். அவர்களுடைய உபதேசக் கோட்பாடுகள் நிலையற்றவைகளாயிருப்பது ஒரு குறைதான். ஆயினும் அவர்களுடைய ஆவிக்குரிய அநுபவம் வளர வளர இக்குறைவு நீங்கிவருகிறது. (5) **மாமூலை முக்கியப்படுத்துங் குணம்,** தங்கள் ஒழுங்குகளை இலகுவில் மாற்றமாட்டார்கள். சுவிசேஷ பிரபல்யம் செய்யவேண்டிய தங்கள் கடமையைப் போதுமானபடி உணருகிறதுமில்லை. உள்ளபடி சொன்னால் ஜப்பானிய கிறிஸ்தவர்கள் சுயதாபரிப்பிலும், சுயஆளுகையிலுமே தங்கள் முழுமனதையும் செலுத்தித் தங்கள் தேசத்தைத் தாங்களே குணப்படுத்தவேண்டிய உத்தரவாதத்தை காணாது வரையிலும் சரியானபடி நினைக்காதவர்களாகத்தான் காணப்படுகிறார்கள். (6) **ஜனசங்க விஷயத்தில் விருத்தி,** இதிலே மாத்திரமல்ல; கல்வியிலும் மிகவும் முன்னேறியிருக்கிறார்கள். இந்துதேசக் கிறிஸ்தவர்களோடே ஒத்துப்பார்த்தால் செல்வத்திலும் சிறந்தவர்கள்தான். ஆகிலும் இத்தேசத்திலே தாழ்ந்த வகுப்பாருக்குள்ளும் மத்தியமான வகுப்பாருக்குள்ளும் கிறிஸ்துமார்க்கம் அதிகம் செல்லாதது ஒரு குறையே. (7) **ஐக்கியம்,** மேற்குத் தேசங்களில் வெகு நாளுக்குமுன்னே உண்டான தர்க்கங்களையும் சபைப் பேதங்களையும் தள்ளிப் பிரயோஜனமான முறை யென்னவென்பதைமாத்திரம் கவனிக்கிறார்கள். நாலுவகுப்பான சபைகள் எல்லாம் ஒன்றாய்ச் சேரவேண்டுமென்பதை வற்

புறத்தி அப்படியே கௌகடையில் செய்துவருகிறார்கள். ஜப்பான் சபை முழுவதும் ஒன்றாயிருக்க வேண்டுமென்பது அவர்கள் முடிவான நோக்கம். இந்தவிஷயத்தில் அவர்கள் இந்துதேசச் சபைகளைவிட அதிகம் முன்னேறி வந்திருக்கிறார்கள்.

ஜப்பானில் கிறிஸ்துமார்க்க பிரபல்யத்திற்குத் தற்காலத்திலே வழி திறந்திருக்கிறவண்ணமாய் வேறொரு தேசத்திலும் திறக்கப்படவில்லை. பழைய மார்க்கங்களின் பற்று முற்றிலும் விட்டுப்போயும் விடுகிற சமயமாயுமிருக்கிறது. கிறிஸ்துமார்க்க மொன்றுதான் ஜப்பானியருக்குத் திருப்தி செய்யக்கூடிய மார்க்கம். ஜப்பானிலுள்ள புத்தமதப் பத்திரிகை யொன்றில் அடியில் வரும் கணக்குக் காணப்படும். ஜப்பானிலுள்ள மூன்று உயர்தரப் பாடசாலைகளிலுமுள்ள மாணாக்கரின் தொகை 400; இவர்களை மதங்களின்படி பிரித்துப்பார்த்தால்; கன்பூஷியஸ்மதஸ்தர் 1; ஷின்ற்றோமதஸ்தர் 1; புத்தமதஸ்தர் 15; கிறிஸ்தவர்கள் 4; நிரீச்சுரவாதிகள் 10; அஞ்ஞாத வாதிகள் 28. கிறிஸ்தவர்களின் தொகை இவ்வளவு குறைவாக இருந்தாலும் அவர்களே ஜப்பான் முழுவதிலும் பலத்த செல்வாக்குடையவர்கள். ஜப்பான் ராஜ்யத்தின் மொத்த ஜனத்தொகையில் அவர்கள் இருநூற்றைம்பதில் ஒரு பாகம் மாத்திரமாயிலும் அந்நாடு முழுமையிலும் நடக்கிற பரோபகாரவேலையில் கால்வாசிக்குச் செலவு கொடுக்கிறவர்கள் அவர்களே. ராஜாங்க ஆலோசனைச் சபைகளெல்லாம் தங்களுக்குரிய பங்குவீதத்திற்கு நாலத்தனையாய் அவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறார்கள். அத்தேசத்திலே விசேஷித்த பத்திரிகாசிரியரும் கடற்சேனை தரைச்சேனைகளின் தளகர்த்தரும் அதிகாரிகளும் தலைமை உத்தியோகஸ்தரும் கிரந்த கர்த்தாக்களுமாயிருக்கிறவர்களும் அவர்களே. ஜப்பான் முழுவதிலும் கிறிஸ்தவர்களின் தொகை மிகுந்திராவிட்டாலும் அவர்கள் செல்வாக்கு மிகப் பெரிதாகவேயிருக்கிறது. அத்தேசத்தில் கிறிஸ்துமார்க்கம் அடைந்திருக்கும் மேன்மையையும் வல்லமையையும் காட்டும்படி கிறிஸ்தவர்களும் மற்றவர்களுமான



சில ஜப்பானியமஹான்களின் வார்த்தைகளை அடியில் வெளியிடுகிறோம்.

ஒருகாலத்தில் போர்ஸ்ற் மாஸ்ற்றர் ஜெனராலாயிருந்த பாரன் மிற்க மெஜிமா என்ற பிரபு சொல்லுகிறதாவது:—

“நாம் ஒரு ஜாதியாகவும் தனித்தாட்களாகவும் க்ஷேமமடைய வேண்டுமானால் மார்க்கமே அதற்கு அஸ்திபாரமாயிருக்கவேண்டுமென்பது நிச்சயம். நமது தரைச்சேனைகளும் கடற்சேனைகளும் எவ்வளவு பலத்தவைகளாயிருந்தாலும் சரிதான், நீதியே நமது ஜாதிக்கு அஸ்திபாரமாயிராவிட்டால் நாம் அதிக மேன்மையடையப் போகிறதில்லை. ஆகையால் நாம் சிறப்படைவதற்கு மார்க்கஜீவியமே மூலமென்று தைரியமாய்ச் சொல்லுவேன். அப்படி நாம் அநுசரிக்கத்தக்க மார்க்கங்களிற் சிறந்தது எதுவென்று பார்ப்போமானால் நான் ஆராய்ந்தமட்டிக்கு தனித்தாளுக்கென்றாலும் சரி, ஒரு ஜாதிக்கென்றாலும் சரி கிறிஸ்துமார்க்கமே வாக்குத்தத்தமும் வல்லமையும் நிறைந்த மார்க்கமாயிருக்கிறது என்று நிச்சயித்திருக்கிறேன்” என்பதேயாம்.

கொஞ்சக்காலத்துக்குமுன் தேசத்தின் பிரதான மந்திரியாயிருந்த கௌண்ட் ஒக்குமா பிரபு சொன்னதைக் கவனிப்போம்:— “1854-ல் நாம் அமெரிக்கரோடு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டபின்பு, அவர்கள் நமது தேசத்துக்கு மிஷனெரிமாரை அனுப்பினார்கள். அக்காலத்தில் கிறிஸ்துமார்க்கத்தைப் பிரசங்கிப்பது தேசசட்டத்துக்கு விரோதமான குற்றமாயிருந்தது; ஆகலால் அவர்கள் ஞானத்தைக் கைபாடிக் கல்வி யபிவிர்த்தி வேலையை நடத்தி வந்தார்கள். அவர்களிடத்தில் அநேகர் இங்கிலிஷ் பாஷை கற்று உயர்ந்த பதவிகளுக்கு வந்தார்கள். நானும் அவர்களிடத்தில் படித்தவன்தான். ற்றோக்கியோ பட்டணத்தில் நாளதுவரையிலுமிருக்கிற துரைத்தனச் சர்வகலாசாலைக்கு அஸ்திபாரம் போடப்பட்ட 1869-ம் வருஷத்தில் துரைத்தனத்தின் கல்வி விர்த்தி இலாக்கா ஆலோசனைக்காரராக காலஞ்சென்ற வெர்பெக் பண்டிதர் நியமகம்பெற்றார். அவர் உத்தம புருஷன்; கல்விமான்; அன்பு நிறைந்தவர். இவர்

சொன்ன ஆலோசனையின்படிதான் 1871-ம் வருஷத்திலே அமெரிக்கா, ஐரோப்பா தேசங்களின் கல்விமுறைகளைப் போய்ப் பார்த்துவரும்படி ஒரு கூட்டத்தார் அனுப்பப் பட்டார்கள்."

பான இலாக்கா மந்திரியாயிருந்த வைக்கௌன்ற் வாட்டானபி என்பவர் சொன்னது:— "மனித ஜீவியத்திலே ஒரு மார்க்கத்திற்கிருக்கிற செல்வாக்கு எவ்வளவு பலத்ததென்று நானறிவேன். மார்க்கபக்தி எவனிடத்தில் இல்லையோ அவன் ஜீவியம் மிகவும் பரிதபிக்கப்படத்தக்கதுதான். மதங்களையெல்லாம் ஒன்றாக வைத்துக் கவனித்தால் அவைகளுக்குள் கிறிஸ்துமார்க்கம், அதாவது புரொட்டெஸ்டாண்டு மார்க்கமே ராஜாங்க விஷயத்தில் எவ்வளவும் தீமை செய்யாததும் ஜனசங்க விஷயத்தில் மிகுந்த நன்மை செய்யக்கூடியதுமான மார்க்கம். புரொட்டெஸ்டாண்டு கிறிஸ்துமார்க்கமே மதங்களுக்குள் மேலானதென்று நான் நிச்சயித்திருக்கிறேன். இந்த நிச்சயத்தைக்குறித்துச் சாட்சி சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயுமிருக்கிறேன்" என்பதே.

நித்ரோபி என்னும் பண்டிதர், "ஜப்பான் தேசத்தின் உயிர் நிலையைத்தரும் புஷிடோமதம்" என்று பெயர் கொண்ட ஒரு நூலை எழுதினார். கியோட்டோ பட்டணத்துத் துரைத்தன சர்வகலாசாலையில் அரசுமுறை சாஸ்திரப் போதகாசிரியராயுமிருக்கிறார். "இதுவரையிலும் நமது ராஜாங்கம் ஒரு மனித எலும்புக்கூட்டுக் கொப்பாய்ச் சட்டங்களால் மாத்திரம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. சன்மார்க்கமாகிய சதை அதை மூடி அலங்கரிக்கவில்லை. இந்த அலங்காரம் கிறிஸ்துமார்க்கத்தின் மூலமாகவே நடக்கு வாக்கூடும். இதுவரையிலும் நாம் ராஜாங்கமாக முன்னேறி வந்ததேயொழிய ஜனசங்கமாக முன்னேறவில்லை. இந்த விஷயத்திலும் நாம் தேறவேண்டிய காலம் வந்துவிட்டது. இந்தத் தேர்ச்சி எப்படி வரும்? தலைவர்களும் அதிகாரிகளும் மாணவர்களின் சொந்தக் குணசீலத்திலேதான். குணசீலத்தை விர்த்திபண்ணத்தக்கது கிறிஸ்துமார்க்கமேயன்றி வேறொன்றுமில்லை" என்று அவர் சொல்லுகிறார்.



ஆனரபில் டாயிசோ மியோஷி என்பவர் ஜப்பான் தேசத்துப் பிரதான நியாயாதிபதியாயிருந்தார். அவர் சொன்னது "புருஷியாதேசத்தின் வாழ்வுக்குக் கிறிஸ்து மார்க்கமே காரணம். கிறிஸ்தவ தேசங்களில் ராஜாக்களுக்கும் பிரஜைகளுக்கும் இருக்கிற ஐக்கிய சம்பந்தத்தையும் நமது தேசத்திலே இருக்கிற சம்பந்தத்தையும் ஒத்துப்பார்த்தால் நாம் மிகவும் வெட்கப்படவேண்டிய நிலைமையிலேயிருப்போம். கிறிஸ்துமார்க்கம் ராஜவிசுவாசத்தைக் கெடுக்கிறதென்று சொல்வது பெரும் பிசகு என்று நான் கண்டேன். நான் மேற்குத் தேசங்களைச் சுற்றிப் பார்க்குமுன்னே மார்க்கத்தைப்பற்றி மிகவும் பிசகாய் நினைத்தேன். அது பேதைகளுக்கும் பெண்களுக்கும்மாத்திரம் ஏற்ற வற்பாடு என்று எண்ணினேன். ஆனால் ஐரோப்பாதேசத்து நடபடிகளை நன்றாய்க் கவனித்தபிறகுதான் என் எண்ணம் முற்றிலும் அபத்தமென்று கண்டேன்" என்பதே.

கென்கிச்சி காட்டயோக்கா M. P. என்பவர் அவுஸ் ஆப் காமன்ஸ் என்ற மந்திராலோசனைச் சபைக்கு நாலு வருஷகாலம் பிரஸிடெண்டாக இருந்தவர்; டோஷிஷா பாடசாலையின் தலைவராயிருந்தவர்; வாலிப ஐக்கிய சங்கத்துக்கும் பிரஸிடெண்டாயிருந்தவர். அவர் மரித்த 1903-ம் வருஷத்திலே அவர் சொன்னதாவது: "கிறிஸ்தவனாக தேவன் எனக்கு ஒரு விசேஷித்த வேலையைக் கொடுத்திருக்கிறாரென்று உணருகிறேன். அப்படியே நமது தேசத்துக்கும் ஒரு விசேஷித்த வேலையை வைத்திருக்கிறாரென்று நம்புகிறேன். அவ்வேலையென்னவெனில்: கிறிஸ்துமார்க்க போதனையின் சாரத்தை ஆராய்ந்து கண்டுபிடிப்பதும் அதற்கிசைவாக நமது தேசத்தாரைச் சீர்திருத்துவதும் அதற்குப்பின்பு கீழ்த்தேசங்களனைத்தையும் இந்த மார்க்கத்தின் ஒளியினிடம் நடத்துவதுமேயாம்" என்பதே.

ஆனரபில் S. இபாரோ M. P. என்பவர் பார்லிமென்ற் சங்கத்தின் கமிற்றிக்குத் தலைவர். அவுஸ் ஆப் காமன்ஸ் சங்கத்துக்குத் தலைவராயிருக்கும்படி பெயரெழுதிக் கொடுக்கப்பட்டவர்களிலொருவர். அவரும் இதைக்குறித்துப் பேசும்

போது: "நமது ராஜாங்க முறைமையைச் சீர்திருத்திப் புதுப்பித்தவர்களில் மிகுதியானவர்கள் பிறதேச மிஷனெரிமாரின் பாடசாலைகளிற் பயின்றவர்கள். ஜப்பான்தேசத்துக்கு இப்பொழுது வேண்டிய முக்கியமான காரியம் ஒழுங்கான வளர்ச்சிதான் என்கிறார்கள். அப்படிப்பட்ட வளர்ச்சி வரவேண்டுமானால் ஒருவர்மேலொருவருக்கு நம்பிக்கை உண்டாகவேண்டும். அந்த நம்பிக்கை கிறிஸ்துமார்க்கத்திலிருந்துண்டாகும் சன்மார்க்கப் போதனையினாலும் ஆவிக்குரிய போதனையினாலுமே உண்டாகும். மேற்குத்தேசங்களில் காணப்படும் சீர்திருத்தம் கூடியமட்டும் ஒழுங்குள்ளது. எல்லா விரல்களும் சரியாக அமைந்திருக்கிற ஒரு கையைப்போலிருக்கிறது. அவர்கள் கைத்தொழில்களிலேமாத்திரமல்ல கல்வியிலும் தேறினவர்களாயிருக்கிறார்கள். வியாபாரத்திலேமாத்திரமல்ல, மார்க்க வித்யாசாலைகளிலும் சிறந்தவர்களாயிருக்கிறார்கள். ஆனால் ஜப்பானுடைய காரியங்கள் அதற்கு முற்றிலும் விரோதம். அதன் கைவிரல்கள் ஒன்றுக்கொன்று சரியாய் அமையவில்லை. அதற்கு நடுவிரல் தேசபக்திதான். இந்த விரல் மட்டுக்குமிஞ்சி நீண்டுபோயிருக்கிறது. மற்ற விரல்களோ சூம்பிப்போயிருக்கின்றன. விசேஷமாகச் சன்மார்க்கப் போதகமாகிய விரல் இந்தக் கடை, கிறிஸ்துமார்க்கக் கல்வியினால் வருகிற கிறிஸ்தவ குணசீலமே தற்காலத்தில் நமது பிரதான தேவை" என்று சொல்லுகிறார்.

R. செராற்ரு என்பவர் கடற்படைக்கு இரண்டாம் அட்மிரலாகவும் டோக்கியோ பட்டணத்திலுள்ள Y. M. C. A. சங்கத்துக்குத் தலைவராகவும் இருந்தவர். இவர் தமது மரணகாலத்திலே சொன்னதாவது: "மலைப்பிரசங்கத்தைப் பூரணமாய் வியாக்கியானம்பண்ணுவது கடினமான விஷயந்தானென்றாலும் அதிலடங்கிய சன்மார்க்கப் போதனையை நான் வாசித்தபோது எனக்கு மிகுந்த உணர்வு உண்டாயிற்று; மனஸ்தாபக் கண்ணீர் சொரிந்தேன். "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்" என்ற கட்டளையைக் குறித்துத்தான் நான் விசேஷமாய் அதிசயப்பட்டேன். இந்தக் கட்டளையின் கருத்தைப் பூரணமாய் விளங்கிக்கொள்ள நம்மால் ஏலாவிட்டாலும் உலகத்திலுள்ள நீதிநெறி யனைத்துக்



கும் கொடுமுடி இதுதானென்று ஒத்துக்கொள்ளவேண்டியதாகும். அப்படி ஒத்துக்கொள்வோமானால் நாகரிகமுள்ள தேசத்தாரின் மார்க்கமாகிய கிறிஸ்துமதத்தை நாம் மதிக்கவும் ஏற்றுக்கொள்ளவும் கூடியதாகும்" என்கிறார்.

R. மாசுஜிமா என்பவர் லண்டன் பட்டணத்திலுள்ள பெரிய கலாசாலையிலே பாரிஸ்டர் பட்டம் பெற்று இப்பொழுது யோக்ஹாமா பட்டணத்தில் வக்கீல் வேலை பார்க்கிறார். அவர் சொன்னது: "இனி நடக்க வேண்டியவைகளைப்பற்றி யோசிக்கையில் ஜப்பானியராகிய நாமும் நமது ஏற்பாடுகளும் ஆரோக்கியமானவகையாய் விருத்தியடைந்து வரும்படிக்கு கிறிஸ்துமார்க்க செல்வாக்கு நமக்கு அவசியமென்று நான் பார்க்கிறேன். நமது தனி ஜீவியத்திலும் ஜனசங்க ஜீவியத்திலும் அந்தச் செல்வாக்கு மிகவும் இன்றியமையாததே. ஏனெனில் கிறிஸ்தவ ஜீவியம் குடும்ப ஒழுக்கத்தையும் ஜனசங்க ஒழுக்கத்தையும் சுத்தம் பண்ணுமென்பது சத்தியம். ஆவிக்குரிய விஷயமாய்ப் பார்த்தாலும் ஜப்பானியருடைய ஆவிக்குரிய ஜீவியத்தை மேன்மைப்படுத்தத்தக்கது கிறிஸ்துசபைதான்" என்கிறார்.

ஸ்ரீ சாவாயனாகி மாஸ்ரோரோ என்ற கீர்த்திபெற்ற ஒருவர் உண்டு. இவர் புத்தமதஸ்தர். கல்வி இலாக்காவுக்கு இவர் தலைவர். விசேஷித்தான புத்தமதப் பத்திரிகையொன்றில் அவர் எழுதுகிறதாவது: "நம்முடைய மார்க்கமா? அதைப்பற்றி நினைப்பதே வெட்கமும் துக்கமுமாயிருக்கிறது. தற்காலத்து புத்தமதத்தைச் சரியாய் அறிந்தவனெவனும் அதன் நிர்ப்பந்த நிலைமைக்காகக் கண்ணீர் சிந்த வேண்டியவனாயிருப்பான். அதைச் சீர்திருத்துவதும் கூடாதவிஷயமே. இந்தக்காலத்திலேதான் நமக்குச் சரியான மார்க்கம் வேண்டியதும் அவசியமாயிருக்கிறது. தொழில் விஷயங்களிலும் துரைத்தன விஷயங்களிலும் நமக்கு மேலான போதனை செய்யும்படி நல்லமார்க்கம் நமக்கு அவசியம். புத்தமார்க்கம் நம்மை உயர்த்தக்கூடாதென்றால் கிறிஸ்துமார்க்கம் ஒருவேளை அப்படிச் செய்யும். நமது ஜாதியார் சரியான மார்க்கமற்றவர்களாய்ப் போவதைவிட

கிறிஸ்துமதத்தையாவது நாம் அனுசரித்து மேன்மையான ஜீவியத்துக்கு வந்து சேரவேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன்."

* ஈயம் மாயொடா என்ற ஒரு கீர்த்திபெற்ற புத்தமதக் குரு சென்ற வருஷம் நாக்கட்ச பட்டணத்திலே பின்வருமாறு பிரசங்கித்தார்: "இன்னம் இருபது வருஷங்களுக்குள் புத்தமதம் இல்லாமற்போகும். தற்காலத்திலுங் கூட 40 வயதுக்கு மேற்பட்ட கிழவர்கள் அதை நம்புகிறார்களேயொழிய வாலிபருக்கு அதின்பேரில் யாதொரு பற்றுமில்லை. நமது துரைத்தனப் பாடசாலை யொன்றின் தலைவரிடம் நான் விசாரித்தபோது அவர்: என் பாடசாலையிலே 'புத்தமதஸ்தர் மூன்று நாலு பேர்தான்; கிறிஸ்தவர்களோ பத்து அல்லது அதிகமானவர்களிருக்கிறார்கள்' என்றார். இதுதான் ஜப்பான் முழுவதிலுமுள்ள படிப்பாளிகள் இம்மார்க்கங்களைக் கொண்டாடுகிற அளவுக்கு நல்ல திருஷ்டாந்தம்."

# VII

## ஒரு ஜப்பானிய தேசாபிமானி.

ஜப்பானிய தேசாபிமானம் இன்னதென அறியப்புகில், அத்தேசத்து யோசேப்பு நீசிமா மற்றெவரைப்பார்க்கிலும் ஒருவேளை அதிகமாய்த் தன் தேசத்தின் வாழ்வுக்குக் காரணமாயிருந்தவராதலினால் அவரது ஜீவியத்தைப் படிப்பது உசிதமே. அவர் சாமுராய் என்னும் வம்சத்தில் டோக்கியோவில் 1843-ம் வருஷத்திற் பிறந்தனர். அவரது தகப்பனார் தன் மாகாணத்தில் சிற்றரசனுடைய குமாஸ்தாவாகவும், உக்கிராணக்காரனாகவும் வேலைசெய்துவந்தார். நீசிமா, இளம்பிராயத்திலேயே பக்தியுள்ள சிறுவனாயிருந்தமையால், காலைதோறும் விக்கிரகத்தைப் பூசித்து, பக்கத்திலுள்ள கோயிலுக்கு மூன்று மைல் நடந்துபோய் வருவது வழக்கம். அவர் பத்துவயதாயிருக்கும்போது 1853-ம் வருஷத்தில் பெறி தளபதி ஜப்பானுக்கு வந்தது அவரது இளமனதை அசைத்தது. மேற்கத்திய நாகரிகத்தைக் காணவே அவருக்குள் அறிவின்பேரில் அடங்காத தாகம் எழும்பிவிட்டது. ஆனதுபற்றி இராப்பகலாய்ப் படிக்கத் துவங்கி, அதிகமாய்க் கோழி கூவியபின்தான் தூங்கப்போவார். பதினைந்தாவது வயதில் அவர் தன் சிற்றரசனிடத்தில் குமாஸ்தாவேலை பார்க்கும்போது சீன டச்சு பாஷைகளைக் கற்று வந்தார். அப்பொழுது ஒரு சிநேகிதரிடமிருந்து ஐக்கியமாகாணத்துப் பாடப்புஸ்தகமொன்று அவருக்குக் கிடைத்தது. அப்பொழுது தனக்கு இங்கிலீஷ் பாஷையிலிருந்த சொற்ப அறிவைக்கொண்டு பின்வருமாறு தனது குறிப்புப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார். "என்னுடைய மூளை தலையைவிட்டு உருகி வடியுமெனப் பயப்படத்தக்கதாக அவ்வளவு தடவை அதை வாசித்தேன்; ஏனென்றால் அதில் எனக்குச் சொல்லமுடியாத ஆவலுண்டானது. அமெரிக்காவின் ஜனங்களே பிரஜாதிபதியைத் தெரிந்துகொள்ளுகிறார்கள். இலவச

主の祈禱　馬太傳第六章九節より十三節にいたる

天にまします我らの父よねがはくは御名をあがめさせたまへ御國をきたらせたまへ聖旨の天になるごとく地にもなさせたまへ我ら乃なくてかなはぬ食を今日もあたへたまへ我らに罪をおかせるもののゆるすごとく我らのつみをもゆるしたまへ惡にさそはせずなほあしきより救いだしたまへ國と權能と榮光は爾のかぎりなく有たまふものなればなり　アーメン

THE LORD'S PRAYER, IN JAPANESE.

ஜப்பானியில் வழங்கும் கர்த்தருடைய ஜெபம்.



மான பள்ளிக்கூடங்கள், ஏழைகளைத் தாபரிக்க வீடுகள் கட்டுகிறார்கள், யந்திரங்களால் வேலை நடப்பிக்கிறார்கள், இன்னும் பலவித வேலைகள் செய்கிறார்கள்; சகல தேசத்திலும் சர்க்கார் ஐக்கிய மாகாணத்தின் பிரஜாதிபதியைப் போல இருக்கவேண்டுமென்று நினைத்தேன். ஓ! ஜப்பான் அதிபதிகளே, நீங்கள் ஏன் எங்களை நாயைப்போலும் பன்றியைப்போலும் வருத்துகிறீர்கள்? என்று எனக்குள்ளே சொல்லிக்கொண்டேன். அந்நேரமுதல் நான் அமெரிக்க அறிவை அடைய விரும்பினேன்; ஆனால் ஐயோ! அதை எனக்குப் படிப்பிக்க உபாத்தியாயர் கிடைப்பது அரிதாயிருந்தது."

அவரது சிற்றரசன் அவரைப் பல பாஷைகளைப் படியாதபடி தடுக்க அநேகந்தரம் தண்டித்தார். பலவித எண்ணங்களோடு இருதயத்தில் சஞ்சலமும் சரீரத்தில் வருத்தமும் அடைவதினால் அடிக்கடி தளர்ச்சியுற்றிருப்பினும் தான் அந்நிய பாஷைகளைக் கற்கவேண்டுமென்று கொண்ட நோக்கத்தை விட்டு விலகவில்லை. இந்தச் சமயத்தில் அவர் பின்வருமாறு எழுதியிருக்கிறார். "ஒருநாள் என் சிநேகிதனைப் பார்க்கப் போனேன். அவருடைய புஸ்தகசாலையில் ஒரு வேத புஸ்தகத்தைக் கண்டுபிடித்தேன். அதை ஒரு அமெரிக்க குரு சீனப்பாஷையில் மொழிபெயர்த்திருந்தார். நான் அதைச் சிநேகிதனிடமிருந்து கேட்டு வாங்கி இராவில் வாசித்தேன். வேதத்தை வாசித்தால் எனது அறிவின் தேசத்துச் சட்டம் என் முழுக் குடும்பத்தையும் சிலுவையில் போடுவிக்குமே என்று பயப்பட்டேன். நான் புஸ்தகத்தைப் போட்டுவிட்டுச் சுற்றிப்பார்த்து என்னை உண்டாக்கினவர் யார்? என் பெற்றோரா? இல்லை, என் தேவனே என்று சொன்னேன். அப்படியானால் நான் கர்த்தருக்குத் தோத்திரம் செலுத்தவேண்டும். நான் அவரை நம்பவேண்டும். நான் அவருக்கு உண்மையுள்ளவனாயிருக்கவேண்டும்." அவர் தன் நேசத்தையும் கீழ்ப்படிதலையும் பரம எஜமானன் விரும்புகிறார் என்பதை உடனே அறிந்து அவனைத் தேட ஆரம்பித்தார். இன்னும் அறிவை அடையவேண்டுமெனக் கருதிச் சமீபத்திலிருந்த ஹாக்கொடாதி என்னும் துறைமுகத்திற்குப் போகத் தீர்மானம்பண்

ணிப் பணஞ் செலவழிந்தபின் உணவு உடைக்கு என்ன செய்வேனென வருத்தப்படாமல் தேவனது பாதுகாப்பில் மாத்திரம் தன்னை ஒப்புவித்துக்கொண்டு கண்ணீரோடு தன் குடும்பத்தை விட்டுப் பிரிந்துபோனார்.

அக்கால சட்டத்தின்படி தேசத்தை விட்டுப் போனால் அல்லது அதற்குத் திரும்பி வந்தால் மரண தண்டனைக்கு உட்படவேண்டும் என்றாலும், அவர் மற்றத் தேசங்களில் நடப்பதை அறிந்து தன் சொந்தத்தேசத்தை முன்னுக்குக் கொண்டுவரும்படி திரும்பி வரவேண்டுமென்று ஆசித்தார். ஆனால் அவர் சொன்னபடியே சொன்னால், "நான் இருளுக்குள் வெளிச்சமதோன்றச் செய்யக் கருதித் தேசத்தை விட்டுப் போக ஒரு கப்பலுக்காகக் காத்திருந்தேன்" என்பதே. 1864-ம் வருஷத்தில் 21-ம் வயதில் ஒருநாள் நடுச்சாமத்தில் இந்த வாலிப தேசாபிமானி ஒரு வேலைக்காரன்போல் வேடம்பூண்டு தோளின்மேல் ஒரு சுமையோடு இருட்டில் ஒருவருக்குந் தென்படாமல் பாய்ந்து சென்று உடனே புறப்படவிருந்த அமெரிக்கா கப்பலொன்றில் ஏறினார். தனது உயர்ந்த பிறப்பைப்பற்றிக் கவனியாமல் தன் பிரயாணத்துச் செலவுக்காகக் கப்பலில் வேலை செய்தார். ஹாங்காங் பட்டணத்தில் தனது நேர்த்தியான பட்டாக்கத்தியை விற்றுச் சீனபாஷையில் ஒரு புதிய ஏற்பாட்டை வாங்கினார்.

பாஸ்டன் நகரம் சென்றவுடன் நீசிமாவுக்கிருந்த வருத்தம் இவ்வளவு அவ்வளவு அல்ல. ஏனென்றால் அவரை ஏற்றுக்கொள்ளக்கூடிய சிநேகிதர் அங்கொருவருமில்லை. ஆனால் அக்கப்பலின் தலைவர் கனம் அல்பேயு ஹார்டி என்பவர் அந்த வாலிபனை அன்பாய் விசாரித்துத் தாம் உயர்தரக் கல்வி கற்க முடியாமற்போனபோதிலும் இவருடைய படிப்பின் செலவிற்கு உத்தரவாதியானார். நீசிமா முதலாவது ஆண்டோவர் நகரிலுள்ள பிலிப்ப கலாசாலைக்குச் சென்றார். இங்குதான் அவர் முதல்தடவையாகத் தம் பாவங்களைப்பற்றி உணர்ந்து யாவருமறியக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு சபையில் ஒரு அங்கமானார். அம்ஹெர்ஸ்ட்



நகரில் அவர் தனது உயர்தரக் கல்வியை 1870-ம் வருஷத்தில் முடித்தபிற்பாடு ஆண்டோவர் வேத வித்தியாசாலையில் வந்து சேர்ந்தார். 1872-ம் வருஷத்தில் முக்கிய ஸ்தானாபதிகளாக கனம்: ஈவாக்குரா, ஐற்றோ என்பவர்கள் அமெரிக்க கல்வியைப்பற்றி விசாரணைபண்ண உவாஷிங்டன் வந்தார்கள். அவர்களுக்கு மொழிபெயர்க்க நீசிமா அழைத்தனுப்பப்பட்டார். பின்பு அவர்களும் அமெரிக்க கல்வியை ஆராய விரும்பியதால் இவரும் அவர்களோடு சேர்ந்துகொண்டார். பிற்பாடு ஐரோப்பாவிலுள்ள தலைநகரி ஒவ்வொன்றிற்கும் அவர்களோடு போனார். எப்பொழுதும் ஜப்பானிய ஸ்தானாபதிகளுக்குக் கிறிஸ்துவைப்பற்றி தைரியமாய்ச் சாட்சி சொல்லி, ஓய்வுநாளில் பிரயாணம்செய்ய மறுத்தார். அவரது நேர்மையைக் கண்ட இவர்கள் அவர் சாகும்வரையிலும் அவரில் நம்பிக்கை வைத்துவந்தார்கள். அவர் ஜப்பானுக்குத் திரும்பிப் போனபோது, இவர்கள் மேலான சர்க்கார் உத்தியோகத்திலிருந்தார்கள். அவரில் இவர்கள் வைத்த நம்பிக்கை டோஷிஷா என்ற உயர்தரமான கல்விச்சாலை ஸ்தாபிக்க ஏதுவாயிருந்தது. ஜப்பானுக்கேற்ற கல்வி முறையைப்பற்றி ஒரு பிரபந்தம் தயார் செய்யும்படி இந்த ஸ்தானாபதிகள் நீசிமாவைக் கேட்டுக்கொண்டார்கள். அப்படியே அவர் செய்துகொடுத்த பிரபந்தம் அவர்கள் கொடுத்த அறிக்கைக்கு ஆதாரமாயும் ஜப்பானிய கல்விமுறைக்கு ஏற்றதாகவும் காணப்பட்டது.

ஸ்தானாபதிகள் இந்தியா மார்க்கமாய் ஜப்பானுக்குத் திரும்பியபோது தங்களோடு வரும்படி அவரை வெகுவாய் அழைத்தார்கள். அப்படியே அவர் போயிருந்தால் சிறந்த சர்க்கார் உத்தியோகஸ்தனாயிருப்பார். ஆனால் தான் எடுத்த மகத்தான நோக்கத்தை நிறைவேற்ற உறுதியாயிருந்தார். அதற்குக் காரணமாக அவர் சொல்லுகிறது என்னவென்றால், நான் ஒரு கிறிஸ்தவ கலாசாலை ஸ்தாபிப்பதாகப் பகற்சொப்பனங் கண்டேன். அதை ஸ்தாபிக்க எனக்கிருந்த மிகுந்த ஆவலை அறிவிப்பது வழக்கம். அதை என் மனதிற்குள் வைத்து அதற்காக ஜெபித்துவந்தேன். 1874-ம் வருஷத்தில் நடந்த அமெரிக்க புறந்தேச

மிஷன் வருஷோற்சவத்திற்கு அவர் போய் இருந்தபோது கூட்டத்தின் கடைசிநாளிலே, ஜப்பானுக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டும். தன் சொந்தத்தேசத்தில் ஒரு கிறிஸ்தவ கலாசாலை கட்டப்படவேண்டுமென்கிற ஆத்திரத்தைத் தெரிவிக்கப் பீடத்தில் ஏறினார். முந்தின இரவில் அவர் தூங்க முடியவில்லை. அதைக்குறித்து அவர் சொல்லுகிறதாவது, அனுபவமில்லாத பிரசங்கி, நான் என்ன செய்வேன், ஆயத்தப்படுத்தியிருந்த முழுவதையும் மனதிற்குக் கொண்டுவர முடியவில்லை. ஆனால் இரண்டு மூன்று நிமிஷத்திற்குமுன் கைகால் நடுக்கத்தை நிறுத்தத் தைரியங் கொண்டேன். புதிய எண்ணம் என் மனதில் தோன்றியது. நான் ஆயத்தப்படுத்தியிருந்ததற்கு முற்றும் மாறாகப் பேசினேன். என் முழுப் பிரசங்கம் 15 நிமிஷத்திற்குள் முடிந்திருக்கவேண்டும். ஆனால் நான் பேசிக்கொண்டிருக்கும்போது என் சொந்தத்தேசத்து மனிதர்களுடைய நிலைமையை நினைத்தமாத்திரத்தில் பேசமுடியாத விசனம் என்னைப் பிடித்ததால் கண்ணீர் சொரிந்துகொண்டு நின்றேன். ஜப்பானில் ஒரு கிறிஸ்தவ கலாசாலை கட்டப் பணமில்லாதபடி திரும்பிப் போகமாட்டேன். அது கிடைக்கும் வரையிலும் இங்கேதான் நிற்பேன் என்றேன். என் அற்ப பிரசங்கத்தை நிறுத்துமுன் ஐயாயிரம் டாலர் ஜப்பானில் ஒரு கிறிஸ்தவ கலாசாலை கட்ட அப்போதே சேர்க்கப்பட்டது. அப்படி அமெரிக்க தர்ம சிலர்களாற் கொடுக்கப்பட்ட தொகை தற்காலத்திலிருக்கிற டோஷிஷாவைக் கட்ட உதவியாயிருந்தது. இப்பொழுது அது கிறிஸ்தவ கலாசாலைகளிற் பெரிதும் முதன்மையானதுமாயிருக்கிறது. கவர்னர் பேஜ் 3,000 ரூபாவும், மற்றவர்கள் 15,000 ரூபாவும் கொடுத்தார்கள்.

1874-ம் வருஷத்தில் அதாவது தேசத்தை விட்டுப்போய், பத்து வருஷத்திற்குப்பின் நீசிமா திரும்பி வந்தார். அவருடைய பழைய சிநேகிதர்களாகிய ஸ்தானபதிகள் சர்க்காரில் ஒரு நிலையான உத்தியோகத்தை எடுத்துக்கொள்ள வேண்டினபோது, "சர்க்காரில் ஒரு வேலை பார்க்கிறேன் என்று வைத்துக்கொள்வோம். அப்படியானால் ஜப்பானுக்கு எவ்



வளவு உதவிசெய்வேன், நிச்சயமாக அது அதிக சொற்பமாயிருக்கும். அப்படியல்லாதபடி என்னுடைய வாலிபரையும், வாலிப ஸ்திரீகளையும் இந்த இடத்தில் படிக்கவைத்தால் நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான நீசிமாக்கள் இந்தத் தேசத்திற்கு நன்மைசெய்யப் புறப்பட்டுப் போவார்கள். இதுவே என் ஜீவியத்தின் நோக்கம்" என்று மறுமொழி பகர்ந்தார்.

ஜப்பானுக்குத் திரும்பிவந்து தன் சொந்தவீட்டைப் பார்க்கப் போனபோது, காகிதம், மரம், மண், செம்பு இவைகளால் செய்யப்பட்டிருந்த தேவதைகளை அவைகளிருந்த இடங்களிலிருந் தெடுத்துச் சுட்டெரித்துப்போட்டார். முற்றத்தில் தினந்தோறும் கூடிய ஜனங்களுக்குச் சுவிசேஷத்தை அறிவித்து, ஜப்பான்தேசத்து மத்தியில் முதற் சபையைக் கட்ட ஒழுங்குசெய்தார். பிற்பாடு கிறிஸ்தவ கலாசாலை ஒன்று ஆரம்பிக்க எண்ணங்கொண்டார். புத்த மதம், ஷின்டோமதம் இவை ஜப்பானில் ஆயிரவருஷங்களாக உறைவிடமாயிருந்த கியோடோ நகர் அக்காலத்தில் மிஷனெரி வேலையை அசட்டை செய்கிறதும், ஏற்றுக்கொள்ள மனதில்லாத இடமாயிருந்தபோதிலும் அங்கே இக்கலாசாலையைக் கட்டுவதற்கேற்ற இடமெனத் தெரிந்தெடுக்கப்பட்டது. ஒரே நோக்கமுடைய கூட்டத்தாரென அர்த்தங்கொள்ளுகிற "டோஷிஷா" என்கிற பெயரை அதற்கிட்டு 1875-ம் வருஷத்தில் அது திறக்கப்பட்டபோது அதில் 7 பொர்டிங் பையன்களோடு வேறொரு பையனும் இருந்தார்கள். நீசிமா இப்பொழுது சுய ஜனத்தாராலும் புத்தமதக் குருக்களாலும் அவ்விடத்து உத்தியோகஸ்தர்களாலும் கேட்ட தொந்தரவு வருத்தங்கள் நிறைந்த வருஷங்களைப் பொறுமையோடு சகிக்கவேண்டியதாயிருந்தது. அக்காலத்தில் "மாஜிஸ்திரேட்டுகளாலும், குருக்களாலும் பகைக்கப்படுகிறோம். ஆனால் உண்மைக்கொடியை நாட்டியிருப்பதினால் பின்னிடோம்" என்று சொல்லிக்கொள்வது வழக்கம்.

1876-ம் வருஷத்தில் அவருக்குக் கலியாணம் நடந்தது. அவருடைய பெற்றோரும் இனத்தாரில் அநேகரும் கிறிஸ்து

மார்க்கத்தில் சேர்ந்தனர். அப்பொழுது கலாசாலையில் இருந்த மாணாக்கர் 47 பேர். மூன்றாவது வருஷத்தில் தொகை நூறுக்கு ஏறினது. ஆனால் இன்னும் அங்கு வருத்தமும், குறை சொல்லுதலும், தப்பு அபிப்பிராயமும், துன்பமும் நேரிட்டுக்கொண்டேயிருந்தது. ஒருசமயத்தில், "ஐ கிறிஸ்துவுக்காகச் சிலுவையில் அறையப்பட்டு மரிப்பது நலம்" என்று கண்ணீரோடு சொன்னார். இந்தப் பாடுகளால் அவருடைய சுகம் கெட்டுப்போனது.

ஒன்பது வருஷங்களாய்ப் பட்ட பாடுகளினால் இளைத்தவராய் 1884-ம் வருஷத்தில் சுகத்திற்குதவியாக ஐரோப்பா ஐக்கிய மாகாணங்களுக்குப் புறப்பட்டார். சுவிட்ஸர்லாந்து தேசத்தில் காட்ஹார்ட் கணவாயைக் கடக்கும்போது இர்தாசய வியாதியால் பிடிக்கப்பட்டு வழியில் மிகவும் வருந்தினார். அச்சமயத்தில் அவர் எழுதிய பாகமென்னவெனில், "நான் ஜப்பானிய சுதேசி, அதற்கு மிஷனரியுமாயிருக்கிறேன். அன்புள்ள பரம தகப்பன் என் ஆத்துமாவை ஏற்றுக்கொள்வாராக. இதை வாசிப்போர் யாவரும், என் அருமைச் சொந்த தேசமாகிய ஜப்பானுக்காக ஜெபிக்க வேண்டுகிறேன். ஜப்பானுக்காக நான் கொண்டிருந்த நோக்கம் ஒருவேளை சித்தியாது. ஆனால் தேவன் தம்முடைய வல்லமையான வேலையை இன்னுஞ் செய்வார் என்று விசுவாசிக்கிறேன். என் தேசத்தில் அநேக உண்மையான கிறிஸ்தவர்களையும் எழுப்புவாராக. ஆமென்."

அமெரிக்காவுக்குப் போனபோது அவருடைய சுகம் அதிகமாய்க் கெட்டுப்போனது. ஜப்பானில் இருந்தவிதமாகவே அநேக இராத்திரிகளாகத் தூங்கவில்லை. "ஜப்பானைப்பற்றிய எண்ணம் என் மனதைவிட்டுப் போகாது. ஜப்பானுக்கு நான் ஒரு கைதி. கண்ணீர் வெள்ளம் சிந்தாமல் எழுத முடியவில்லை. என் பிரியமுள்ள ஜப்பானுக்காக என் இருதயம் எரிமலை நெருப்பைப்போல எப்பொழுதும் எரிந்துகொண்டேயிருக்கிறது" என அங்கிருக்கும்போது மேற்கூறிய சுகவீனத்திற்குக் காரணமாய்ச் சொல்லுகிறார்.



கனம். நீசிமா 1885-ம் வருஷத்தில் இன்னும் உடம்பில் சுகமில்லாதிருந்தாலும் ஜப்பானுக்குத் திரும்பிவந்தார். டோஷிஷாவுக்காகக் கூடிய கூட்டத்தில் அந்நியதேச காரியங்களைப் பார்க்கிற மந்திரி இனோயி பிரபுவும் ஜப்பானின் பிரதம மந்திரி ஒகுமா பிரபுவும் டோஷிஷாவைக் கிறிஸ்தவ உயர்தரக் கல்விசாலையாக்க ஒவ்வொருவரும் 1,500 ரூபாய் கொடுத்தார்கள். மற்ற ஜப்பானிய தேசாபிமானிகளெல்லாருஞ் சேர்ந்து ஒரே சமயத்தில்தானே 50,000 ரூபா எழுப்பினார்கள். பிற்பாடு அமெரிக்காவிலிருந்து கனம். ஹாரிஸ் என்பவர் சாஸ்திரசாலைக்காக 3 லட்சம் ரூபா அனுப்பினார். 1889-ம் வருஷத்தில் மாணாக்கரின் தொகை 900 ஆகிவிட்டது. இதற்குள் டோஷிஷாவிலிருந்து கல்வி பெற்று வெளியேறினவர்கள் 5,000! அவர்களில் ஐம்பதுக்கதிகமானபேர் உத்தியோகஸ்தர், 20-க்குமேல் பத்திரிகாசிரியர், 100-க்குமேல் பிரசங்கிமார், 200-க்குமேல் உபாத்தியாயர்களும் மற்ற வேலை பார்ப்போரும். இவர்கள் ஜப்பானுடைய சரித்திரத்தில் மாறுதலை உண்டாக்கியிருக்கிறார்கள்.

இதற்கிடையில் நீசிமா ஜப்பானுடைய சபையாருக்கு முதற்றலைவராக நியமிக்கப்பட்டு ஜப்பானிய மிஷனெரி சங்கத்தை ஏற்படுத்த உதவிசெய்தார். மாணாக்கரிடத்தில் அவருடைய செல்வாக்கு அதிகரித்தது. அருகிலிருந்தாலும் தூரதேசத்திலிருந்தாலும் இடைவிடாமலும் அடிக்கடி கண்ணீரோடும் அவர்களுக்காக ஜெபித்தார். "ஒரே காரியத்திற்கு ஒரே நோக்கமாயிரு" என்பதைச் சட்டமாகக் கொண்டிருந்தார். இன்னொரு சமயத்தில் "முழங்காற்படியிலிருந்தே முன் செல்வோமாக" எனச் சொன்னார். "நீசிமா நேசிக்கத்தக்கவரும் அமைதலும், சாதுவும், மரியாதையுமுள்ள நடக்கையுடையவர். அவர் அன்பும் அறிவுமுடைய கிறிஸ்தவர். ஒரு மிகுந்த தேசாபிமானமுள்ள ஜப்பானியர்" என்று தேர்ந்த கனம். இஸபெல்லா பேர்ட் என்னும் பிரயாணி அச்சமயத்தில் அவரைப்பற்றித் தெரிவிக்கின்றார்.

1889-ம் வருஷத்தில் அவருடைய சுகம் சடுதியில் கெட ஆரம்பித்தது. வைத்தியரும் அவருடைய வியாதியைச் சுகப்

படுத்துவதற் கரிதானதெனப் பகர்ந்தார். அவர் மரணப் படுக்கையி லிருக்கையில் கலாசாலைக்குத் தந்தி போனது. அப்பொழுது மாணாக்கரெல்லாரும் "அவர் இன்னும் உயிரோடேயிருப்பது தேவனுக்குச் சித்தமானால் அப்படி ஆகக்கடவது" என்று மிகுந்த அழுகையோடும் கண்ணீரோடும் தேவனை நோக்கி வேண்டுதல் செய்தார்கள். ஆனால் அவர் தான் புறப்படுவதற்கான காலம் வந்ததென்று அறிந்து தம் குடும்பத்தாரையும், சிநேகிதர்களையும் கிட்ட வரவழைத்துப் பள்ளிக்கூடத்தையும் மிஷனெரி சங்கத்தையும்பற்றிய காரியங்களைத் தமது கடைசி வார்த்தைகளாக அறிவித்தார். அவர் மரணப்படுக்கையி லிருக்கையில் இந்த ராஜ்யங்களடங்கிய படமொன்று அவருக்குமுன் தொங்க விடப்பட்டிருந்தது. அதில் குறிப்பான இடங்களும் விசேஷம் பரவாத பாகங்களும் வர்ணமிடப்பட்டிருந்தது. அவ்விடங்களைப்பற்றி, அவர் வெகு ஆத்திரத்தோடு பேசினதினிமித்தம் அவருக்கு மிகவும் மயக்கமுண்டாகவே, அவருடைய சிநேகிதர்கள் அவர் பேசுவதை நிறுத்தவேண்டியதாயிருந்தது. இச்சமயத்தில் அவரைக் கிடத்த ஒரு மெத்தை கொண்டுவந்தார்கள். அதற்கு அவர் தான் அவ்வளவு சங்கடமில்லாமல் சாவதற்குத் தகுந்தவனல்லவென்று சொல்லி, தாம் நேசித்தவர்கள் ஒவ்வொருவருக்கும் பிரியாவிடை கூறி, தமக்காக ஒரு ஞாபக ஸ்தம்பமும் கட்டக்கூடாதென அறிவித்தபின், "நான் நன்றியறிதலுள்ள இருதயத்துடன் இவ்வுலகத்தை விட்டுப் போகிறேன்; எனது பலவீனத்தின் நிமித்தம் இவ்வளவு சொற்பமாய் செய்யக்கூடியவனாயிருந்தேன். டோஷிஷாவினுடைய பின்னேக்கம் கிறிஸ்துமார்க்கம் விருத்தியடையச் செய்வதே. அந்நியதேச உபாத்தியாயரும் ஜப்பானிய உபாத்தியாயரும் அன்பின் கட்டுக்கடங்கி யாதொரு கலக்கமின்றி ஏகமாய் வேலையை நடத்துகிறதற்காகக் கவலை எடுத்துக்கொள்ளவேண்டும்" என்று சொன்னார். எபேசியர் மூன்றும் அதிகாரத்தை வாசித்த பிற்பாடு "சமாதானம், சந்தோஷம், பரலோகம்" என்னும் வார்த்தைகளை உச்சரித்து ஜீவனை விட்டார்.



1890-ஞ ஜனுவரிமீ 23உ அவர் மரித்தார். அவருடைய சரீரம் கியோற்றோ நகரிக்குக் கொண்டுவரப்பட்டது. அந்த அருமையான பிரேதத்தைக் கலாசாலைக்கும், கல்லறைக்கும் சுமந்துகொண்டு செல்ல அவர் மாணாக்கர்கள் 700 பேர் கூடினார்கள். அந்த அரிய சிலாக்கியத்தைத் தங்களைத் தவிர மற்றொருவருக்கும் கொடுக்க விரும்பவில்லை. மற்றக் கல்விச்சாலைகளிலிருந்து மாணாக்கர்கள் வந்திருந்தார்கள். ராஜாங்கத்தின் எல்லாப் பக்கங்களிலிருந்தும் டோஷிஷாவில் கற்றுப் பட்டம்பெற்ற 70 கல்விமான்களும், ஜப்பானின் அநேக இடங்களிலிருந்து நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர்களும், கவர்னரும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும், இன்னும் அடுத்த ராஜ்யத்தின் கவர்னரும், ஒசாக்காவிலிருந்து வந்த ஒரு கூட்டமான புத்தமத பிரதிநிதிகளும் ஆகிய இவர்களெல்லோரும் இந்த ஜப்பானிய தேசாபிமானிக்கு மரியாதை செய்ய வந்து கூடினார்கள். ஜப்பானில் கிறிஸ்த மார்க்கத்திற்கு மூலாதாரமென்று புத்தமதத்தாரால் அழைக்கப்பட்ட இவரை அடக்கஞ்செய்ய உறை மழையின்வழியாய்ச் சென்று மலையைச் சுற்றிவந்து நகரத்திற்கு எதிரேயிருந்த ஒரு அழகான இடத்திற்கு வரும்போது ஜனக்கூட்டம் ஒன்றரை மைல் நீளத்திற்கு தெருக்கள் வழியாய்ச் சென்றது.

இச்சமயத்தில் அப்படிப்பட்ட ஒரு ஜீவிய சரித்திரத்திலிருந்து இந்தியாவிற்கு யாதொரு படிப்பினையுமில்லையா?

# VIII

## ஜப்பான் இந்தியாவுக்குச் சொல்லும் செய்தி.

நாம் முறையே இந்தத் தேசம், இதன் பூர்வசரித்திரம், ஜனங்களின் குணாதிசயம், தொழில்தனம், வியாபாரம் மார்க்கம் இவைகளைக் கவனித்தோம். முந்தின அதிகாரங்களில் நாம் தெரிந்துகொண்ட காரியங்களை யோசித்துத் தற்காலத்தில் நாம் ஜப்பானிடமிருந்து படித்துக்கொள்ளக்கூடிய நல்ல குறிப்புகளைக் கவனிப்போமாக. மற்றவர்களிடத்திலிருந்து கற்றுக்கொள்ள அது பிரீதியுடையதாயிருந்ததையும், பூர்வத்தில் நம்மிடத்திலிருந்து நன்மை பெற்றுக்கொண்டதையும், இருதேசத்தாரும் ஒரே கண்டத்தவர்கள் என்பதையும் கவனிக்குங்கால் ஜப்பான் நமக்குச் சொல்லும் செய்தியைக் கேட்க நாம் தயாராயிருப்போம். ஜப்பான் நம்மிடத்திலிருந்து கற்றுக்கொள்ளத் தேவையில்லையென்றாவது இந்தியா அதற்குப் படிப்பிக்கத் தக்கதொன்றுமில்லையென்றாவது நாம் சொல்லுகிறதில்லை. நாமிப்போது நமக்கடுத்த காரியங்களை, நமக்குத் தேவையாயிருக்கிறதென்னவென்பதைப் பார்ப்போம்.

(1) தேசாபிமானம். இந்தியா ஜப்பானிலிருந்து படித்துக்கொள்ளவேண்டிய முதற்பாடம் தேசாபிமானம். ஜப்பானின் ஒற்றுமைக்கும் ராஜாங்கத்துக்கடுத்த காரியங்களின் முன்னேற்றத்துக்கும் சண்டையிலோ சமாதானத்திலோ சித்தியுள்ளதாயிருந்ததற்கும் காரணமாயிருந்தது இதுவே. ஜப்பானில் தேசாபிமானமென்பது தங்களுடைய தேதுவென்றாலும் புகழ்ந்து பேசுவதும் பிறருடையதெல்லாவற்றையும் இகழ்வதுமல்ல. தேசத்தின் நன்மைக்காக ஒருவன் தன்னைக் கீழ்ப்படுத்துவதேயாம். ஜப்பானியரில் பிரதானமான ஒருவர் சொல்லுகிறதாவது: "எங்களுடையதெல்லாம் நன்றன்று. ஆனால் நன்றாயிருப்பதெதுவோ அதெல்லாம் எங்களுடையதாகும். எங்களுடைய பிழைகளை நாங்கள்



கண்டு அதைத் திருத்துகிறோம்." நம்முடைய தேசத்தில் பிரசாரமாகிய சுபோத பத்திரிகை சொல்வதென்னவென்றால், "இந்தியாவில் தேசாபிமானம் என்பது நயமோ இடறோ என்று பாராமல் நம்முடையதெல்லாம் மேலானதென்றும் பிறருடையதெல்லாம் தாழ்வானதென்றும் சொல்லுவதே. ஒரு வழக்கம் நல்லதோ கெட்டதோ என்பதல்ல, அது நம்முடையதோ மற்றவருடையதோ என்பதே விசாரணை. நம்முடையதாயிருந்தால் 'பேஷ்' என்று சொல்லுவார்கள்." ஜப்பானியரை ஒரு ஜனமாகப் பார்த்தாலும் நிப்பானைப்போன்ற மெய்யான தேசாபிமானிகளைக் கவனித்தாலும் தேசாபிமானத்தில் மூன்று இலக்ஷணங்களைக் கவனிக்கலாம். அவையாவன, தேசத்தின் ஆவி, உண்மையில் விசுவாசம், சுயவெறுப்பு.

1. தேசாபிமான ஆவிக்கு பதத்திற்கு "தேச நேசம்" என்பது பொருள். அது நேசமேயன்றி அவேசமல்ல. சுயதேசம் மரிக்க தேச நேசம் ஜனிக்கிறது. சுயாதீனமென்னும் மண்ணிலேதான் அது செழித்தோங்கும். எகிப்து அசீரியா பாரசீகம் தொன்றுதொட்டு நாகரிக மடைந்தவையாயினும் தேசாபிமானிகளைப் பிறப்பிக்கவில்லை. ஒரு தமிழ்ப் பழமொழி தெரியுமல்லவா? "இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன." எல்லாம் ஒரேஜனமாகவேண்டுமென்று நற்கால அபேட்சை இந்தியாவுக்கு நவீனமானது என்பது இந்தியாவின் இஷ்டத்தையும் இந்தியானை யாட்கொண்ட எண்ணத்தையும் கவனித்தால் தெரியும். ராஜாங்கத்துக்கடுத்ததும் மார்க்க சம்பந்தமானதுமாகிய இந்தியாவின் பூர்வ சரித்திரத்தை உற்றுணர்ந்தோர் இந்தச் சத்தியத்தை அறிவார். மேல்தேசத்தோடு சேர்க்கப்பட்டபிறகே ஒரேஜன மாகவேண்டுமென்ற கருத்து உதித்திருக்கிறது.

ஏகஜன மாகவேண்டுமென்ற எண்ணமும் தற்காலத்திலே தோன்றியிருக்கிற தேசாபிமானமும் நம் தேசத்துக்குப் புதிதாயிருந்தாலும் அது நமக்கு அத்தியாவசியமே. ஏற்ற காலத்திற்றான் இது தோன்றியிருக்கிறதேயன்றி காலத்துக்கு முன் அல்ல. இந்தியாவிலே விசேஷமாய்க் கிறிஸ்தவர்களுக்குள் தேசாபிமானம் பெருகவேண்டுமென்பதற்கு குறை

யக்கூடாது. மற்றவர்களிலும் கிறிஸ்தவன் தேசாபிமான மிகுந்தவனாயிருக்கவேண்டும். கிறிஸ்தவர்கள் ஏக ஜனக்கட்டைக் கெடுத்துப்போட்டார்கள். மேற்கத்துச் சிந்தை மேற்பூண்டு முற்றிலும் மேற்கத்தியாரா யிருக்கிறார்கள். தங்கள் தேசத்தோடு அபிமானமும் காட்டாமல் வேறுமைப் பட்டவர்களா யிருக்கிறார்கள் என்று அவர்களைக்குறித்துக் குறை கூறுகிறதைக் கேட்கிறோம். அது வாஸ்தவமானால் மிகவும் துக்கத்துக்கும் வெட்கத்துக்குமுரிய காரியம். இனிமேல் இது பொய்க்கும்படியாய் நடக்கவேண்டும்.

“மானிட ஜென்மமென் றருமெடுத்தவருள் இது என் தேசம் என்று குதுகலிப்புடன் சொல்லிக்கொள்ளாது ஆவி அடங்கிப்போயிருக்கிற ஒரு ஆத்மா உண்டோ?”

ஆம், சிலருண்டென்று பயப்படவேண்டியதாயிருக்கிறது. இவ்விஷயத்தில் ஜப்பானியருக்குமுன் நாம் தலைகவிழ்ந்திருக்கவேண்டியதே. ஜப்பானிய கிறிஸ்தவன் தேசாபிமானி. தேசாபிமானம் அவனில் குறைவில்லை. கிறிஸ்தவனாயிருப்பதினிமித்த மவனில் மிகைபடுகிறது. மற்றவரைக்காட்டிலும் இவனே அதிகம் கொடுக்கக் கடமைப்பட்டவன். தற்காலத்தில் இந்தியாவிற் பரவியிருக்கிற தப்பிதமான வழியிற் செல்வதாகிய, போலித் தேசாபிமானத்தில் தங்களுக்கு பாகம் எடுத்துக்கொள்ளுவது கிறிஸ்தவர்களுக் கேற்றதல்லவாயினும் ஏதாவது ஒரு சாக்குச்சொல்லி முற்றிலும் ஏனோதானோவென் றிருப்பது சரியல்ல. தன் தாய்தேசத்தை நேசிக்காத, அதற்காக உழைக்காத, ஜெபிக்காத கிறிஸ்தவன் வெட்கப்படவேண்டும்.

இரண்டாயிர வாண்டுகளுக்குமுன் இந்தியா நாகரிகமடைந்த தேசமாயிருந்தது. ஜப்பானோ மிலேச்சநாடாயிருந்தது. நாற்பது வருஷமாய் அவர்களுக் குண்டாயிருந்த தேசாபிமானம் அநேக விஷயங்களில் அத்தேசத்தை முதன்மையாக்கி இந்தியாவைப் பின்னிடச்செய்தது. நாம் தூங்கிக்கொண்டிருந்தகாலத்தில் அவர்கள் விழித்திருந்து வேலை செய்தார்கள். கடைசியாக இந்தியாவில் அருணோதய முதித்திருக்கிறது. நாம் எழுந்திருப்போம்; முயலுவோம்.



2. சத்தியத்துக்கு விசுவாசமுள்ளவர்களா யிராவிட்டத்தில் தேச நேசமானது குருட்டுத்தனமாயும் தகாதவழியிற் செல்வதாயுமிருக்கும். இந்தியாவின் வீரனும் ராஜதர்ம நிபுணன் சர். தி. மாதவராவ் சொல்வதை நாம் அடிக்கடி நினைக்கவேண்டும். அதென்னவென்றால் “சத்தியமானதைத் தவிர மற்றது தேசாபிமானத்துக் கடுத்ததல்ல.” அசத்தியம் சத்தியத்தை ஆதரிக்கமாட்டாது. ஒவ்வொரு தகாத பயிற்சியும் ஒவ்வொரு கெட்ட வழக்கமும் தேர்ச்சியைத் தடுக்கிற ஒரு அடைப்பாகும். அசத்தியம் பேசுகிறவன், இலஞ்சம் வாங்குகிறவன், ஏழைகளை ஒடுக்குகிறவன் இவர்களெல்லாரும் துரோகிகள், நாம் புறத்தேசத்தாரை வெறுக்கும் வெறுப்பல்ல, நம் தேசத்தாரை நேசிக்கும் நேசமே இந்தியாவை இரட்சிக்கும். புறத்தேசத்தார் எவ்வளவு நல்லவராயிருந்தாலும் கெட்டவராயிருந்தாலும் நம்முடைய தேசத்துக்கு அவர்கள் செய்யக்கூடிய நன்மையானாலும் தீமையானாலும் சொற்பமே. இந்தியரே இந்தியாவை இரட்சிப்பார். இந்தியரே இந்தியாவைக் கெடுப்பார். ஒரு தேசத்துக்குக் கொடிய துரோகிகளாயிருப்போர் விசுவாசகாதகராயுள்ள அதன் மக்களே. இந்தியா நம்முடையது; நாம் அதை இரட்சிப்போம் அல்லது கெடுப்போம்.

3. உண்மையான தேசாபிமானத்தின் மூன்றாவது இலக்ஷணம் சுயவெறுப்பு. ஆ! தற்காலத்தில் இது எவ்வளவு அவசியம். வெறும் பேச்சுப்பேசுவது மிக சுலபம். இந்தியா வசியமானது வாக்குச்சாதுரியமல்ல, செய்கையே. சங்கிலையாமல் தேசக்ஷேமப்பயர் சீர்திருத்தம் செய்வதை, தூரத்திலே விட்டுவிடுங்கள். நஷ்டமில்லாமல் எல்லாம் தானே சரிப்பட்டுப்போமென்றெண்ணுவது கனவு. அந்தக்காலம் ஒருபோதும் வரப்போகிறதில்லை. யாராவது ஒருவர் பாடுபடவேண்டும். ஒருவர் முந்தி நடந்து காட்டினாற்றான் மற்றவர் செல்வார். இந்த நவயுகத்தின் ஆரம்பத்தில் ஜப்பானியர் ஒருவர்பின் ஒருவராய் ஜீவனைக் கொடுத்தார்கள். நாம் உண்மையான தேசாபிமானிகளாக வேண்டுமானால் நாம் சரியென்றெண்ணுகிற காரியத்தைச் சாதிக்கும்படியான மனோதிடம் நமக்கவசியம். “கிறிஸ்தவர்கள் தங்களுடைய

காரியங்களைமாத்திரமே பார்த்து ஏகஜன பக்ஷத்தில் சேர்ந்திருப்பார்களேயாகில் கிறிஸ்துமார்க்கத்தைக் கனர்த்தம் பிடித்துவிட்டது என்றெண்ணாமலிருக்க என்றால் கூடாது. நன்மையும் உண்மையும் நியாயமுமான காரியங்களில் எங்கெங்கே தங்கள் செல்வாக்கை உபயோகிக்கவேண்டுமோ அங்கெல்லாம் உபயோகித்துக் கீழ்த்தேசத்தில் இப்பொழுது பரவிக்கொண்டுவருகிற இந்த அவியில் கிறிஸ்தவர்கள் தங்கள் உடன்தேசத்தாரைத் தூக்கிக் கரை ஏற்றும் விஷயமாய்த் தங்களாலியன்றதைச் செய்து தாங்கள் கிறிஸ்தவர்களாகாதிருந்தால் எவ்வளவு செய்திருப்பார்களோ அதைப்பார்க்கிலும் மதிகமாக எல்லாருக்கும் நன்மை செய்து, தங்கள் தாய்த்தேசத்துக்காக அபிமானம் பாராட்டுவது அவசியம்" என்று C. F. அண்ட்ரூ ஐயர் சொல்லுகிறார்.

(2) **சீர்திருத்தம்.** தேசாபிமானமானது செய்கையில் வெளியாகவேண்டும். செய்யப்படவேண்டிய காரியங்கள், ஒழுங்குபடுத்தப்படவேண்டிய விஷயங்கள், அகற்றவேண்டிய கெட்ட வழக்கங்கள் அநேகம். இவ்விஷயத்தில் ஆரம்பம், சீர்திருத்தம் இவைகள் ஐப்பானியரிலிருந்து நாம் படிக்கலாம். அத்தேசத்தின் சித்தி சுலபமாய் கொஞ்சப்பொழுதில் வந்ததோ? இடைவிடாது முயற்சியுடன் அநேக சீர்திருத்தங்கள் அவசியமாயிருந்தன. கல்வி விருத்தி செய்தார்கள். ஸ்திரீகளை மேன்மைப்படுத்தினார்கள், ஜனசங்கத்தால் அமைந்தவைகளில் தடையாயிருந்த யாவற்றையும், கீழ்ஜாதிகள் உயரவும் தேசத்தின் சகல நடபடிகளுக்கும் பாத்தியஸ்தராகவும் இடையூறாயிருந்தவைகளையும் ஒழித்தார்கள். இன்னும் இப்பொழு இந்தியாவுக்கு இன்றியமையாததாயிருக்கிற அநேக சீர்திருத்தங்கள் ஐப்பானில் செய்தார்கள். ஜனசங்கம், கைத்தொழில், மார்க்கம் இவைகளில் சீர்திருத்தம் செய்யாமல் ராஜாங்கவிஷயங்களில் சுயாதீனம் தேடுபவர், இந்தியாவை அரசின்மை, இரத்தம் சிந்துதலென்னும் படுகுழிகளில் அமிழ்த்துவார்கள். ருஷியாதேசம் அத்தேசத்திலுள்ள ஒருவராலேயே ஆளப்பட்டுவருகிறது; அவர்களுக்கு மகா ஜனசங்கம் உண்டு. ஆனால் ஜனசங்க விஷயங்களிலும் மார்க்கத்துக்கடுத்த காரியங்களிலும் சீர்திருத்தமில்லாமை



யால் அவர்கள் கஷ்டிக்குள்ளாகியிருக்கிறார்கள். கனடா தேசத்தவர்க்கு ராஜாங்க சுயாதீனம் கிடையாது. ஆயினும் அவ்விஷயத்தில் மற்றைய தேசத்தைக்காட்டிலும் சொற்பமான குறையுடையவராய் அமெரிக்க ஐக்ய மாகாணங்களிலும் அதிகமான சுயாதீனத்தை அனுபவிக்கிறார். அந்த ஜனங்கள் யாதொரு மனக்குறையுமின்றி சந்தோஷமுள்ளவராயிருக்கிறார்கள். அவர்கள் ராஜபக்தியுள்ளவர்கள், தகுந்தவர்களென்று அறிந்தபோது வெகு சந்தோஷத்துடனே ராஜாங்கத்தில் அவர்களுடைய உரிமை கொடுக்கப்பட்டது. "தில்லைக் கோவிந்தன்" என்னும் நூலின் ஆசிரியர் பின்வருமாறு சொல்லுகிறார். "ராஜாங்கத்தை நடத்தத்தக்க யோக்கியராய்க் காணும்போது பூரணபாத்தியம் கொடுக்கப்படும். ராஜாங்க சுயாதீனமானது அபாயகரமான இருபுறமும் கருக்குள்ள பட்டயம்போன்றது. அப்பட்டயத்தைத் தரித்துக்கொள்ள நாம் கொஞ்சக்காலம் தாமதிக்க வேண்டியதாயிருந்தால் அதினால் நமக்கு கண்ணியக் குறைவில்லை.

அரிஸ்டாட்டில் என்பவருடைய சித்தாந்தத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவோம். "பெரிய ஜனமெதுவோ அதுவே சுயாதீன ஜனம்." பூர்வத்தில் பெரிதாயிருந்தது இனிமேலும் பெரிதாயிருக்கும். என்றாலும் இந்தியாவில் சீர்திருத்தம் தேவை. கல்வி, ஜனசங்கத்தின் பொதுவான அறிவு, ஒருவருக்கொருவர் நடந்துகொள்ளுதலும் நடவடிக்கைகளில் யதார்த்தம், ஸ்திரீகளின் நிலை, ஜனசங்க சுத்தம், ஜாதி வகுத்தவம் இவைபோன்ற விஷயங்களில் கவனித்துப் பார்த்தால் சீர்திருத்தத்தைப்பற்றிப் பேசும் பத்திரிகைகளில் பிரதானமானவை சொல்வது, அதாவது இந்தியாவின் அத்தியாவசியமான சீர்திருத்தம் அகத்திலிருந்தே வரவேண்டும் என்று சொல்வது சரியென்பது விதிதமாகும். நாம் நம்மாலியன்றமட்டும் தாறுமாறுகளைச் சீர்ப்படுத்தல், நம்முடைய வீட்டை ஒழுங்குசெய்தல் முதலிய நாமே செய்யக்கூடிய முக்கியமான காரியங்களைச் செய்யாதிருந்துகொண்டு அந்நியரான துரைத்தனத்தார் நமக்கது செய்யவில்லை, இது செய்யவில்லையென்று குறைகூறுவது காலநஷ்டமேயன்றி வேறென்ன? பிரபல்ய கிரந்தகர்த்தா ஸ்ரீ. வ. மகாதேவய்யர்

சொல்லுகிறபடி "நம்முடைய ஹிருதயத்தில் நியாயமானதென்று நாம் நிர்மானிக்கிற காரியங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளுகிறதும், நம்முடைய அன்றாட நடபடிக்கைகள் அவைகளுக்கு ஒத்திருக்கிறதா என்று பார்க்கிறதும் அபூர்வம். அநேக கலைகளையுணர்ந்த ஒரு சாஸ்திரி தேசசரித்திரம் ஜனசங்கத்துக்கடுத்த அறிவு இவைகளை யடைந்து நன்குணர்ந்து ஜீவியத்தின் பிரமாணங்களை அதிக ஸ்பஷ்டமாய் எடுத்துப்பேசிக் கேட்போர் மயங்கி ஸ்தம்பித்து நிற்கும்வண்ணம் உபந்நியாசிக்கிறார். சிசு விவாகத்தின் தீமை தற்கால நிர்ப்பந்த நிலைமைக்கு எவ்வளவுதூரம் காரணமாயிருந்து வந்திருக்கிறது என்பதை நன்றாயறிந்த அவர் தன் புத்திரி சிசுவாயிருக்கும்போதே பாணிக்கிரகணம் செய்யச் சற்றும் பின்வாங்கார். கடற் பிரயாணத்தினால் வரும் அனுகூலங்களைச் சவிஸ்தாரமாய்ப் பேசுவார். ஆனால் தம் புதல்வனுக்கதை விலக்குவார். அவருடைய கிருகத்திலேயே கைம்மையான சகோதரிகளும் புத்திரிகளும் வாடி நொந்து மாய்வர். பெண்களின் நட்டனம் பேசப்பட்டதென்பர். இரவில் நடனமாதர் வீட்டிலவரைக் காண்பது கஷ்டமல்ல. ஜகத்துள்ளோரெல்லாரும் சகோதரரென்பவர். அவருடைய குடியானவருள் தாழ்ந்த ஜாதியானுக்கும் அவரிலுள்ள தாழ்ந்த ஜாதிக்காரருக்கும் யாதொரு பேதமுங் காண்பதரிது. சூத்திரனொருவன் தன்னைப்போல் இராயசக்காரனாயிருந்து தன் மேற்பாயிருப்பதைக் காண இவருக்கு மனம் சகியாது. இப்படிச் சொல்வதொன்றும் செய்வதொன்றுமாய் வெட்கத்துக்கிடமான ஒவ்வாத ஜீவியம் செய்வோர் ஒருவர்தானோ? நூற்றுக்கணக்கான பேருண்டு. நாம் இயற்கை அறிவினாலும் இயற்கையிலுண்டாகு மனசினாலும் மாத்திரம் இயக்கப்படும் மிலேச்சரல்ல. மானிடருக்குள் சீர்திருத்தத்திற்கேதுவான சன்மார்க்கப் பிரமாணங்கள் அஷ்டமாக்கப்படுவதைக் கண்ணுற்றும் எவ்வளவு காலம் முயற்சியின்றி யிருப்போம்? இவ்விதமாய் நம்முடைய குறையைப் பகிரங்கமாய் ஒத்துக்கொள்வது நமது காரியங்களைச் செவ்வைப்படுத்துவதற்கு முதற்படியாம். சீர்திருத்தம் அவசியமில்லையென்று சொல்வோமாகில் சுயாதீனத்தைப் பின்போடுகிறவர்களா யிருப்போம்.



வைத்தியன் முதலாவது கைபார்த்து நோயின் குணம் குறிகளை அறிந்துகொண்டு பின்பு அதை நீக்கும் ஔஷதப்பிரயோகம் செய்வான். நம்முடைய குறைவுகளையும் நாம்தாமே எப்படி நிவிர்த்திக்கக் கூடுமென்பதையும் அறிந்தாலன்றி யாராயினும் நமக்குதவிபுரிவது கூடாது.

இக்கரைக் கக்கரை பச்சையென்பது வாஸ்தவமே. நம்முடைய ராஜாங்கத்தாரின் குறைகளை நாம் காண்பதும் அதைப் பெருப்பித்துப் பேசுவதும் கீழ்க்கோடியிலுள்ளோரின் நன்மைமாத்திரம் நமது கண்ணுக்குத் தோன்றுவது மியற்கையே. எல்லாருடைய கண்களும் ஜப்பானை நோக்கி வியப்புறுகின்றன. ஆனால் மேற்படி ஜப்பானது உலகத்தார் தங்களை மெச்சிக்கொள்ளும்வண்ணம் கொரியாவில் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று பிரயாசப்படும் பொழுது கொரியரோ பங்காளத்தார் ஆங்கிலேயரை வெறுப்பதிலும் பார்க்க அதிகமாய் வெறுக்கிறார்களென்பது இந்தியாவில் அநேகருக்குத் தெரியாது. நாகரிகம் சாஸ்திரங்கள் கைத்தொழில் முயற்சி மார்க்கம் முதலானவை பூர்வத்தில் கொரியாவிலிருந்து ஜப்பானுக்கு வந்தது. ஆனால் இன்றைக்கு ஜப்பானியர் தங்கள் இருப்புக் குதிகாலால் எங்களை மிதித்து எங்களுடைய சொத்துரிமைகளைக் கவனிக்காது எங்களுடைய எண்ணங்களைக் காலின்கீழ்ப் போட்டு எங்கள் சன்மார்க்கவிஷயமாய்க் கிஞ்சித்தும் அக்கறைப்படாதவர்களா யிருக்கிறார்கள் என்று கொரியரில் உத்தமர் வாதிக்கிறார்கள். ஜப்பான் கொரியாவில் நாணயவிஷயமாய் நல்ல ஏற்பாடு செய்திருப்பதோடு அங்கங்கே இருப்புப்பாதைகள் போட்டிருக்கிறார்கள். கல்வி தற்கால நாகரிகம் இவை விஷயமாய் அநேக காரியங்களைச் செய்வதாய் வாக்குப்பண்ணியு மிருக்கிறார்கள். ஆரம்பத்தில் ஜப்பானுக்கு நல்வரவு கூறின கொரியரில் அநேகர் இன்றைக்கு அவர்கள்மேல் கசந்துகொள்ளுகிறார்கள். அவர்களுக்கு விரோதமாய்க் கலகம் செய்கிறார்கள். ஆயினும் கொரியர் ஜப்பானியர் ஆளுகையில் முன்னேறி வந்திருக்கிறதும், இன்னம் அநேக நன்மைகள் அவர்களுக்குமுன் வைக்கப்பட்டிருப்பதும் வாஸ்தவம். தங்களுடைய சீர்கேடான அரசாட்சியிலேயே இருந்-



புத்தர் கோயில்



திருப்பார்களானால் அவர்களுக்கு இவ்வளவு நன்மை கிடைத்திராது.

பிலிப்பியன் தீவுகளில் இதே விதமான சங்கதி பார்க்கலாம். கல்வியையும், சுய அரசாட்சியையும் அவர்களுக்குக் கொடுக்கும்படி அமெரிக்கர் செய்யாத முயற்சியில்லை. ஆனால் இலாக்கா உத்தியோகஸ்தரில் அநேகர் கறைப்பட்டவர்களாய் இலஞ்சம் வாங்கி ஜனங்களுக்கு இம்சை செய்கிறார்கள். அமெரிக்கர் காலத்துக்கு முன்னே தாங்கள் ஆயத்தமாயிராதபோது முன்னேறி நன்மைகள் பெற்றுக்கொண்டதினாலே இப்பொழுது திருப்தியற்றவர்களும் கலகக் குணமுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். இந்தியர் ஆங்கிலேயரிடத்தில் எவ்வளவு அன்பு வைக்கிறார்களோ அதை மிஞ்சின அன்பு அமெரிக்கரிடத்தில் பிலிப்பியன் தீவார் வைக்கிறதில்லை.

ஒரு ஜாதி இன்னொரு ஜாதியை ஆள்வதில் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய உபகாரம் நன்றிகெட்ட மனோ பிரீத்தான். நமது விஷயத்தில் எவ்வளவு ஞாயம் உத்தரவாத முறையது என்பதைப்பற்றி நம்முடைய அபிப்பிராயம் என்னவாயிருந்தாலும் சீர்திருத்தத்தின் விஷயமாய் நமக்கு இருக்கும் கடமையைப்பற்றிச் சந்தேகம் சிறிதும் கிடையாது.

காங்கிரஸ் மகாசபைத் தலைவர்கள் திரும்பத் திரும்பக் காண்பித்திருக்கிறபடி இதுவே பிரதம விசேஷமானதும் நமது சக்திக்கு எட்டினதும் சுய அரசாட்சிக்குமுன் வரவேண்டியதும். இதிலே ஒவ்வொருவராய் எல்லாருக்கும் வேலைசெய்ய இடமுண்டு. நாளைக்கு என்று சொல்லாமல் உடனே நமது வீட்டிலே, நமது பட்டணத்திலே, நமது கிராமத்திலே துவக்கவேண்டும்.

(3) **சாதனைக்கடுத்த காரியங்களை ஊன்றிப்பேசுதல்.** இவ்விஷயத்தில் போதனையில் இந்தியா ஜப்பானை மிஞ்சிவிடும். சாதனையில் ஜப்பான் இந்தியாவை மிஞ்சிவிடும். இந்தியாவில் சீர்திருத்தம் ஏட்டுச்சுரைக்காய், ஜப்பானில் கொடிச்சுரைக்காய். இந்தியாவில் பேச்சு அதிகம், ஜப்பானியரோ பேசுவது மாத்திரமல்ல; சாதித்தும் முடிப்பார்கள். நாம்

ஜப்பானிடமிருந்து சில காரியங்களைக் கற்போம். நம் முன்
னோரிடமிருந்து பெற்ற சுதந்தரத்தையும் மறவாதிருப்போம்.
கைத்தொழில்விஷயமான சீர்திருத்தங்களை உண்டுபண்ணும்
படி பிரயாசப்படுவோம். ஆனால் இந்தியாவின் விசேஷம்
அதன் பக்தி யென்பதையும் தேவன் உலகத்தில் அதை
வைத்திருக்கிற நோக்கம் ஆவிக்குரியது என்பதையும் மறக்
கொண்ணாது. ஆனால் இந்த நோக்கத்திற்கும் கைத்தொழில்
விஷயமான சீர்திருத்தத்திற்கும் விரோதமில்லை. பாடசா
லைகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற தர்க்கசங்கங்களினாலா
இந்தியாவில் சீர்திருத்தம் வரப்போகிறது? யதார்த்தமாய்
யோசனைபண்ணி உற்சாகமாய் உழைப்பதனால்மாத்திரம்
வரும். பூர்வீகத்தில் ஜப்பானில் இருந்ததுபோலவே அநே
கர் கைத்தொழிலைக் கேவலமாய் எண்ணுகிறார்கள். நாம்
சித்திபடையவேண்டுமானால் வேலை செய்யவேண்டும்.

நம்மின் ஆசிரியருடைய சிறந்த போதனையை மனதில்
வைப்போமாக. யோக்கியமான வேலை எதென்றாலும் இக
ழப்படத்தக்கதல்ல. யூதருக்குள்ளிருந்த போதியான ஒரு
வழக்கத்தை மனதிற்குக் கொண்டுவருவோம். அவர்கள்
ஒவ்வொரு சிறுவனுக்கும் பன்னிரண்டு பதின்மூன்று பிரா
யம் தொடங்கிக் கைத்தொழில் ஒன்று கற்றுக்கொடுத்தார்
கள். யேசு தச்சன், பவுல் அப்போஸ்தலன் கூடாரஞ்செய்
யும் தொழிலாளி. அமெரிக்கக் கைத்தொழில் முயற்சியில்
மேன்மேலும் திரண்ட செல்வம் கட்டியதும் அதிக
கஷ்டத்தோடே வந்ததென்பதையும் ஞாபகத்தில் வைத்துக்
கொள்ளுவோம். சீமான்களின் புத்திரர் வர்த்தகசாலை
யிற் போய் முகங் கறுக்க கைகாய்க்க வேலைசெய்கிறார்கள்.
வேலைசெய்பவன் ஒருவனையும் கன்னியக்குறைவாய் எண்
ணுகிறதில்லை. அமெரிக்காவின் பிரஜாதிபதிகளில் அநேகர்
ஏழைகளாயிருந்து, தங்கள் கைகளால் வேலைசெய்து சுய
முயற்சியால் அப்பதவிக்கு வந்தவர்கள். லிங்கன் தண்
டவாளம் பிளக்கிறவர், கிராண்ட் சமுசாரி. கார்பீல்ட்டு
ஏழைப்பையன்.

கிழக்கு மேற்கு என்ற பத்திரிகையில் ஓர் இந்து எழு
துகிறதாவது:—"நமக்கு இரத்தசாக்ஷிகள் அல்ல, வேலை



செய்கிறவர்களே வேண்டும். படிப்பும் பழமுமுள்ள வாலிப
ரிற் சிலர் ஜனசங்கங்களில் இரத்தசாக்ஷிகளாகத் தங்க
ளைக் காட்டிக்கொள்வதிலும் சிலர் கல்விக்காகவும் சிலர் ஜன
சங்கத்துக்கடுத்த சீர்திருத்தம் செய்வதிலும் சிலர் மார்க்
கவூழியத்திலும் சிலர் தேசத்தில் சாஸ்திரப்பயிற்சி கைத்
தொழில்முயற்சி இவைகளிலும் உழைப்பார்களேயாகில்
இந்தியாவின் தேர்ச்சி பலம்பெற்று சுய அரசாட்சிக்கு
நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கும்."

தற்காலத்தில் அத்தியாவசியமாயிருக்கிற கைத்தொழிற்
பயிற்சியைப்பற்றி ஜேம்ஸ் சாஸ்திரியார் சொல்லுகிறதா
வன்னவென்றால், "அவர்கள் வர்த்தகத்தில் சாமர்த்தியமு
டைய ஜனங்களும் தற்காலத்தில் இருப்பவர்களிலும் வித்தி
யாசமான புத்தி நுட்பமுடைய நகரவாசிகளுமாவார்கள்.
அப்படிப்பட்ட பயிற்சி உற்றுக் கவனிக்கும் வழக்கத்தையும்
காரியாதிகளை நடப்பிப்பதில் திட்டவட்டத்தையும் பிறப்
பிக்கிறதுமன்றி யதார்த்தம், பிறர்பேரிற்சாராமை முதலிய
நல்ல வழக்கங்களையும் உண்டாக்குகிறது."

ஜப்பானில் செய்கிறதுபோல பயிற்சிக்காக நம்முடைய
மாணாக்கரில் அநேகரைப் புறத்தேசங்களுக்கு அனுப்பவேண்
டிவரும். கைத்தொழிலும் விவசாய சாஸ்திரமும் அதிக
கவனத்தோடு கற்பிக்கப்படவேண்டும். புதிதான தொழில்
கள், புதிதாய்ச் சாமான்கள் செய்தல், புதிதான [illegible]
முயற்சிகள் அதிகம் செய்யப்படவேண்டும். [illegible] ஒருவர்மேல்
ஒருவருக்குள்ள நம்பிக்கை அதிகரிக்கவேண்டும். வியாபா
ரத்திலோ உத்தியோகமுறையிலோ நாட்டுடைய ஜீவியத்தி
லோ ஒருவருக்கொருவர் காட்டவேண்டிய யதார்த்தம் அதி
கரித்து அதின்மூலமாய் நம்பிக்கை யுண்டாகவேண்டும்.
பேசப்படும் ஒவ்வொரு அசத்தியமும் இந்தியாவின் சுயா
தீனத்தைத் தாமதப்படுத்துகிறது. முதலைப்போட்டு வியா
பாரம் செய்யவேண்டும். பணத்தைக் கட்டிவைக்கலாகாது.
ஆஸ்தியைக் குவித்து வைக்கிறதும் நகைக்காக மிகுந்த
பணம் செலவு செய்கிறதும் இந்தியாவின் தரித்திரத்திற்கோர்
காரணம். அது இந்தியாவின் நன்மைக்காக உபயோகிக்கப்

படாததால் புதைக்கப்பட்டதாலந்து, குடித்தனமாய்ச் செலவு செய்யும் வழக்கம் உண்டாகவேண்டும். நாம் கடன் வாங்கப்படாது. மீதம் பண்ணவேண்டும். கலியாணத்தின் நிமித்தமாவது சடங்கு சாஸ்திரங்களின் நிமித்தமாவது வீண் செலவு செய்கிறதை நிறுத்தவேண்டும். வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்யப்படாது. சுருக்கமாகச் சொன்னால் நம்முடைய தன்மைக்கொத்ததும் சாதனைக்கடுத்ததுமான காரியங்களை விர்த்திபண்ணவேண்டும். கைத்தொழில் விஷயமான சங்கதிகளை அதில் ஆழ்ந்து யோசித்துவரவேண்டும். நாம் வேலை செய்யவேண்டும்.

(4) சம அந்தஸ்து. ஐப்பான் பிரிவினையுடையதாயும் ஜாதிபேதத்தால் பிடிக்கப்பட்டதாயும் இருந்தால் நாகரிகமான தேசங்களில் அதற்கு முதல்ஸ்தானம் கிடைக்கமாட்டாது. ருஷியாவை ஜெயித்திருக்கவும் மாட்டாது. சமாதான காலங்களிலும் மற்றைய தேசத்துடன் போடும் பந்தயத்தில் வெற்றி பெற்றிருப்பதும் அசாத்தியம். ஒற்றுமையிற்றான் பலமிருக்கிறது. பெஞ்ஜமின் கிட் என்பவர் எழுதிய 'மேற்கத்து நாகரிகங்களின் பிரமாணம்' என்னும் நூலில் சொல்லுகிறதாவது: "தற்காலத்திய குடியரசில் மூலப்பிரமாணமென்னவென்றால், எல்லாரும் சம அந்தஸ்துள்ளவர்" என்பதே. ராஜாங்கவிஷயத்தில் முன்னேறவேண்டும் என்ற இலக்கத்தில் கடந்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளாய் மெய்யாகவே இந்தக் கொள்கையை மற்றெல்லாவற்றிற்கும் நடுநாயகமாக வைத்து வந்திருக்கிறார்கள். மேற்கத்திய உலகத்தில் நெடுநாளாகவிருக்கும் இயக்கத்திற்கு இதுவே ஆதாரம். இது ஜனங்களைக் கட்டியிருந்த கட்டுகளை அறுத்து ராஜாங்கவிஷயத்தில் அதிகாரம் உடையவர்கள் ஆக்கிற்று.

நமது தேசத்தில் சீர்திருத்தக்காரரில் முதன்மைபெற்ற அநேகர் ஒற்றுமைக்குத் தடையாயும் இந்தியாவின் முன்னேற்றத்துக்கு இடறுகட்டையாயும் இருக்கிறது நமக்குள்ளிருக்கும் ஜாதிபேதந்தான் என்று நம்புகிறார்கள். ஒவ்வொரு தேசத்திலும் அந்தஸ்துபேதம் உண்டென்பது வாஸ்தவமேயாயினும், ஒளியடைந்து வந்திருக்கிற அநேக தேசங்களில்



நகரபரிபாலன பாத்தியமும் கல்வி முதலிய விஷயங்களில் விர்த்தியடைவதற்கு சமதருணங்களும் தாங்கள் என்ன வேலை செய்யலாம் என்பதைத் தாங்களே தெரிந்துகொள்ளும் சிலாக்கியமும் ஜனசங்கத்தின் பற்பல அந்தஸ்தையும் அடைந்துகொள்ள ஹேதுவும் உண்டாயிருக்கிறது. ஒவ்வொருவனும் இவ்வளவு பெருமைக்கு உள்ளவன் என்பதையும் ஒவ்வொருவனுக்கும் சுயாதீனம் உண்டென்பதையும் ஜனங்கள் அறிந்திருப்பதினால் தேர்ச்சியுண்டாகும் என்ற நம்பிக்கைக்கு இடமிருக்கிறது. இந்தியாவில் ஒருவனுடைய நிலைமை இவ்வளவுதான் என்று அறியக்கூடாத வண்ணம் ஜாதிபேதமானது அவனை அமிழ்த்திக்கொண்டிருக்கிறது. ஓர்காலத்தில் ஜாதிபேதமானது இயற்கையாய் உண்டானது, அதினால் ஒரு பிரயோசனம் இருந்தது என்றாலும் ஆரம்பத்தில் தொழில்காரணமாக உண்டான சபைகளும் சங்கங்களும் ஜாதிகளாகிக் கெட்டியாய் நின்றுகொண்டன. ஜனசங்கங்களின் விர்த்தியைத் தடுத்து, கடைசியில் என்றும் நிலைக்கிற பகைமேல் நிறுத்திக்கொண்டது. நம்முடைய முன்னேற்றத்துக்கு இடையூறாயிருப்பது ஜாதிதான் என்று ஜனங்கள் இப்போது அறிந்துவருவது மனதிற்கு எவ்வளவு சந்தோஷமும், நம்பிக்கைக்கு இடமானதுமாயிருக்கிறது. முதன்மைபெற்ற ஒரு [illegible] கூறும் வார்த்தைகளைக் கேளுங்கள், இவ்வார்த்தைகள் மற்றோர் மனதைச் சரியாய்க் காட்டக்கூடியதாயும் அந்தக்காலத்துக்கடுத்த நம்பிக்கை நிறைந்ததாயுமிருக்கிறது.

மாதவையா சொல்லுகிறதைக் கவனியுங்கள். "ஜாதி என்னும் ஏற்பாடு சில அநுகூலங்களுக்கு ஒருகாலத்தில் உதவி செய்திருக்கிறது என்பதை ஒத்துக்கொள்வோம். ஆனால் [illegible] சிலருடைய தீங்கான அடிமைத்தனத்துக்கும் அவர்கள் மூழ்கியிருக்கிற பிசேலச்சத்தனத்துக்கும் இதுவே உத்தரவாதியாயிருக்கிறதென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஜாதியானது தற்காலத்தில் இருக்கிறபிரகாரம் அதினால் யாதொரு நன்மையும் வரக்கூடியதில்லையென்றும் பற்பல விஷயங்களில் அளவிடக்கூடாத தீமையுண்டாகிறதென்றும் பலமிருக்கும்போதே தீமையை அறுத்தெறிந்துவிட

டாலன்றி நம்மை அமிழ்த்திக் கொல்லும் பெரிய பாரமாக நம்முடைய கழுத்திலே தொங்குகிறதென்றும் தெளிவாயறிந்திருக்கிறோம். இவ்வளவு பிரமாண்டமான தேசத்திலுள்ள கோடிக்கணக்கான ஜனங்களைச் சொற்ப ஜனங்கள் (ஆங்கிலேயர்) எவ்வளவு சுலபமாயாளுகிறார்களென்பது புறத்தேசத்தாருக்கு ஆச்சரியமாய்த் தோன்றவில்லை. ஜாதியென்பது பலித்த பிசாசு. வேதா ஒருவழியாய் அதை மேற்கொள்ளும்வரையிலும் இந்தியா ஒற்றுமைப்படுவது கூடாதகாரியம். இந்தத் தேசத்தின் மெய்யான பிள்ளைகளாகிய தாழ்ந்த ஜாதியின் நிலைமை என்ன? ஆரியரும் திராவிடரும் பலாத்காரமாய் அவர்கள் தேசத்தைப் பிடுங்கிக்கொண்டு அவர்களைக் காடுகளுக்கு வெருட்டிவிடுமுன் அவர்களுக்கே இது ஆதீனமாயிருந்தது. உலகத்திலே நியாயம் என்பது ஒன்று உண்டானால் இந்தியா இவர்களுக்கே சொந்தமாகவேண்டும். மேல்நாட்டுக் கல்வியும் நாகரிகமும் வந்து ஒரு நூற்றாண்டுக்கு மேலாகிறதே அவர்களுடைய நிலைமை என்ன? அனாத்தனத்தார் அடிமைத்தனத்தை அகற்றினார்கள். கிறிஸ்தவ மிஷனரிகளிடத்திலிருந்து சிலர் தீக்ஷை பெற்றிருக்கிறார்கள். ஆங்கிலேயரோடு சம சிலாக்கியம் வேண்டுமென்று மல்லுக்கு நிற்கிற கல்வியும் வெளிச்சமும் அடைந்திருக்கிற தேசாபிமானிகள் இவர்களுக்காக என்ன செய்திருக்கிறார்கள்?"

ஐரோப்பியருடனே சகோதரத்துவம் சம அந்தஸ்து என்ற பிரமாணத்தின்பேரில் நாம் கேட்கிற பாத்தியதையைப் புறம்பாக்கப்பட்டிருக்கிற இவர்களுக்கு நாம் கொடுக்கவேண்டியது நியாயமல்லவா? ஜாதியிருக்குமட்டும் பிரிவினையாயிருக்கிற இந்தியாவுக்கும் புறத்தேசத்தார் பயப்படவேண்டியதில்லை. நாம் ஏன் ஒருமைப்படக்கூடாது. சீர்திருத்தக்காரரின் சத்தத்துக்கு ஏன் செவிகொடுக்கிறதில்லை. நாம் பிரசங்கிக்கிறபிரகாரம் ஏன் அப்பியாசிக்கக்கூடாது?

கேசவ சந்திரசேனர் சொல்லுகிறதாவது, இந்தியாவிலிருக்கிற ஜாதியானது ஜனசங்கவிஷயத்தில் ஒரு பயங்கரமான கோலாகவிருக்கிறது. அன்னியோன்னிய ஒற்றுமை பொருத்தம் சந்தோஷ முதலியவற்றை முற்றிலும் தவிர்த்து



இனிமேல் உண்டாகலாமென்னும் நம்பிக்கையைக் கெடுத்து அநேக நூற்றாண்டுகளாக ஜனசங்கத்துக்கடுத்த சேர்க்கைக்கு எதிரிடையாயிருந்து வந்திருக்கிறது. "ஹிந்து தேசாபிமானி"யின் பத்திராதிபர் காலஞ்சென்ற ம-௱-௱-ஸ்ரீ கிறிஸ்தோதாஸ் பால் தம்பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறார். "ஜனங்களை ஒடுக்கி வருத்தும் ஜாதி என்னும் ஏற்பாடு தொலையும் வரையிலும் இந்தியா ஒருகாலும் மறுபிறப்படையப் போகிறதில்லை."

ராஜாங்கத்துக்கடுத்த சுயாதீனம் கிடையாது. அடிமைகளாயிருப்பதற்கு வேர் ஜாதியே, பண்டித சிவநாத சாஸ்திரி தன் உபந்நியாசத்தில் சொல்வதாவது, "(1) ஐக்கியக் குறைவையும் பொருத்தமின்மையையும் விளைவித்திருக்கிறது. (2) யோக்கியமான கைத்தொழிலை இழிவாயெண்ணும்படி செய்தது. (3) உள்நாட்டுப் புறநாட்டு வர்த்தகத்தைத் தடுத்தது. (4) விவாக சம்பந்தங்களைச் சிறுவட்டத்துக்குள்ளேயே செய்துகொள்வதினாலே தேகபலம் குன்றும்படி செய்திருக்கிறது. (5) எந்த விஷயத்திலும் பழைய வழக்கப்படி என்று சொல்லும்படி ஆயிற்று. (6) ஒரு மனுஷனுடைய திறத்தையாவது குணவிசேஷங்களையாவது விருத்தி செய்ய இடமில்லா நிலைமையில் வைத்தது. (7) சிசு விவாகம், பெண் மாப்பிள்ளைகளுக்கு [illegible] பேசுதல் முதலிய கெட்ட வழக்கங்களை [illegible] விர்த்திபண்ணி விட்டது. (8) ஏகஜனமாக விருப்பதினாலுண்டாகும் மதிப்பை விர்த்திபண்ணுதபடி செய்து சிலருக்குமாத்திரம் மனோபயிற்சியும் ஆன்மபயிற்சியும் உண்டாகும்படியாயும் ஏனையரான தாழ்ந்த ஜாதிக்கு அவ்வித பயிற்சி கிடைக்காதபடிக்கும் பண்ணிவிட்டதினால் தேசத்துக்குப் பெரிய கஷ்டத்தை உண்டாக்கியிருக்கிறது. (9) ஆண்மையிருந்ததையும் அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தி புறத்தேசத்தாருக்கு நம்மை அடிமைகளாக்கிவிட்டது."

சதுர் வேதத்தில் ஜாதி என்னும் ஏற்பாடு கிடையாது. பிந்தியகாலத்தில் உண்டானது. பிராமணன் சர்வ சுதந்தரம் பாராட்டுகிறதும் பஞ்சமருக்கு முன்னேறும் வழி இல்லையென்

பதுமாயிருந்தால் இந்தியாவின் தேர்ச்சியின் வாயில் மண் விழுந்தது. தங்களின் முன்னேற்றத்துக்காவது புறம்பேயிருக்கிற சத்துருவை எதிர்க்கவாவது இந்தியா ஒருகாலும் ஒற்றுமைப்படப் போகிறதில்லை. இந்தியா முன்னுக்கு வரவேண்டுமானால் ஜாதி தொலையவேண்டும். ஒரே இரத்தத்தினால் பந்தப்பட்டவர்களாக இந்தியாவின் தேசம் மேலிட்டு நாம் எழும்புவோம்.

(5) ஸ்திரீகளின் நிலைமை. ஜப்பானில் புத்தமதத்தின் செல்வாக்கினாலே நியாயமாய் ஸ்திரீகளுக்குக் கிடைக்கவேண்டிய இடத்தை ஜனங்கள் கொடுக்கவில்லை. "ஸ்திரீகள் புருஷரின் விளையாட்டுச்சாமான். பிள்ளைபெறுவதும் புருஷர்களுக்காக அவர்களை வளர்ப்பதுமே ஸ்திரீகளின் கடமை" என்று அவர்கள் சொன்னார்கள். மனுதர்ம சாஸ்திரத்தில் சொல்லியதுபோல தகப்பன் புருஷன் மகனாகிய மூவருக்கும் ஸ்திரீ கீழ்ப்படியக் கடமைப்பட்டவள். விதவை விவாகம் செய்யப்படாது. மேற்கத்து நாகரிகம் வந்து புது ஆவி அவர்களில் பிரவேசிக்கவே ஜப்பானிய ஸ்திரீகளுக்கு கல்வியும் உயர்ந்த பதவியும் கிடைத்தது. ஜப்பானியருடைய புத்தகங்களிலிருந்து கணித்தபடி பள்ளிக்கூடத்துக்குப் போகத்தக்க வயதுள்ள பிள்ளைகளில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் பாரிய பாடசாலைகளில் படிக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் ஸ்திரீகளில் ஆயிரம்பேருக்கு ஏழுபேர்மாத்திரம் எழுத வாசிக்கக் கூடியவர். இந்த விஷயத்திலும் மற்றவர்கள் செய்யட்டுமென்று நாம் சலனமற்றிருப்பது சரியல்ல. உடனே எல்லா ஸ்திரீகளுக்கும் விசேஷமாக நம்முடைய குடும்பத்திலுள்ள பெண்களுக்கும் கல்வி கற்பிப்போமாக.

சிசுவிவாகத்துக்கு ஜப்பானில் இடங்கிடையாது. ஏனென்றால் சிறுவர் சிறுமிகளைப் பாடசாலையிலிருக்கும்போதே தாய் தகப்பன்மார் ஆக்குவதினால் ஜனங்களின் தேகபலம் மனோபலம் சன்மார்க்கபலம் இவை குன்றிப்போகிறது. ஜப்பானில் கிறிஸ்தவரல்லாத பெண்கள் 16 வயதிலும், கிறிஸ்தவ பெண்கள் 18--20 வயதிலும், ஆண்கள் 20–25 வயதிலும் கலியாணம் செய்கிறார்கள். சட்டப்படி பெண்கள் 15 வய-



திலும், ஆண்கள் 17 வயதிலும் விவாகம் செய்யலாம். எவ்வளவுகாலத்துக்கு நாம் சிசுவிவாகம் தவறென்று சொல்லிக்கொண்டே அதைச் செய்துகொண்டுவருவோம்? மேலும் ஜப்பானில் விதவா விவாகத்தை ஆகாதென்று தீர்த்து அவர்களை ஏகாந்திகளாயிருக்கும்படியாய் விடவில்லை. ஸ்திரீ புருஷர்கள் தங்கள் விவாக சம்பந்தத்திலிருந்து விலகிக்கொள்ள இடமுண்டு. ஸ்திரீகள் அடையவேண்டிய பூரண நிலைமைக்கு இன்னம் வரவில்லை. ஆனால் தாரமிழந்தவனுக்கென்ன பாத்தியதை உண்டோ அந்த பாத்தியதை விதவைக்குமுண்டு.

ஜப்பான் தேசத்து ஸ்திரீகளுக்கு சமமான 12½ கோடி விதவைகளும், அவர்களில் பத்துவயதுக் குட்பட்டவர்கள் 100,000 பேர்களும், இனி யொருகாலத்திலும் கலியாணம் செய்ய இடம்பெறாத ஐந்துவயதுக் குட்பட்ட விதவைகள் 20,000 பேர்களுமிருக்கிறார்களென்பதை எண்ணிப்பாருங்கள். அவர்கள் ஜீவியத்தின் கஷ்டம் சகிக்கமுடியாமல் அவமானத்துக்கிடமான துன்மார்க்க ஜீவியம் பண்ணும்படியாய் அவர்களுக்குச் சோதனையுண்டாகாதா வென்பதை யோசிக்குங்கால் இந்தியாவின் சீர்திருத்தம் எத்தனைமட்டுக்கு அவசியமானது என்று தெரியவரும். இந்தியாவில் நாலு கோடி ஸ்திரீகள் ஜீவாந்தரக் கைதிகளாக மகிழ்ச்சியைத்தரும் சூரியப்பிரகாசத்தையும் பார்க்கக்கூடாதபடி அந்தப்புரத்தில் அடைக்கப்பட்டிருப்பதை நாம் நினைக்கையில் சீர்திருத்தம் அவசியமென்று உணருகிறோம். இப்படிப்பட்ட சங்கதிக்கு ஜப்பானில் ஒரு நிமிஷம் இடங்கிடையாது. மேற்குத்தேசங்கள் ஒவ்வொன்றிலும் மனைவியை இழந்த புருஷரைப்போலவே விதவைகளுக்கும் பாத்தியமுண்டு. நாம் ஆண்தன்மையுடையோராய் நம்முடைய தாய்மாரும் மனைவிகளும் புத்திரிகளுமாகிய இந்திய ஸ்திரீகளுக்குத் தேவன் கொடுத்திருந்தும் நாம் கொடாது நிறுத்திவைத்திருக்கிற பாத்தியங்களைக் கொடுக்கக் கடவுள் கருணைபுரிவாராக.

(6) மார்க்க சுயாதீனம். அரசன் அறிவடைந்தவரும் ஜனங்கள் அறிவாளிகளுமாயிருப்பதால் தம்தம் மனச்சாட்-

சிப்பிரகாரம் எம்மார்க்கத்தையு மனுசரிக்கலாமென்று ஜப்பான் விளம்பரப்படுத்தியிருக்கிறது. தன் மனச்சாட்சியின் சத்தத்துக்கிசையக் கடவுளை ஆராதிக்கும்படி ஒவ்வொருவருக்கும் இடமுண்டு. ஒருவன் ஒரு நூதன மதத்தைத் தழுவினதினிமித்தம் துன்பஞ்செய்கிறதில்லை. ஜாதிக்குப் புறம்பாக்கவுமாட்டார்கள். ஏனென்றால் ஜாதி யென்பதில்லையே. மேற்கு ஜாதிகளுக்குள் ளிருக்கிறபிரகாரம் தான் எம்மார்க்க வனுசாரியா யிருக்கவேண்டுமென்பதை அவனவனே தெரிந்துகொள்ளுகிறான். புத்தியுள்ளவன் செய்வதுவே. ஒரே குடும்பத்தைச்சேர்ந்த பல அங்கங்கள் வெவ்வேறு மார்க்கத் தமைந்திருப்பதைக் காண்பது சகஜம். ஆயினும் அதினிமித்தம் குடும்பத்தில் சண்டை சச்சரவு கிடையாது. பூரண சமாதானமுண்டு. ஒரு மனுஷனுடைய மனச்சாட்சியைக் கட்டாயத்தினாலே ஒரு மார்க்கத்துக் கிணக்கிவிட்டால் அவன் மனுஷசித்தம் அற்றுப்போமல்லவா? மிலேச்சனாகிய ஹாட்டெண்டாட் அல்லது நரமாமிச பட்சணி யொருவன் தன் மார்க்கமாகிய பொருள் வணக்கத்தை விட்டுவிட்டு ஒரே தேவனுண்டென்னும் போதனையை ஏற்றுக்கொள்ளுவதும் அல்லது அதினுமேலான ஒரு கொள்கையை அனுசரிப்பதும் நல்ல ஒழுங்கென்று சொல்லுவோம். இந்தியாவின் பூர்வகுடிகள் தங்கள் மார்க்கத்தைவிட்டு அதினுமேலான போதனையடங்கிய இந்துமார்க்கத்தைத் தழுவுவது சரியென்று ஒத்துக்கொள்ளுவோம். அதேபிரமாணம் எல்லாவற்றிலும் கைக்கொள்ளப்படவேண்டுமென்ற புத்தி ஜப்பானுக்குப் பிடிபட்டிருக்கிறது. ஒருவன் பெரிய மனுஷனாகவேண்டுமானால் சுயாதீனனாகவேண்டும். ஒருவனைக் கடந்த காலத்தோடு சேர்த்துச் சங்கிலியினால் கட்டுவதும் தேர்ச்சியைத் தடுக்கும்பொருட்டு இரும்புக்கம்பிகளை நாட்டுவதும் உலகம் முன்னேறிக்கொண்டே போகும்பொழுது ஒருவனுக்கு அப்பாத்தியதையை நீக்கிவைப்பதும் அல்லது சாஸ்திரமார்க்க ஆராய்ச்சியினால் புதுமையாய்க் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற காரியங்களை ஒருவன் ஏற்றுக்கொள்ளாதபடிக்குச் செய்வதும் ஒரு மனுஷனுடைய சுயவிர்த்தியையும் ஒரு ஜனத்தின் தேர்ச்சியையும் மழுக்கிப்போட ஏது



வாகும். மார்க்க சுயாதீனம் அடையும்வரையிலும் ஜப்பான் முன்னேறிவரவில்லை. சீனாவுங்கூட முன்னோர் வணக்கத்தை நிறுத்தவும் வருங்கால விர்த்திக்காக என்ன ஏற்பாடு செய்யலாமென்றும் யோசிக்கிறது. இந்தியாவும் சீனாவைப்போல வெகுகாலம் கடந்தகாலத்தோடு கட்டப்பட்டதாகவே இருக்கிறது. இந்தியாவில் மார்க்க சுயாதீனமிருப்பதாக பெருமையாய்ச் சொல்லிக்கொள்வதுண்டு. ஆனால் ஒரு பிராமணனோ, மகமதியனோ கிறிஸ்தவனாகிறதாயிருந்தால் நடப்பதென்னவென்று உங்களுக்குத் தெரியுமல்லவா? இதையா சுயாதீனமென்று சொல்லுவீர்கள். தற்கால நாகரிகத்தையும் இதையும் ஒத்துப்பாருங்கள். இதுவு மதுவும் ஒவ்வுமா? இனி நாம் துன்புறுத்தலையும் குருட்டாட்டமான எண்ணத்தையும் விட்டொழிவோமாக. ஒவ்வொருவனும் தன் புத்திக்கேற்ற மதத்தைத் தழுவி மேலானதென்று தான் நினைக்கிற காரியத்தைச் செய்வானாக.

ஜனசங்க விர்த்தி வாதத்தில் கிட் ஆசிரியர் தீர்மானமாய்க் காட்டியிருக்கிற தென்னவென்றால், மனுஷனுடைய விர்த்தியில் பிரதானமானது புத்திக்கடுத்த விர்த்தியல்ல, மார்க்கத்துக்கடுத்ததே. மார்க்கானுஷ்டானங்கள் செய்து மேலான சன்மார்க்கப் பிரமாணங்களை யுடையவர்களா யிருப்பவர்களே ஜெயம்பெறும் ஜாதிகள். "குடும்ப ஜீவியம் எவ்வளவு சுத்தமோ, வியாபாரத்தில் எவ்வளவு யதார்த்தமோ, சன்மார்க்கம், பரோபகாரம், மனோதைரியம், தன்னடக்கம் எவ்வளவோ அவ்வளவுக்குத் தக்கதாய்த்தான் ஒரு ஜாதிக்கு வாழ்வுண்டாயிருக்கும்" என்று லெக்கி ஆசிரியர் காட்டுகிறார். சன்மார்க்க யதார்த்த விர்த்தியும் மார்க்க சுயாதீனமுமே இந்தியாவின் பிற்கால முன்னேற்றத்துக்கு மூலக்கல் என்று நம்புகிறோம்.

சத்தியம் ஜனங்களுக்குப் பொதுவான சொத்து. தேவனால் பூரணமாய் வெளிப்படுத்தப்பட்ட அல்லது மனிதனுக்கு எப்படியோ கிடைத்த ஒரு சத்தியம் உண்டானால் அது சர்வ லோகத்துக்கும் பொது என்னும் முத்திரை பெற்றதாயிருக்கவேண்டும். யாவருக்கும் பொதுவான சொத்தாக

வேண்டும். ஏதொரு கொள்கை, விசுவாசப்பிரமாணம், மார்க்கம் தனித்தனி ஜாதிக்கென் றேற்படுத்தப்பட்டதோ அது தற்சமயத்திற்கென்று உண்டாக்கப்பட்டதாயும் காலத்தால் மட்டுப்படுத்தப்பட்டதாயு மிருக்கிறது. ஒன்றில் அதைச் சர்வஜனத்திற்கும் ஏற்றதாக்கவேண்டும் அல்லது சர்வஜனத்திற்கும் ஏற்ற வேறொரு மார்க்கத்தைத் தேடவேண்டும்.

**(7) ஆசியா தூக்கம்விட் டெழுந்திருக்கிறது.** கண்டங்களில் பெரிது ஆசியா. ஜனத்தொகையிலும் அதுவே பெரிது. தென் அமெரிக்காவின் ஜனத்தொகை 36,000,000; வட அமெரிக்கா 100,000,000; ஆபிரிக்கா 150,000,000; ஐரோப்பா 310,000,000; ஆசியாவின் ஜனத்தொகை 850,000,000. இது உலகத்தின் ஜனத்தொகையில் பாதிக்கு அதிகம். புத்தமார்க்கமானாலும் இந்துமார்க்கமானாலும் மகமதுமார்க்கம் என்றாலும் கன்பூஷிய மார்க்கமென்றாலும் கிறிஸ்துமதமானாலும் உலகத்திலுள்ள எந்த விசேஷமார்க்கமும் இதிலுற்பத்தியானது. பூர்விக நாகரிகத்தின் பிறப்பிடமும் மார்க்கங்களின் பிள்ளைத்தொட்டிலும் மேற்கத்தியருக்கு வித்தியாபாசகரும் ஆசியாவே. ஆனால் மேற்கத்திய தேசம் வழக்கமாகிய இருப்புவிலங்கைக் கழற்றி எறிந்துவிட்டுக் கிறிஸ்துமார்க்கத்தின் ஜீவியையும் சாஸ்திரவிகிதமான ஆராய்ச்சியின் பயனையும் நாகசங்கவித்தையமான முன்னேறுதலையும் பெற்று முதன்மையாய் வந்துவிட்டது. ஆசியாவின் மறுஜனனம் [illegible] வந்திருக்கிறது. ஜப்பான் விழிப்படைந்திருக்கிறது. நூற்றாண்டுகளாகத் தூங்கிக்கொண்டிருந்த சீனா விழித்தெழும்புகிறது. கொரியா புதிதாய்க் கட்டப்பட்டுவருகிறது. பிலிப்பியன் தீவார் அறிவடைந்து வருகிறார்கள். பாரசீக சுயாதீனம் பேறுகாலவலியில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. துர்க்கியின் நூதன ஏற்பாடுகளினால் ஆசியாவிலுள்ள மகமதியர் நன்மை அடைகிறார்கள். சந்நியாச தேசமாகிய திபேத்து அதன் தேசசரித்திரத்தில் முதற்றடவை தன் கதவைத் திறந்துகொண்டிருக்கிறது. தொன்றுதொட்டு கீர்த்திபெற்றதாயிருக்கிற இந்தியா அதன் வருங்காலம் முன்னிலும் மேலான நிலைமையை யடையுமாறு தூக்கம் கலைந்துவருகிறது. தேர்ச்சியாகிய நீரோட்



டத்தில் நாமும் சேர்ந்தோடுவோமாக. திறந்த மனதையுடைய ஜப்பானிடத்திலிருந்து பாடம் படித்துக்கொள்ளுவோம். எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்வோமாக. பழமையானதானாலும் நன்மையானதை வைத்துக்கொள்ளுவோம். பழையதோ புதியதோ நம்முடையதோ பிறருடையதோ எதுவென்றாலும் நன்மையு முண்மையுமானவற்றை வைத்துக்கொள்வோமாக.

விசாலமான ஆசியாகண்டம் விழித்தெழும்புகிறது. இந்தியாவுக்குப் புதிதான ஜீவியநாடி அடிக்கிறது. இப்பொழுது தருணத்தைப் பற்றிக்கொள்வோமாக. புருஷராயிருந்து பராக்கிரமம் பாராட்டுவோம். இழிவான தன்னயத்தையும் அற்ப சொற்பப் பிரிவினைகளையும் நம்மை விலங்குபோற் கட்டிக்கொண்டிருக்கிற வழக்கங்களையும் விட்டொழிவோம். இந்தியாவுக்கு இஃதோர் தருணம். உண்மையான மக்களாக நாம் தாய்சொல்லைக் கேட்டு எழுந்திருப்போமாக.

வந்தே மாதரம்.

தனித்தியானத்துக்கும், வகுப்புப் பாடத்துக்கும் ஏற்ற

## வினாக்கள்.

### I. ஜப்பான் தேசம்.

1. ஜப்பான் தேசத்தின் விஸ்தீரணத்தையும் ஜனத்தொகையையும் இந்தியாவின் விஸ்தீரணத்தோடும் ஜனத்தொகையோடும் ஒப்பிடுக. இந்தியாவின் பற்பல மாகாணங்களின் விஸ்தீரணத்தோடும் ஜனத்தொகையோடும் ஒப்பிடுக.

2. ஜப்பான் படத்தையும் இந்தியா படத்தையும் வைத்துக்கொண்டு அவற்றின் அக்ஷரேகை (Latitude)களையும், இயற்கையமைப்பையும் கவனிக்க. ஒற்றுமை வேற்றுமைகள் என்ன?

3. ஜப்பான் எப்படி உண்டானது? ஜப்பான் தேசத்தின் உற்பத்திக்கும் அதன் தன்மைக்கும் உள்ள சம்பந்தத்தைக் கவனிக்க. அதின் எரிமலைகளாலும், பூகம்பங்களினாலும் வந்த பலன் என்ன?

4. ஜப்பான் தேசம் சமுத்திரத்திலே பாதி மறைந்திருக்கிற ஒரு மலைத்தொடராகையாலே, அதன் இயற்கைக் காட்சிகள், ஆறுகள், துறைமுகங்கள், விவசாயம் என்பன என்ன நிலைமையிலிருக்கின்றன?

5. ஜப்பான், இந்தியா என்னும் தேசங்களின் சீதோஷ்ண ஸ்திதிகளின் வித்தியாசத்தைப் பார்க்க. இதனால், ஜப்பானியரின் குணத்துக்கும் இந்தியரின் குணத்துக்கும் உள்ள வித்தியாசத்தையும் கவனிக்க.

6. ஜப்பான் இந்தியா தேசங்களின் தாதுவர்க்கங்கள், விளைபொருள்கள், இயற்கையாகவேயுள்ள அநுகூலங்கள் ஆகிய இவைகளின் ஒற்றுமை, வேற்றுமைகள் எவை?

7. ஜப்பான் தேசத்தின் சகல இயற்கையமைப்பையும் கவனிக்கும்போது, அது பிற்காலத்திலே எப்படிப்பட்ட தேசம் ஆகும் என்று சொல்லலாம்.

8. ஜப்பான் தேசத்தின் தாவரவர்க்கங்கள் தாதுவர்க்கங்களை ஜப்பானியர் உபயோகப்படுத்துவதைக் காணும் இந்தியர் அவர்களிடம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் என்ன?

### II. ஜப்பான் தேச சரித்திரம்.

1. ஜப்பான் சரித்திரத்தை எத்தனை பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்? இவற்றை இந்துதேச சரித்திரத்தின் பெரும் பிரிவுகளோடு ஒப்பிடுக.

2. ஜப்பானியரின் புராணக் கதைகளுக்கும் இந்தியாவின் புராண இதிகாசக் கதைகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் யாவை?

3. ஜப்பானிய இந்துதேச மெய்ச் சரித்திராரம்பங்களை ஒப்பிடுக.

4. ஜப்பான் பூர்வீகக் குடிகளின் குணலக்ஷணம் என்ன? தற்காலத்து ஜப்பானிய ஜனத்தின் உற்பத்தி என்ன?

5. ஜப்பான், இந்தியா, எகிப்து என்னும் மூன்று தேசங்களில் அதிபூர்வ சரித்திரமுடையது எது? இரண்டாவது எது? காலக்கிரமத்தின்படி இம்மூன்று தேசங்களின் சரித்திரமும் பார்க்க.

6. ஜப்பான் தேசத்திலே உம்பிளிக்கையாட்சி, ஏகசக்ராதிபத்தியம் என்பவைகளின் வளர்ச்சியை வர்ணிக்க.

7. ஜப்பானிலும் இந்தியாவிலும் பௌத்தமதம் பெற்ற கதி என்ன?

8. போர்த்துக்கேசியர், டச்சுக்காரர் மூலமாய் ஜப்பான் ஐரோப்பாவை முதலில் அறிந்தபோது, வந்த பலன்கள் எவை?

9. ஜப்பான் மேற்குத்தேச நாகரிகத்தை ஏற்றுக்கொள்ள நேரிட்ட காரணங்க ளென்ன?

10. முற்கால ஜப்பானுக்கும் தற்கால ஜப்பானுக்கும் உள்ள வித்தியாசங்கள் எவை? ஜப்பான் சமீப காலத்திலே அடைந்த விருத்திகள் எல்லாவற்றிலும் முக்கியமானது எது?

11. "உடன்படிக்கைச் சத்தியம்" (Charter Oath) என்பதின் தன்மை என்ன? அதனால் வந்த பலன் என்ன?

12. மேற்குத் தேசத்தின் கல்வியையும் நாகரிகத்தையும் ஜப்பான் தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டது எப்படி? மேற்குத் தேசங்களிலே எவ்வெத் தேசத்திலிருந்து எதெது ஜப்பான் பெற்றுக்கொண்டது?

13. மேற்கு நாகரிகத்தை ஜப்பான் பெற்றுக்கொண்டதினாலே கீழைத் தேசங்களுக்குள்ளே அதின் நிலைமை என்ன? ஜப்பானுக்கும் சீனவுக்கும் இதுவரையிலும் உள்ள சம்பந்த மென்ன? இனிமே லிருக்கக்கூடிய சம்பந்த மென்ன?

## III. ஜப்பான் தேசத்தார் பழக்க வழக்கங்கள்

1. ஜப்பான் ஜாதியாரின் குல லக்ஷண மெவை?

2. ஜப்பான் பூர்வீக ஜனசங்கத்தையும் இந்தியாவின் பூர்வீக ஜனசங்கத்தையும் ஒப்பிடுக.

3. தற்கால ஜப்பான் ஜனசங்க ஸ்திதிக்கும் இந்தியாவின் ஜனசங்க ஸ்திதிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

4. ஜப்பானியர் இந்தியர் என்னும் இரண்டு ஜாதியாரின் பழக்க வழக்கங்களை ஒப்பிடுக.

5. தற்காலத்திலே ஸ்திரீகளின் நிலைமை ஜப்பானிலே எப்படி, ஐரோப்பா அமெரிக்காவிலே எப்படி, இந்தியாவிலே எப்படி?



6. ஜப்பானியரின் குண லக்ஷணங்களிலே பத்துக் குணங்களைச் சொல்லுக. இந்தியரின் குணங்களுக்கும் இவைகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

7. ஜப்பான் விருத்தியடைந்ததற்கு மூன்று முக்கிய காரணங்கள் எவை? அவைகளிலிருந்து நாம் கற்றுக் கொள்ளக்கூடியது எது?

8. சுதேசாபிமானம் ஜப்பானிலே அனுஷ்டானத்திலே எப்படி விளங்குகிறது? இந்தியாவிலும் இப்பொழுது எப்படி விளங்கக்கூடும்?

9. பக்தி, சன்மார்க்கம் என்னும் விஷயங்களில் ஜப்பானியர், இந்தியர் என்னும் இரு ஜனங்களையும் ஒப்பிடுக.

10. ஜப்பானியரிடத்திலே உள்ள குறைவுகள் என்ன? அவர்களின் நற்குணங்களிலே சிறந்தது எது?

## IV. அரசாட்சி, கல்வி, வர்த்தகம்.

1. ஜப்பான் ராஜாங்கத்தின் விசேஷ லக்ஷணங்கள் எவை? அதனால் நாமறிந்துகொள்ளக்கூடியவை எவை?

2. எவ்விஷயங்களிலே ஜப்பான், இந்தியா தேசங்களின் நிலைமைகள் வித்தியாச முடையன? ஜப்பானிய சீர்திருத்தங்களில் எவ்வளவு நாம் இந்தியாவிலே அனுஷ்டிக்கலாம்?

3. ஜப்பானிய கல்வி ஒழுங்கைக் கவனமாய் ஆராய்க. அவைகளில் எவைகளை இத்தேசத்தில் அனுஷ்டிக்கலாம்?

4. இரு தேசங்களிலும் கல்வி விஷயமானவைகளுக்குகளில் எவ்வளவு வித்தியாசமுண்டு என்று பார்க்க.

5. இந்திய கல்வி விஷயமாய் அத்தியாவசியம் வேண்டிய மூன்று காரியங்கள் எவை?

6. விவசாய விஷயமாய் இந்தியாவையும் ஜப்பானையும் ஒப்பிடுக.

7. ஜப்பானிலே பாராமான ஏரிகள் இருப்பதற்குக் காரணங்கள் என்ன?

8. ஜப்பானிலே முக்கியமான கைத்தொழில்கள் எவை? ஜப்பானது செல்வத்துக்குக் காரணங்களென்ன?

9. இந்தியாவின் செல்வத்துக்கு முக்கியமான மூலம் எவைகள்? அவைகளை எப்படிப் பிரயோஜனப்படுத்தலாம்?

10. வியாபாரம் கைத்தொழில் விஷயமாய் ஜப்பானிடமிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்? இனிமேல் கைத்தொழில் விருத்தியாகும்படி இந்தியா எந்த வழியை அனுசரிக்கவேண்டும்?

11. இந்திய ஜப்பானிய அரசிறைக் கணக்குகளை ஒப்பிட்டுக் கவனிக்கும்போது படித்துக்கொள்ளும் பாடங்கள் என்ன?

12. ஜப்பான், இந்தியா, ஆசியாவின் வியாபாரம் இனிமேல் எப்படி இருக்கும் என்று காட்டும் குறிகள் என்ன?

## V. ஜப்பானியரின் மதங்கள்.

1. ஜப்பானிலுள்ள மதங்கள் எவை? அவைகள் ஒன்றோடொன்று எப்படிச் சம்பந்தப்பட்டிருக்கின்றன?

2. ஷிண்ட்டோ மதத்தை வர்ணிக்க. அது ஜப்பானியர் ஜீவியத்திலே என்ன காரியங்களை உண்டாக்கியிருக்கிறது?

3. ஜப்பானிலும் இந்தியாவிலும் பௌத்தமதம் செய்தது என்ன?

4. இரண்டு தேசங்களிலும் பௌத்தமதத்தின் தற்கால நிலைமை என்ன? பௌத்தம் க்ஷீண திசை யடைய நேரிட்ட காரணங்களெவை?

5. கன்பூஷிய மதத்தின் முக்கிய கொள்கைகள் எவை? இது சீனாவிலும் ஜப்பானிலும் செய்திருக்கிறது எது?



6. "புஷிடோ" (Bushido) என்பது யாது?

7. மேற்கூறிய மதங்களின் உயர்வு, தாழ்வுகள் எவை? எவ்விஷயங்களில் இவை குறைவுடையன?

## VI. ஜப்பானியரின் மதங்கள்—(முன் தொடர்ச்சி).

1. ஜப்பானிலே கிறிஸ்துமார்க்கத்தின் ஆதி சரித்திரம் என்ன? அதின் குறைவுகள் என்ன?

2. ஜப்பானிலே புரொட்டெஸ்டாண்டு மிஷன்களின் சரித்திரத்தைக் காலங் காலமாய்ப் பிரித்து எழுதுக. என்னென்ன காலத்தில் எவை யெவை நடந்தன?

3. வாலிப புருஷர் கிறிஸ்தவ சங்கத்தின் மூலமாய் ஜப்பானுக்கும் இந்தியாவுக்கும் வந்த நன்மைகள் எவைகள்?

4. ஜப்பானிலே கிறிஸ்துமார்க்கத்தின் முக்கிய பலன்கள் எவை?

5. மதவிஷயமாய் ஜப்பான், இந்தியா தேசங்களின் கணக்கை ஒப்பிடுக.

6. ஜப்பானிய கிறிஸ்துமார்க்கத்தின் விசேஷ குறிப்புகள் எவை?

7. ஜப்பானிலே விசேஷம்பெற்ற ராஜ்ய தந்திர நிபுணர்களும் உத்தியோகஸ்தர்களும் கிறிஸ்துமார்க்கத்தைக் குறித்துச் சொல்லும் சாட்சி என்ன?

## VII. ஒரு ஜப்பானிய தேசாபிமானி.

1. ஜப்பானியர் சுதேசாபிமான முள்ளவர்கள் என்பதற்குச் சில திருஷ்டாந்தங்கள் கூறுக.

2. ஜப்பானிலே சுதேசாபிமானம் எப்படி வளர்க்கப்பட்டு வருகிறது? அதின் பலன் என்ன?

3. நீஷிமாவின் சரித்திரத்தின் முதற்பாகத்திலே காணப்படும் விசேஷ குறிப்புக்கள் என்ன?

4. நீஷிமா அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் ஜீவித்த ஜீவியத்திலிருந்து நாம் என்ன பாடங்கள் கற்றுக் கொள்ளக்கூடும்?

5. ஜப்பான் தேசத்திலே நீஷிமா செய்த பெரும் நன்மைகள் எவை? அவர் சித்தியடைந்ததற்கு முகாந்தரம் யாது?

6. நீஷிமாவின் சரித்திரத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளக் கூடிய முக்கியமான பாடம் எது?

7. இந்தியாவின் மெய்ச் சுதேசாபிமானிகளுக்கு அத்தியாவசியம் வேண்டியது எது? மெய்ச் சுதேசாபிமானத்தை எப்படி வளர்க்கலாம்? இந்தியாவுக்கு எந்த வகையாய் மிகவும் பெரிய நன்மை செய்யக்கூடும்?

## VIII. ஜப்பான் இந்தியாவுக்குச் சொல்லும் செய்தி.

1. ஜப்பானிடம் இந்தியா கற்றுக்கொள்ளவேண்டிய முதலாவது பாடம் எது?

2. ராஜாங்க விஷயத்திலே பெரும் சுயாதீனம் பெற்றுக் கொள்ள ஆயத்தமாகும்படி முதலிலே ஜனசங்கத்திலே என்ன சீர்திருத்தம் மிகவும் அவசியம்?

3. எவனும் தன் கையினால் வேலைசெய்வது குறைவல்ல, மேன்மையே என்று அறிந்துகொள்ளும்படி, இந்தியாவிலே இன்றைக்கு அவசியமானது எது?

4. இந்தியாவின் செல்வத்தைப் பெருக்குவதற்குத் திட்டமாய் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரவேண்டியவை எவை?

5. இந்தியாவின் தற்கால தரித்திரத்துக்கு முக்கிய காரணங்கள் எவை? இத்தரித்திரம் நீங்க என்ன செய்ய வேண்டும்?

6. தேசத்திலே சகல ஜனங்களுக்கும் சர்வ சுதந்தரமும் கொடுப்பதினால் ஜப்பானுக்கும் மேற்குத்தேசங்



களுக்கும் வந்த பலன் என்ன? ஜாதி என்னும் ஆசாரத்தாலே இந்தியாவுக்கு வந்த பலன் என்ன? அதை நீக்குவது எப்படி?

7. ஸ்திரீகளின் நிலைமை ஜப்பானிலே இருப்பதற்கும் இந்தியாவிலே இருப்பதற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் எவை? இந்தத் தேசத்திலே ஸ்திரீகளுக்குச் சுதந்தரங்கள் விருத்தி செய்வதற்கு என்ன செய்யலாம்?

8. எல்லாச் சீர்திருத்தங்களுக்கும் பெருந் தடை எது? அதை எப்படி நீக்கலாம்?

9. ஜப்பானிலே மார்க்க சுயாதீனம் எவ்வளவு உண்டு? இந்தத் தேசத்திலே அது எப்படி வளர்க்கலாம்?

10. ஆசியா முழுமையும் தூக்கத்திலிருந்து விழித்திறது என்பதற்குக் காணப்படும் அறிகுறிகள் யாவை? எந்தெந்தத் தேசத்திலே இவை காணப்படுகிறது? இதனால் என்ன வரும்?

11. இந்தியா இப்படிப் பெரும் மாறுதலடையும் இக்காலத்திலே ஒரு கிறிஸ்தவன் கடமை என்ன?

12. ஜப்பானியரின் அதிபுனைத குணம் எது? இந்தியாவுக்கு அத்தியாவசியமானது எது? இது இந்தியாவுக்குக் கிடைக்கும்படி நீர் [illegible] செய்யப் போகிறீர்?

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1910.